என் நெஞ்சில் இடங் கொண்ட

# ஒரு பெரியார்


## - யோக சுவாமி -




சிவதொண்டன் சபை

யாழ்ப்பாணம்

முழுதும் உண்மை



எப்பவோ முடிந்த காரியம்

ஒரு பொல்லாப்புமில்லை

யாம் அறியோம்

மு. ஐங்கரன்

[illegible]

# என் நெஞ்சில் இடங் கொண்ட
# ஒரு பெரியர்

காவி உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல்
துறவு பூண்ட முனிபுங்கவர்

## கொழும்புத்துறை யோக சுவாமிகளின்

வாழ்வையும் வாக்கையும் பற்றிய
ஒரு சில குறிப்புகள்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
இல 234
கே கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

எழுதியவர்
திரு. மு. வைரமுத்து ஜே.பி.
முன்னைநாள் சி. சி. எஸ்.

சிவதொண்டன் சபை
யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| எழுதியது | 1974 | |
| வெளியிட்டது | 1980 | |
| முதற்பதிப்பு | 1980 | 500 பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | 1989 | 1000 பிரதிகள் |
| மூன்றாம் பதிப்பு | 1998 | 2000 பிரதிகள் |


பதிப்புரிமை : சிவதொண்டன் சபை

விலை ரூபா : 50/=

அச்சுப்பதிப்பு :

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

கொழும்பு.

## சேமமொடு வாழ வழி

உகந்து, மனங்குவிந்து, ஒன்றுக்கு மஞ்சாது,
அகந்தை, அவா, வெகுளி யகற்றிச் – சகந்தனிலே,
தாமரையிற் றண்ணீர்போற் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து.

– *யோக சுவாமிகள்*

ஓம்

# யோக சுவாமிகளின்
# திவ்விய மகாவாக்கியங்களிற் சில

ஒரு பொல்லாப்புமில்லை.

எப்பவோ முடிந்த காரியம் :

எண்ணாயிரம் வருடங்களுக்கு முன்னே
டெல்ஹி மாநகரிலே
செப்புத் தகட்டிலே
எழுதி வைத்தது.

முழுதும் உண்மை.

அது அப்படித்தான்.

நூதன மொன்றுமில்லை.

சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை.

காயமொரு சித்திரக் கோயில்.

# என் நெஞ்சில் இடங் கொண்ட ஒரு பெரியார்

## பொருளடக்கம்


| அத்தியாயம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | ௐ முதலாம் பதிப்புரை | Vi |
| | ௐ பதிப்பு முன்னுரை | Viii |
| | ௐ இரண்டாம் பதிப்பு முன்னுரை | Xi |
| | ௐ மூன்றாம் பதிப்பு முன்னுரை | Vii |
| | ௐ யோக சுவாமிகளின் தொண்டர்களது –ஆசீர்வசனங்கள் | Xii |
| 1. | வைத்தீஸ்வரன் கோயிற் சந்தி | 1 |
| 2. | வெள்ளவத்தைக் கடற்கரை | 2 |
| 3. | அற்புதமான முதல் தரிசனம் | 4 |
| 4. | சோதனையுஞ் சாதனையும் | 6 |
| 5. | இல்லத்திலமைந்த வழிபாட்டறை | 12 |
| 6. | பிரபஞ்சம் இறைவன் மார்பில் ஒரு –தங்கப்பதக்கம் | 16 |
| 7. | சீர்திருத்தவாதியும் சவர்க்காரக்கட்டியும் | 22 |
| 8. | எட்டிலும் எண்பதிலும் | 25 |
| 9. | விடுவானேன் பிடிப்பானேன் | 31 |
| 10. | மதியால் முடியாது | 36 |
| 11. | வேண்டுதல் வேண்டாமை இலாதார்க்குத் –தட்டுப்பாடேது? | 42 |
| 12. | துறவிக்கு உயர்வேது? தாழ்வேது? | 48 |
| 13. | கருணைக் களஞ்சியம் | 54 |
| 14. | துறவிக்கு வேந்தனும் துரும்பு | 60 |
| 15. | தாயினும் நல்ல தலைவன் | 63 |
| 16. | நூதனம் ஒன்றுமில்லை | 67 |
| 17. | குரு பக்தி | 74 |
| 18. | யாத்திரை முடிந்த இடம் | 79 |
| 19. | தவமும் தவமுடையார்க்கு | 81 |
| 20. | என் பிரார்த்தனை | 85 |

உ
சிவமயம்

## பதிப்புரை

நிலவுலகம் ஊழின் காரணமாகத் திருநிலையாகவும் தெளிநிலையாகவும் இரு வேறு வகைப்படும். திருநிலை இருளுடையது. தெளிநிலை ஒளியுடையது. அவ் ஒளியுடையவரே நிலவுலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்பவராவார். அந்த ஒளி வாழ்வின் வளப்பத்தால் அவர்களை நிலவுலகம் வானுறையும் தெய்வ முறையாக வைத்துப் போற்றும். அத்தகைய போற்றலில் நின்றவரே பெரியாராகிய யோக சுவாமிகள். அந்த முறை வகையிற்தான் அன்பர் திரு. மு. வைரமுத்து அவர்கள் சுவாமிகளைப் போற்றுகின்றார்.

வானுறையும் தெய்வத்துள் அன்று வைத்து எண்ணப்பட்ட சுவாமிகள் இன்று நமக்கு வானுறையும் தெய்வமாகியேவிட்டார். இதனால் சுவாமிகளின் அடிநிழலை ஒட்டி நின்ற அன்பர்கள் தம்மனத்தகத்து மணிவிளக்கான சுவாமிகளைச் "சிக்கெனப் பிடித்தோம்; எங்கெழுந்தருளுவது இனி" என்று அவரின் மறைமொழிகளையும் நிறைமொழிகளையும் மீள மீள நினைந்து அதனையே பற்றுக் கோடாகக் கொண்டு பரவுகின்றனர். அந்நிலையில் அமைந்தவர்களில் ஒருவரே அன்பர் திரு. மு. வைரமுத்து அவர்கள் எனில் மிகையாகாது.

இந்நூல், 'கடுகு சிறிது காரம் பெரிது' என்ற முதுமொழிக்கேற்ப விளங்குகின்றது. ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுவிட்டவர்களின் பெருமை எப்படி இருக்கும் என்பதை இந்நூல் தெட்டத் தெளிவாக்குகிறது. உள்ளொளியால் புறவெளி இருளினுள் நிகழும் நிகழ்வுகளைத் தெரிந்து தெளிந்துகொண்ட சுவாமிகளின் தெளிநிலைப் பெருமைகளை அன்பர் அவர்கள் மெய்ப்பாடோடு நமக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகும் வண்ணம் எழுதியுள்ளார்கள். அதாவது, இந்நூல் ஆன்மா தன் உள்ளொளியால் பரத்துவமாக நிற்கும் பெற்றியை அழகாக எடுத்துக்காட்டுகிறது என்பதாம். இன்னும் 'நூதனமொன்றுமில்லை' என்ற தலைப்புப் பகுதியைப் பொதுவாக முதியோரும் சிறப்பாக இளைஞர்களும் படிக்கவேண்டும். அன்பர் திரு.

மு. வைரமுத்து அவர்கள் அற்புதத்தைப் பற்றி சைவ சித்தாந்த நெறி முறையில் அதிற் சிந்திக்கின்றார். தான் கற்ற சித்தாந்த தத்துவஞானத்தைப் பிழிந்து தருகின்றார். இஃதொன்றே அவரின் சித்தாந்தப் புலமையை எடுத்துக் காட்டும். சிவயோகம் புரிந்துகொண்டிருந்த சுவாமிகளைச் சீவயோகம் புரிந்தவராக நாம் எண்ணக்கூடாது என்ற ஏக்கம் அப்பகுதியிலே தேம்பி வழிகின்றது. இந்தக் கருத்தோட்டத்தில் பெரியபுராணத்தை நாம் சிந்திப்போமாக. எனவே இந்நூல் வெளிவருவதால் யாழ்ப்பாண மக்களின் மரபுவழி வந்த தெய்வ சித்தத்தின் எச்சமாகச் சுவாமிகள் பிரதிபலித்து நின்றார்கள் என்பதனை யாவரும் நன்கு உணர்வர். இந்நூலை இளைஞர்கள் படிக்கவேண்டும் என்பது என் விருப்பம். அவ்விருப்பத்தின் பெயரில் இதனை வெளியிடுவதில் முயன்றேன். இம்முயற்சிக்குச் சுவாமிகளின் அருளன்பு எனக்கும் இருந்தபடியால் சித்தியாயிற்று. சுவாமிகளின் பொன்னார் திருவடிகளை நாம் போற்றி நினைவுறுவோமாக.

"தமிழ்நிலை" இங்ஙனம்,

தொல்புரம், சுழிபுரம், நா. சிவபாதசுந்தரனார்

10-05-80

## மூன்றாம் பதிப்பு முன்னுரை

இந் நூலின் முதலிரு பதிப்புக்களும் விற்று முடிந்தமையினால் பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த மூன்றாம் பதிப்பை யாம் வெளியிடத் திருவருள் பாலித்துள்ளது. சிறப்புறவும், வழுவறவும் அமைத்து அச்சேற்றித் தந்த கொழும்பு அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தாருக்கு யாம் மனமார்ந்த நன்றியுடையோம்.

சிவதொண்டன் சபையினர்
434, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**குருபூசைத் தினம் 06-04-98**

### *என் நெஞ்சில் இடங் கொண்ட*
### *ஒரு பெரியார்*

## முதலாம் பதிப்பு முன்னுரை

"பற்றினாற் பிறந்திறந்து பாரினில் சுழன்றாயந்தப்
பற்றினைவிடுவாய் என்ற பரமன்தாள் என்றுங்காப்பு"
~ யோக சுவாமிகள்

ஈழநாடு செய்த தவப் பயனாக, இருபதாம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர் யோக சுவாமி. சாதி மத இன பேதமின்றி அவரை நாடிச் சார்ந்த ஆயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர். உலகில் என்றும் நின்று நிலவக் கூடிய நல்ல கருத்துக்களை எங்களுக்கு விட்டு வானுலகெய்தியவர்.

முற்பிறவிகளில் ஈட்டிய புண்ணிய வசத்தினால், அவரை அண்டிப் பிழைத்தவர்களுள் யானும் ஒருவன். அதன் விளைவாக அந்தப் பெரியவர் என்னெஞ்சில் நிரந்தரமான ஓரிடங் கொண்டு விட்டார்.

யோக சுவாமிக்கும் அடியேனுக்கும் ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக இருந்து வந்த தொடர்பைக் குறித்தும், அக்காலத்தில் யான் பெற்ற, மறக்க முடியாத, அனுபவங்களைக் குறித்தும், எழுதப்பட்டவையே இச்சிறு நூலிலடங்கிய கட்டுரைகள்.

இவற்றை ஏன் எழுத்தில் பொறித்திருக்கிறேன் என்பதற்குரிய காரணத்துக்கு ஒரு விளக்கம் கூறுவது பொருத்தமாகும். பிணி, மூப்பு, மறதி என்ற இவைகள் இயல்பாகவே எல்லா மக்களையும் பீடிக்கவல்லன. இவை என்னையுந் தாக்கத் தொடங்கி விட்டன. இந்த நிலையில் என் மனத்தில் இதுகாறும் அந்தரங்கமாக ஒரு முக்கிய இடத்தை வகித்தவரான யோக சுவாமிகளின் ஞாபகந்தானும் மங்கி மறைந்து விடமுடியும். அப்படி நிகழாவண்ணம் ஓரளவு பாதுகாப்புப்பெற இக் கட்டுரைகள் உதவக் கூடும் என்பதேயாம். முதுமை காரணமாக ஞாபகம் குறையும் போது இவற்றை நானே வாசித்தோ, பிறரைக்கொண்டு வாசிப்பித்தோ, மறதியை வென்று ஞாபகத்தைப் புதுப்பித்துக் கொள்ள முடியுமென்பது என் நம்பிக்கை.

## இரண்டாம் பதிப்பு முன்னுரை

இந்த நூலின் முதற்பதிப்பு ரௌத்திரி ஆண்டு ஆனித் திங்கள் மூன்றாம் நாள் ஆயிலிய நட்சத்திரம் கொண்ட செவ்வாய்க் கிழமை அன்று (17-06-1980) "என் நெஞ்சில் இடங் கொண்ட பெரியார் யோக சுவாமிகள்" அவர்களின் சமாதியிற் பொருந்திய திருவடித் தாமரை மலர்மேல் காணிக்கையாக வைத்து அன்பு செய்து எடுக்கப்பட்டது. அஃது அச்சேற்றி வெளியிடப்பட்டபோது, யாதொரு விளம்பரமும் இல்லாது வெளியான 500 பிரதிகளும் ஒரு சில மாதங்களில் செலவாகி விட்டன. அவற்றைப் பெற்று வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்த அன்பர்களுள் சுவாமிகளை முன் அறிந்தவர்கள், அறியாதவர்கள், ஆகிய பலர், கேட்கப்படாமலே, நூலைப் பற்றிய தங்கள் கருத்துக்களை மனமுவந்து எனக்கு எழுதி அனுப்பியமை பெருமகிழ்ச்சியை அளித்தது. யோக சுவாமிகளின் வாழ்க்கை நெறியும் போதனைகளும் எவ்வளவு தூரம் மக்கள் உள்ளங்களில் ஊன்றி இருந்தன என்பதை அவை வெளிப்படுத்தின. எனக்குக் கிடைத்த ஆசீர்வசனங்களில் ஒரு சில கீழே தரப்படுகின்றன.

நூலின் இரண்டாம் பதிப்பொன்று வேண்டப்பட்டமை வெளிப்படையாக விருந்தபோதிலும், நாட்டின் குழப்ப நிலை இடம் அளிக்கவில்லை. அண்மைக் காலத்தில், யோக சுவாமிகளின் நினைவை மக்கள் உள்ளங்களில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக மங்காமல் நிலைநாட்டி வந்த சிவதொண்டன் சபையினரின் விருப்பத்திற்கிணங்க ஆயிரம் பிரதிகளைக் கொண்ட இந்த இரண்டாம் பதிப்பு அச்சேற்றப்படுகின்றது. இதன் பதிப்புரிமையும் அது முதல் சிவ தொண்டன் சபைக்கே அளிக்கப்படுகின்றது. அவர்கள் இந்தப் பெரும் பணியை ஏற்றுக் கொண்டமைக்கு என் நன்றி உரித்துடையது.

மு. வை.

# யோக சுவாமிகளின் தொண்டர்களது ஆசீர்வசனங்கள்

# Appreciations by devotees of Yoga Swami

**By Sri S. Sivapathasundram M. A. (Cantab)**
(Retired Principal)

"The meetings with the Swami are so vividly experienced, that reading about them, I found myself basking in his presence as ever before.

I found the afterthoughts, the rationalistions, and the correlations to the tradition, relevant and restrained.

The language and idiom of the quotations from the tradition is the language and idiom of "Natchinthanai". It has all the intimacy, directness, force and authority of Swami's spoken word. I think it is what makes Swami's persence in the midst of Thirumoolar, Appar, Manivasagar, Pattinathu Pillaiar and Thayumanavar, so natural and unobtrusive in the book.

I found myself joining you whole heartedly in your prayer (Section 20). I wish I had written it.

It is a beautiful book. It has all the simplicity of the truly great."

## By Sri M. Srikhantha O. B. E.

(Retired Permanent Secretary)

"Swamiji's devotees, particularly those who were privileged to sit at his feet, and future generations, are deeply indebted to you for presenting them with a fine picture of Swamiji and his teachings. Personally, the book came at a most opportune time of my life. I was in dire need of a forthright clarification of his teachings.

The quotations and songs are most appropriate. Your transparent sincerity and frankness shine throughout the book.

High appreciation was showered at the Sivathondan Nilayam. You have done a great service to spiritual aspir-

ants. Be sure Swamiji would have been pleased with it."

**By Sri K. Ganesalingam B. Sc. (Eng.)**

C. Eng. M. I . E . E. (Lond.) M. I .E. (Cey.)

(Ceylon Electricity Board)

"நீண்ட காலத்தின் பின் ஒரு நல்ல நூலை வாசித்த மகிழ்ச்சியுடன் இதனை எழுதுகிறேன்.

வெறுமனே வரலாற்று நூலாகவோ, அற்புதங்களின் விளக்கமாகவோ, அமையாமல் அறிவுக்கு விருந்தாகவும், ஆன்மீக நெறியில் ஆர்வத்தை உண்டாக்குவதாகவும் அமைந்துள்ளது. கருத்துக்கள் தெளிவாகவும் அழகாகவும் விளக்கப்பட்டுள்ளன. அற்புதமான நூல்!

யோக சுவாமிகளை நான் நேரில் பார்க்கும் பாக்கியம் பெறவில்லை. அறிந்தவர்கள் மூலமும் நூல்கள் வாயிலாகவும் அவரைப் பற்றிக் கேட்டும் படித்தும் இருக்கிறேன். அவரின் ஆளுமையையும் ஆன்மீக உள்ளத்தையும் உண்மையோடு படம்பிடித்துக் காட்டிய நூல் உங்கள் நூலென்றே கூறுவேன்."

## ஸ்ரீ ஆ. இளையதம்பி அவர்களினது
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

"இந்த அருமையான நூல் சாதனை சதுட்டியம் நிரம்பி மோட்ச தாகங் கொண்டவர்களுக்கே பயன்தரத்தக்கது. சுவாமிகள் சம்பந்தமான நிகழ்ச்சிகளோ, மாயாகாரியங்களின் பொருளின்மையை, புலனறிவைக் கடந்த கூடஸ்த ஆன்ம சொரூப நிலையை தெளிவு செய்கின்றன."சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார், கண்முன் நின்றது புசிப்பார், தேர்ந்த நிலை விடாச்சீவன் முத்தர்" என்பதற்கு எடுத்துக்காட்டாக எஞ்சிய பிராரத்துவத்தைக் கழிக்கவே வாழ்ந்தவர் அவர். அவரது செயல்கள் எல்லாமே சிவதொண்டு: நிஷ்காமிய கர்மங்கள்: ஈஸ்வர நியதியை விடுதல் பிடித்தல் செய்யாது வாழ்ந்தவர்.

சுவாமிகள் மனத்தை அழித்தவர்; வேதகாலத்து மகான்களை ஒத்தவர்; சீவன்முத்தர்; என்றும் வாழ்பவர். நூலாசிரியரோ பாக்கியசாலி: பாக்கியமென்றது முன்தவத்தை. பிறந்ததன் பயனை ஒரு அளவாவது பெற்றவர். சுவாமிகளின் உள்விழிப் பார்வைக்கு உவப்பானவர். அல்லது அவருக்கு இந்த ஆன்ம இரகசியங்கள் தாகத்தை எழுப்பி வழிப்படுத்தி இருக்க முடியாது. மகான்களைப்பற்றி இப்படித்தான் சொல்ல முடியும். அரசர்களின் சரித்திரம் போல சொல்ல நினைப்பது அபத்தம். திருவருட்டிறனை அது இடையீடின்றி அமிர்த தாரையாகப் பொழிந்து கொண்டிருப்பதை இதன்மூலம் மக்கள் உணர்வார்களாக."

# என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார்

## 1. வைத்தீஸ்வரன் கோயிற் சந்தி

இற்றைக்கு ஐம்பத்தேழு வருடங்களுக்கு முன், 1917-ம் ஆண்டு, நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாயிருந்த காலம். அன்றொருநாள், கல்லூரி விடுதியிலிருந்து, நானும் பல மாணவர்களும் யாழ்ப்பாணக் கோட்டைக்கருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்திற்கு, ஒருவர் பின் ஒருவராகச் சென்றுகொண்டிருந்தோம். சண்முகநாதன் புத்தகசாலைக்கும் வைத்தீஸ்வரன் கோயிலிற்குமிடையிலுள்ள தெருச் சந்தியில், ஒரு அபூர்வமான மனிதன் நிற்கக் கண்டோம். அவர் வழிப்போக்கர்களைப் பார்த்துக் கொண்டும், இடையிடையே அங்குமிங்கும் நடந்துகொண்டுமிருந்தார். கம்பீரமான தோற்றம்; மடித்துச் சண்டிக்கட்டாகக் கட்டிய சற்று மங்கல் நிறமான வேட்டி; மெல்லிய வெள்ளிக்கம்பிகள் போன்ற தலைமயிர்; ஆவேசத்தைப் பிரதிபலிக்கும் பார்வை; மிடுக்கான நடை; இப்படி நூதனமான ஒரு மனிதனைக் கண்டால் பள்ளி மாணவர்கள் இயல்பாக என்ன செய்வார்கள்? நாங்கள் சந்தியில் சற்று நேரம் நின்று அவரை உற்றுப் பார்த்தோம்.

"என்னடா பார்க்கிறீர்கள் ?"

என்று உரத்துச் சத்தம் போட்டுக்கொண்டு, குனிந்து ஒரு கல்லையெடுத்தார். ஒரு நொடிக்குள் திக்குத்திசை தெரியாது, சிதறுண்டு கலைந்து ஓடி ஒழிந்துகொண்டோம் நாங்கள். அவரை மூர்க்கமான ஒரு பைத்தியக்காரன் என்று முடிவுகட்டிக்கொண்டோம். அடுத்தடுத்த நாட்களில் அவ்வழியாகச் செல்லும்போது, மிகச் சாக்கிரதையுடன் மேலே குறிப்பிட்ட சந்தி வந்ததும், துரிதமாக நடந்து செல்வது எங்கள் வழக்கமாய் விட்டது. இருந்தும் கடைக்கண்ணால் சந்திப்பக்கம் பார்க்காமல் போக முடிவதில்லை.

சில நாட்களில், அந்தப் "பைத்தியம்" அதே சந்தியில் எங்களைக் கண்டும் காணாததுபோல் நிற்கும். மறு நாட்களில், அது சண்முகநாதன் புத்தகசாலைக்குள், ஒரு நாற்காலியில், சாந்தமாக அமர்ந்திருக்கும். இப்படியான ஒரு பைத்தியத்தைப் புத்தகசாலைக்குள் வரவழைத்து ஆசனங்கொடுத்து மரியாதை செய்வது விந்தையாகவிருந்தது. இதன் மர்மம் எங்களுக்கு அப்போது புரியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்தான், அந்த விநோத மனிதன் ஒரு துறவியென்பதும்,

துறவை நாடும் மகான்கள் தங்கள் ஆரம்ப நிலையில், உலகம் தம்மையணுகித் தொந்தரவு செய்யாது தடுக்கக் கையாளும் உபாயங்களிலொன்றே "பைத்தியக் கோலம்" என்பதையும், நான் உணர்ந்து கொண்டேன். இந்த உணர்ச்சி என் மனத்தில் எழும்வரை சிவன் கோயிற் சந்தியில் மாணவர்களை வெருட்டிய பயங்கரத் தோற்றத்தை நினைக்குந்தோறும் என் மனத்தில் பயமே குடிகொண்டிருந்தது. கூடியவரை அவரைத் தூரத்திலேயே வைத்துக்கொண்டேன். ஆயினும், அவரை முதன் முதல் கண்ட "பைத்தியக் கோலம்" என் மனத்தை விட்டு ஒருபோதும் அகலவில்லை. என்றுமே விட்டுநீங்காத அடிமைத் தொண்டு பூண்ட சுந்தரமூர்த்தி நாயனாரும் தன்னைத் தடுத்தாட்கொள்ளப் பிராமணனாக வந்த முழுமுதலை ஒரு "பித்தன்" என்றுதானே முதலில் மதித்தார்!

## 2. வெள்ளவத்தை கடற்கரை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தெட்டாமாண்டளவில், யாழ்ப்பாணத்துச் சிவன் கோயிற் சந்தியில் நடந்த சம்பவத்திற்கு ஏறக்குறையப் பதினொரு வருடங்களுக்குப் பின், எனது அருமை நண்பர் ஒருவரும் நானும் வெள்ளவத்தைக் கடற்கரையில் சந்தித்தோம். அந்தக் காலம் நான் பகிரங்க வேலைக் கந்தோரில் உத்தியோகம் புரிந்து வெள்ளவத்தையில் 41-ம் ஒழுங்கையில் இருந்தேன். எனது நண்பரும் நானும், நிலாக்காலங்களில், பெரும்பாலும் இரவு 7 மணியளவில், கடற்கரையில் சந்தித்து நிலவில் மணலில் உட்கார்ந்துகொண்டு, நல்ல கடற்காற்றை சுவாசிப்பதுமன்றி தேவார திருவாசகங்களை உரத்துப் பாடிக்கொண்டுமிருந்து, உல்லாசமாகப் பொழுதுபோக்குவது வழக்கம். சனசஞ்சாரம் குறைந்த நேரம்; பால்போலும் நிலா வெளிச்சம்; கமகமவென்று வீசும் மெல்லிய குளிர்காற்று; பரந்த கடலின் மெல்லிசை; குளிர்மையான வெண்மணலாசனம். இந்தத் திவ்வியமான சூழ்நிலையில், பாட்டும், பண்ணும், தாமாகவே எவருக்கும் வரும். எனது நண்பர் மிக உருக்கமாகத் திருவாசகம் பாடுவார். இறைவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் அது. அவருடன் சேர்ந்து நானும் ஓரளவு பாடுவேன்.

ஒருநாள் இரவு பத்தரை மணிவரை பாடிக்கொண்டு இருந்துவிட்டோம். ஆனந்தமான அனுபவம். அன்று இருவருடைய உள்ளங்களும் சாந்தமடைந்து கனிந்திருந்தன. சில நிமிடங்கள் மௌனமாய் இருந்தபின், என் நண்பருக்கும் எனக்குமிடையே ஒரு அபூர்வமான சம்பாஷணை தொடங்கியது. திருமுறைகளை அமைதியாகவிருந்தோதினால் உள்ளம் எவ்வாறு பண்பட்டு எதை நாடும் என்பதை

இந்தச் சம்பாஷணை நிரூபித்துவிட்டது. என் நண்பரே அதைத் தொடங்கினார்.

"Brother, யாழ்ப்பாணத்தில் யோக சுவாமிகளை எப்போதாயினும் சந்தித்திருக்கிறீரா?"

"நான் நேர்முகமாகச் சந்திக்கவில்லை, ஆனால் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். யான் யாழ். இந்துக் கல்லூரியில் படிக்கும்போது, ஒருநாள் சிவன்கோயிற் சந்தியில் அவரைக் கண்டு பயந்தோடியது என் ஞாபகத்திலிருக்கிறது. அவர் ஒரு பைத்தியக்காரன் என்று நான் நினைத்துவிட்டேன். ஆனால், பின்னர் அவரைப் பலர் ஒரு சுவாமியாக மதித்து வழிபடுகிறார்கள் எனவும் கேள்விப்பட்டேன். சில நேரங்களில் கோபாவேசங் கொண்டு, ஆட்களைக் கண்டபடி வைது வெருட்டிக் கலைக்கிறாரெனவும் அறிந்தேன்."

"நீர் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் அது முன்னொரு காலம். இப்போது அவர் ஒப்பற்ற ஒரு யோகி எனவும், கண்கண்ட தெய்வமெனவும், எல்லோராலும் வழிபடப்படுகின்றார். ஒரு தவ சிரேஷ்டர். நான் பலமுறை அவரைத் தரிசித்திருக்கிறேன். நீரும் கட்டாயமாக அவரைத் தரிசிக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்."

"Brother, எனக்கு, பொதுவாக உலகத்திலே சுவாமியெனக்கொண்டு திரிபவர்களில் நம்பிக்கையில்லை. கடவுள் ஒருவரே எங்கள் வழிபாட்டிற்குரியவர். மனிதனை மனிதன் வழிபடுவதால் என்ன பயன்?"

"அவையெல்லாம் இருக்கட்டும். நீர் இப்போது கிளப்பும் பிரச்சினைக்கு விளக்கம் கூற நான் விரும்பவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். நீர் என் உண்மையான நண்பனென்றால், என் சொல்லைத் தட்டாது என் விருப்பத்துக்கிணங்கி, ஒருமுறை யாழ்ப்பாணஞ் சென்று யோக சுவாமிகளைச் சந்தித்து வாரும். மறு விஷயங்களையெல்லாம் பின்னர் நாம் பேசிக்கொள்ளுவோம்."

"இவ்வாறு நீர் சொல்லும்போது நான் மறுப்பதற்கில்லை. நீர் சொல்லுவதுபோலப் பலராலும் போற்றப்படுபவரில் ஏதோ மர்மம் இருக்கத்தானே வேண்டும். நானுமொருமுறை அவரை நேர்முகமாகச் சந்திப்பதால் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது. நான் நாளைக்கே புறப்பட்டு விடுகிறேன். யாழ்ப்பாணஞ் சென்று யோக சுவாமிகளைத்

தரிசித்து வருகிறேன்."

இந்தச் சம்பாஷணைக்குப் பின் இருவரும் உல்லாசமாக முன்னொருபொழுதும் அனுபவியாத மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம். அந்நேரம் முதல் அடுத்தடுத்த நாட்களில், யோக சுவாமிகளைச் சந்திக்கும் வரையும் அதே எண்ணந்தான் என் மனத்தில் குடிகொண்டிருந்தது; என் வாழ்க்கையில் ஏதோ ஒரு விசேட சம்பவம் நடைபெறப்போவதுபோல் மனம் குதூகலப்பட்டுக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பயணம் காசி யாத்திரை போலிருந்தது. என் நண்பர் ஒரு பிரேரகாசிரியர் போன்று என்னை, ஒரு புதிய திசைக்குத் திருப்பிவிட்டமை, திருவருள் தொழிற்படும் முறைக்கு ஒரு சிறந்த சான்றன்றோ!

## 3. அற்புதமான முதல் தரிசனம்

யாழ்ப்பாணம் சேர்ந்த அன்று மாலையே கொழும்புத் துறைக்குப் புறப்பட்டேன். ஒருவருக்கும் எனது நோக்கம் தெரியாது. நான் பிரயாணஞ் செய்த கார்க்காரனுக்கு, கொழும்புத்துறைச் சாமியார் இருக்கும் கொட்டிலைக் காட்டும்படி சொல்லியிருந்தேன். யோக சுவாமிகள் காலையில் மாத்திரம் தன் கொட்டிலில் இருப்பதாகவும் மறுநேரங்களில் பெரும்பாலும் பல இடங்களுக்கும் சுற்றித் திரிவதாகவும், கேள்விப்பட்டிருந்தேன். எனவே, பிறரொருவருடனுங் கூடிச்செல்லாது, தனியே சென்று சுவாமிகளைக் காணவேண்டுமென்னும் எண்ணம் என் மனதில் குடிகொண்டிருந்தது. முதற்கண் அவரின் ஆச்சிரமம் இருக்கும் இடத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டதால், அன்று மாலை கொழும்புத்துறைக்குப் போய்ச் சுவாமிகளின் இருப்பிடத்தை முதலில் பார்த்து வைத்திருந்து மறுநாள் வைகறையில் அங்குச்சென்று தவறாது அவரைத் தரிசிக்கத் திட்டமிட்டுக்கொண்டேன்.

மறுநாள் காலை நாலு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து, இயன்றளவு உள்ளும் புறமும் தூய்மையாகப் புறப்பட்டேன். முன் செய்திருந்த ஒழுங்கின்படி கார் நாலரை மணிக்கு வந்தது. நான் அப்போது வாழ்ந்த இடம் கட்டுடையில் உள்ள எனது மனைவியின் இல்லம். அவ்வளவு அதிகாலையில் எங்கே போகிறேனென்பதை என் மனைவிக்கும் சொல்லவில்லை. இரண்டு 'பாக்கற்' கற்பூரமும் ஒரு தீக்குச்சிப்பெட்டியும் மாத்திரம் என் சட்டைப்பையிலிருந்தது. என்ன நடக்கப்போகிறதோ! சுவாமிகளைச் சந்திப்பேனா! "வா" என்று ஏற்றுக்கொள்வாரோ! அல்லது வெருட்டிக் கலைத்து விடுவாரோ! இன்னோரன்ன எண்ண அலைகள் என் மனத்தைக் குடையத் தொடங்கின. மனத்தைச்

சாந்தப்படுத்திக்கொள்ள இயன்றவரை தெண்டித்தேன். மனம் முற்றாக அமைதி பெறுமுன், கார் கொழும்புத்துறையைச் சென்று அடைந்துவிட்டது. "மிக மெதுவாக ஓட்டி, யாதொரு சத்தமுமில்லாமல், சுவாமிகளின் கொட்டில் படலையடியில் நிறுத்து" எனச் சாரதிக்குச் சொல்லியிருந்தேன். அப்படியே சென்று கார் நின்றது. படலை சாத்தியபடியிருந்தது. கொட்டிலுக்குள்ளிருந்து ஓர் உரத்த சத்தம் "வைரமுத்து!" என்று என் பெயரைச் சொல்லி அழைத்தது. "ஓம் சுவாமி" என்று தடதடத்த குரலில் பதிலளித்தேன். என்ன ஆச்சரியம்! முன்பின் தெரியாத என்னை, இந்தக்கெச இருளில், கொட்டிலினுள் மறைந்திருந்து கொண்டே பெயர் சொல்லி அழைக்கின்றாரே!! என்ற எண்ணம் எனக்குத் திடீர் அதிர்ச்சியைத் தந்தது. "படலை திறந்திருக்கு, வா" என்று உத்தரவு பிறந்தது. நான் மெதுவாகக் கொட்டிலை நோக்கிச் சென்றேன். "கதவு நிலையில் தலையை மோதிக்கொள்ளாதே; குனிந்து உள்ளே, வா." மௌனமாகவும், சாக்கிரதையாகவும் உள்ளே புகுந்தேன். "கற்பூரத்தை நிலத்தில் வைத்துக் கொளுத்தாதே; பக்கச் சுவரில் ஒரு கற்பூரத்தட்டிருக்கு, எடுத்துக் கீழே வைத்துக் கொளுத்து" என்றார் சுவாமிகள். இந்த வார்த்தை, முன் என் மனத்திலிருந்த அதிசயத்தை, மேலும் அதிகரிக்கச் செய்தது. என்னுடைய சட்டைப் பையுள் கற்பூரம் இருப்பது இவருக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட்டேன். நான் கற்பூரத்தைக் கொளுத்தியவுடன், "இரு, கால்முகம் கழுவிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு வெளியே சென்றார் சுவாமிகள்.

கற்பூர வெளிச்சத்தில் அறையைச் சுற்றிப் பார்த்தேன். அவருடைய படுக்கை ஒரு வெறும் பாய்; ஒரு மெல்லிய தலையணை; அறையைச் சுற்றியிருந்த அரைச் சுவரில் இரண்டொரு சிறு புத்தகங்கள்; கிடுகால் வேயப்பட்ட கூரை; சாணியால் மெழுகப்பட்ட தரை; படுக்கையின் தலைமாட்டில் ஒரு சிரட்டை, சகல உலகும் வந்து தன் தாளில் வீழ்ந்து வழிபடும் பெற்றியையுடைய இப்பெரியவரின் வாழ்க்கை வசதிகள் இவ்வளவுதானா என்ற விசாரமெழுந்தது என் மனத்தில். சுவாமி திரும்பிவரச் சென்ற சில நிமிடங்களில், எனது மனத்தில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல எண்ணங்கள் உதயமாயின. முன்னிருந்த ஐயப்பாடுகளும் விபரீதங்களும் மெல்ல மெல்ல என்னை அறியாமலே மறைந்துவிட்டன. ஒருவ்த பயம் மாத்திரம் நீங்கவில்லை. எனக்குச் சுவாமி என்ன சொல்லப் போகிறாரோ வென்ற பயம். மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அமைதியாகவிருந்தேன்.

இந்த அச்சநிலையிலிருந்து, இவ்வளவு காலமும் நான் கற்றதும் கேட்டதும், இவ்வளவு காலமும் நான் சமய வாழ்க்கையில் சாதிக்க எத்தனித்த அத்தனையும்,

வெறும் போலி என்பதும், என்னுள்ளே ஒன்றிலேனும் ஒரு திடமான நம்பிக்கை உருப்படவில்லையென்பதும், வெளிப்படையாய் உணர்ந்தேன்.

## 4. சோதனையுஞ் சாதனையும்

சுவாமிகள் அறையினுள்ளே வந்ததும் நான் எழுந்து நின்றேன். 'இரு' என்றவுடன் இருந்தேன். எனக்கு நேர்முகமாக எதிரில் உள்ள தன் படுக்கைப் பாயில் அவர் அமர்ந்தார். இருவருக்குமிடையில் கற்பூர விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதை அணையவிடாது, ஒவ்வொன்றாகக் கற்பூர துண்டுகளை அவ்விளக்கின் மேல் வைத்தவண்ணம் இருந்தேன். சுவாமிகள் அமர்ந்ததும், மௌனமாகக் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஒடுங்கி விட்டார். காலை ஐந்து மணியிருக்கும் வெளியில் இருட்டு அகலவில்லை, எங்கும் நிசப்தமாயே இருந்தது. என் மனக்குரங்கு கால் விட்டோடத் தொடங்கியது. ஒன்றன்பின் ஒன்றாகப் பல வித எண்ணங்கள் மனத்தில் உதிப்பதும், மறைவதுமாகவிருந்தன. சுவாமிகளைக் கற்பூர ஒளியில் உற்றுப் பார்த்தபடியேயிருந்தேன். அவருடைய அழகிய தோற்றம், அவருடைய சாந்த நிலை, அவருடைய சடாபாரத்தின் சிறப்பு, அவருடைய அசைவற்ற சரீர அமைப்பும் அமைதியும், எனக்குத் தட்ஷணாமூர்த்தத்தை நினைவூட்டியது. எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளக்கூடிய கவர்ச்சிவாய்ந்த வடிவம் கற்சிலைபோல என்முன் காட்சியளித்தது.

சில நிமிடங்களில், கண்ணைத் திறந்து எனக்கு ஏதேனுமொரு நல்ல வார்த்தை சொல்லுவார் என்னும் நம்பிக்கையுடன், யானும் அமைதியாகவிருந்தேன். சுவாமியையே பார்த்துத் தியானத்தில் நானும் அமர்ந்திருக்க எத்தனித்திருக்கலாம். தியான சாதனையில்லாத சிறியேனுக்கு அஃது எவ்வாறு சடுதியில் கைகூடும், ஆயினும் மனம் ஓரளவு அமைதிநிலையை அடைந்திருந்தது. பதினைந்து நிமிடங்களாயும் சுவாமியின் தியானம் குலையவில்லை. முப்பது நிமிடங்கள் சென்றுவிட்டன; யாதொரு மாற்றமுமில்லை. மனத்தைவிட்டு சற்று முன் நீங்கியிருந்த பயம் எனக்குத் திரும்ப உண்டானது; கொஞ்சம் கொஞ்சமாயதிகரித்து, சுவாமிகளின் அகக்கண்ணுக்கு, என்முற்பிறவிகளைப் பற்றிய விபரமும், இந்தப் பிறவியும், இனிவரும் பிறவியும் என்னிடத்தேயுள்ள அளவற்ற குணக்கேடுகளும், குறைபாடுகளும், யாவும் வெட்டவெளிச்சமாகத், திரையிலே ஒன்றன்பின் ஒன்றாக விழும் படக்காட்சிகளைப் போலத் தென்படுமே! இவற்றையெல்லாம் அறிந்துகொண்டு, கண்களை விழித்தபின் என்ன சொல்வாரோ? தூஷிப்பாரோ?

அன்றேல் அவற்றைப் பொருட்படுத்தாது பொறுத்துக்கொண்டு அன்பாக என்னுடன் சம்பாஷிப்பாரோ? இவ்வித எண்ணங்கள் என் மனத்தை கலக்கத்தொடங்கின.

மேலும் பதினைந்து நிமிடங்கள் சென்று விட்டன. சுவாமிகளில் யாதொரு அசைவும் காணப்படவில்லை. என் மனந்தத்தளித்தது. சீரம் வியர்த்தது, என்னால் பொறுத்துக்கொள்ள முடியாத ஓர் அவத்தை நிலை ஏற்பட்டது. என்ன செய்வதென எனக்குத் தெரியவில்லை. அவர் கண்களை மூடிக்கொண்டிருக்கும் பொழுதே, மெதுவாக நான் எழுந்து வெளியேறிவிடுவது நன்றுபோல் தோன்றியது. அது பேடித்தனமாக முடியும்: அப்படி நான் நடந்துகொண்டால் என் பெயரைச் சொல்லி உள்ளேவாவென்றழைத்து உட்காரவைத்த பெரியர் என்னைப் பற்றியென்ன நினைப்பார்! சீ, சீ, அது தகாத செயல். இன்னும் சிறிது நேரம் இருந்தே பார்ப்போம் என மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு இருக்கத் துணிந்தேன்; ஆனால் மனக்குமுறல் ஓய்ந்தபாடில்லை. ஒவ்வொரு நிமிடமும் என்னுள்ளத்துணர்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதுகாறும் வியர்வையினால் தோய்ந்திருந்த சரீரம் இப்போது கனன்றது போலிருந்தது. $100^{\circ}$, $101^{\circ}$, $102^{\circ}$ ஆக உடம்பின் வெப்பம் ஏறுவது போன்ற உணர்ச்சி என் வாழ்வில் முன்னொருபோதும் பெறாத ஓர் அனுபவம். சுவாமிகள் தியானத்தமர்ந்து நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேலாய் விட்டது.

என் நிலையில் ஒரு திருப்பம் தோன்றத் தொடங்கியது. இதுவரையும் என்னை வாட்டி வதக்கிய மனவேதனைகள் சிறிது சிறிதாகக் கலையத் தொடங்கின. எது வரினும் வரட்டும்; சுவாமிகள் எது சொன்னாலும் எதைச் செய்தாலும், சித்த சமாதானத்துடன் ஏற்றுக்கொள்ள நான் தயாராகி விட்டேன், அக்கினியில் குளித்தது போலிருந்த வெப்பநிலை மறைந்துவிட்டது. சரீரம் காற்றினில் பறந்துவிடும் போன்ற ஓர் இலேசான உணர்ச்சி உற்பத்தியானது. யானுமே தியானத்திலிருந்து விடலாம்போலத் தோன்றியது. பயமோ, கவலையோ, ஐயப்பாடோ, யாதுமில்லாத ஒரு சாந்த நிலை உருவானது. நான் கொட்டிலட் புகுந்து ஒரு மணித்தியாலம் சென்றிருக்கலாம். சுவாமி மெதுவாகக் கண்களை விழித்தார்.

"அருமையான உலகம், வைரமுத்து"

(யான் ஒன்றுமே பேசவில்லை)

"சும்மா பார்த்திட்டுப் போகத்தானே வந்த நீ."

"ஓம் சுவாமி."

"ஒருவருக்கும் ஒரு குறையுமில்லை. உன்னைப் போலத்தான் நான். என்னைப் போலத்தான் நீ, நூதனமொன்றுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். எண்ணாயிரம் வருஷங்களுக்கு முன்னே, டெல்ஹிமாநகரில், செப்புத் தகட்டிலே, எழுதிவைத்திருக்கு. அதன்படி நடக்கும்; எமக்கென்ன கவலை? பிரபஞ்சம் முழுவதையும் படைத்தவனுமவன்; காப்பவனுமவன்; அழிப்பவனுமவன்; எனக்கும் உனக்கும் வேலை சும்மா விருத்தல் தானே. இரவில் நீ நித்திரைக்குப் போன பின் நடப்பதொன்றுமுனக்குத் தெரியாது. உன் வீடு வாசல், பொருள் பண்டம், காசு பணம், ஆடு மாடு யாவுக்கும் காவல் யார்? ஆரோ ஒருவன் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறான் தானே. காலையில் எழுந்தவுடன் நீ ஏன், என் வீடு, என் மாடு, என் மனைவி, என் பிள்ளையென்று எல்லாவற்றையும் உனது தலைப்பொறுப்பென்று நினைத்துக் கூத்தாடுவான்? இரவில் காப்பாற்றியவன் பகலில் காப்பாற்ற மாட்டானா?"

இப்படியே அரைமணி நேரம் சுவாமி மிகமிக அன்பாகவும், பல உண்மைகளைப் பலவேறு விதமாக, விசித்திரமான உவமானங்கள் காட்டியும் கூறிக்கொண்டே போனார். ஒரு தாய் தான் அருமையாகப் பெற்று வளர்த்த தன் பிள்ளைக்கு, எத்துணைப்பரிவோடு புத்தி புகட்டுவாளோ அதே போலவே, என் அறிவுக்கேற்றவாறு, எளிமையாகவும் இனிமையாகவும் இருந்தது சுவாமியின் திருவுபதேசம். உலகத்தை மறந்து, என்னையே மறந்து "சும்மா" இருந்தேன் நான். என் ஐம்புலன்களில் செவிப்புலன் ஒன்றுதான் தொழிற்பட்டுக்கொண்டிருந்து.

இடையிடையே, என் தாய் தந்தையர், மற்றும் பந்துக்கள், என் மனைவி வழி உற்றார் உறவினர் ஆகியவர்களைப் பற்றியும் அன்பாக விசாரித்தார். அவர்களில் அநேகரை தான் நெடுங்காலம் அறிந்தவர்போல, அவர்களின் பெயர்களைக்கூடக் குறிப்பிட்டு விசாரித்தார். சுவாமிகளின் பரிவும் அன்பும் என் உள்ளத்தை உருக்கியது. நான் கனவிலும் நினைத்திராத வண்ணம் அளவற்ற அன்பு காட்டி,. கருணையே வடிவமான சுவாமிகள், என்னைத் தான் கண்ட முதல் நாளே தன்வசமாக்கிக்கொண்ட அற்புதத்தையும், அன்று நான் அனுபவித்த ஆனந்தத்தையும், உயிருள்ளவரையும் மறக்கமுடியாது. இங்கே முற்றாக விபரித்துக் காட்டவும் முடியாது.

காலை ஆறரை மணியிருக்கும்:

"நீ எப்போது கொழும்புக்குத் திரும்புகிறாய்" என்றார் சுவாமி.

"நாளைக்குத் திரும்ப எண்ணியிருக்கிறேன், சுவாமி" என்று விடையளித்தேன் நான்.

"ஒரு பொல்லாப்புமில்லை; நீ போய் வா. கொழும்பிலிருந்து அடிக்கடி இங்கு வரவேணும் என்று நினையாதே. நீ அங்கே இரு; நான் இங்கே இருக்கிறேன். இருவரும் ஒருவரையொருவர் கண்டு கொண்டிருக்கலாம்.

"கண்டு கொண்டிருக்கலாம் என்ற நம்பிக்கை என் மனசிலும் உதயமாய்விட்டது. அவ்வளவுக்குச் சுவாமிகளின் வடிவம் என் மனசில் படிந்து விட்டது. அதை இலேசில் மறந்து விடமுடியாது. இந்த எண்ணத்துடன் நான் எழுந்து நின்றேன். அந்தச் சமயம் படலையைத் திறந்துகொண்டு சுவாமிகளின் பழைய அடியார்களிலொருவர் ஒரு Thermos flask உடன் வந்து சேர்ந்தார்.

"நல்ல நேரத்தில் வந்தாய்; வைரமுத்துவுக்கு ஒரு தேத்தண்ணி குடிக்கக் கொடுத்துவிட நான் நினைக்க நீயும் வருகிறாய், கொண்டுவா."

என்றார், சுவாமி. Thermos flask ஐ வாங்கித் தானே திறந்து, அதன் மூடியில் ஊற்றி, என்னிடம் நீட்டிக் கொண்டு,

"நீ எந்த நாளும் காலையில் ஒரு தேதத்தண்ணி குடிக்கிற வழக்கம், இல்லையா? பார்த்தியா தேத்தண்ணி இங்கும் உன்னைத் தேடி அந்த நேரத்துக்கு வந்து விட்டது."

தேனீரைக் குடித்துவிட்டுச் சுவாமிகளின் பாதாரவிந்தங்களில் விழுந்து என் ஆசை தீர, மனதாரத், தலையாரக் கும்பிட்டேன். என் வாழ்நாளில் இதுதான் முதல்முறை பூமியில் படிந்து, ஒரு மனிதவடிவத்தை நான் வணங்கியது.

கொழும்பில் எத்தனையோ சுவாமிகளைக் கண்டிருக்கிறேன். அந்தக்காலத்தில் இந்தியாவிலிருந்து அடிக்கடி பலதிறப்பட்ட "சுவாமிகள்" கொழும்புக்கு வருவதுண்டு. அவர்களுட் சிலரை, என் நண்பர்களிற் பலர் கண்ட நேரமெல்லாம் விழுந்து விழுந்து கும்பிடுவார்கள். என் மனம் ஒரு போதும் அப்படிச் செய்ய ஏவவில்லை. இன்றோ, யோக சுவாமிகளின் முன்னிலையில், என் இறுமாப்பு பஞ்சாய்ப்பறந்துவிட்டது, அவரைக் கீழே விழுந்து வணங்கவா, விடவா என்ற ஐயப்பாடு என்மனத்தில் எழவேயில்லை. என் உடம்பு தானாகவே பூமியில் படிந்துவிட்டது என்றால் மிகையாகாது. பேதைமையினால் யான் செய்த எண்ணற்ற பிழைகளையெல்லாம் பொருட்படுத்தாது பொறுத்துக் கொண்டு, ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு இத்துணை பரிவும், மதிப்பும், அன்பும் ஆதரவுங் காட்டி, என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட பெருமானாரை வணங்காது வேறு யாரைத்தான் வணங்குவது? அவரை வணங்கக் கிடைத்த

பாக்கியமே பாக்கியமென்று என் உள்ளம் பூரித்தது. என்னிடத்தில் எனக்கு முன்பொருபோதுமில்லாத நம்பிக்கையுண்டானது. யான் அவ்வளவு கெட்டவனல்ல என்னும் திருப்தி மகிழ்ச்சியளித்தது. எண்ணரிய என் முற்பிறவிகளில் ஏதோ அற்பமாயினும் தவம் நான் செய்திருக்க வேண்டும். இப்படி நினைக்க, ஆனந்தத்தினால் என் கண்கள் கலங்கின. சுவாமிகளின் விடையைப் பெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

சுவாமிகளைக் காணப்போன பொழுது என் நிலை வேறு. இப்போது வெளியேறும் போது என் நிலை எவ்வளவோ மாற்றமடைந்துவிட்டது. இம்மாற்றம் என்னுள்ளத்தில் எனக்கே தென்பட்டது. கொழும்புத்துறையில் அன்று நான்கண்ட காட்சியும், பெற்ற அனுபவமும், இத்தனை ஆண்டுகள் சென்றும் என் உள்ளத்தில் புத்தம் புதிதாகவேயிருக்கின்றன; கொஞ்சமேனும் மங்கவில்லை. எங்கிருந்தாலும் ஒருவரையொருவர் கண்டுகொள்ளலாமென்று சுவாமிகள் தந்த அருள் வாக்கு எனக்கு எல்லையற்ற உற்சாகத்தையும், இன்பத்தையும் தந்தது. இரண்டு மணி நேரம் எங்களிருவருக்குமிடையே உண்டான சம்பந்தம், என் இதயத்தின் அழிக்கமுடியாது நிரந்தரமாய் பதிந்துவிட்டமையால் சுவாமிகளின் வாக்குச் சித்தித்து விட்டது.

"முப்பதாமாண்டளவில் மூன்றற்று ஒரு பொருளைத்
தப்பாமல் தன்னுள் பெறானாயின் ~ செப்புங்
கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே ஆகுமாம் மூப்பு"

இஃது ஒளவைப் பிராட்டியின் திருவாக்கு. அரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன், தனது முப்பதாவது வயதளவில், அப் பிறவிப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு புருடார்த்தங்களில் முதல் மூன்றையும் பெற்று அனுபவித்து முடித்து, அதன் பயனாக மேலும் பெறவேண்டிய வீடுபோற்றைத் தவறாமல் தனது உள்ளுணர்வில் நாடானாயின், அவன் கற்ற கல்வியும் போய், பிணி, மூப்புச் சாக்காடு ஆகியனவற்றிற்கே ஆளாகியவனாவான் என்பது தமிழ் மூதாட்டியின் எச்சரிக்கை.

சிறு பராயந் தொட்டே, சமய சம்பந்தமான பணிகள், ஆலயவழிபாடு, யாத்திரைகள், சமய சாஸ்திர ஆராய்ச்சி ஆகிய இன்னோரன்னவற்றில் எனக்கொரு நாட்டம் இயல்பாகவே இருந்து வந்தபோதிலும், இவையெல்லாம் சம்பிரதாயங்களாகவும் வெளி வேடங்களாகவுமேயன்றி, உள்ளத்து ஊன்றிய தெய்வ பக்தியிலிருந்து எழுந்தனவென்று சொல்லுவதற்கில்லை. அந்தக்காலத்திலே

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமயக்கல்வி, சமயப்பிரசாரம் முதலியன பெரும்பாலும் அப்போது இயங்கிவந்த இந்து வாலிபர் சங்கங்களின் தீவிர முயற்சி காரணமாக நாட்டில் பரவி வந்ததினால், சமயாசாரங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்த பல ஆசிரியர்கள், பொதுமக்கள், தலைவர்களைக் காணக்கூடியதாகவிருந்தது.

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப்
பாவித்துத், தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல"

சிறியவனாகிய யானும், பெரியவர்களைப் பார்த்துத் திருபுண்டரமாக வெண்ணீற்றுக் குறிகளையும் வைத்துக் கொண்டு அவர்களுக்குப் பின்னால் கூட்டங்களுக்குத் திரிந்த ஞாபகம் இன்னுமிருக்கிறது. என் கிராமப் பள்ளிக்கூடத்துக்குப் போய்வந்த பதினான்கு பதினைந்தாம் வயதுவரை, ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடையைப் படித்துவிட்டு, காலையிலெழுந்து, ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, சமயானுட்டானம் முடித்து அயலிலுள்ள கோயிலுக்குச் சென்று கும்பிட்டு வீடு திரும்பிய பின்புதான் மறு கருமங்களைக் கவனிக்கின்ற வழக்கமும் சில ஆண்டுகளிருந்தது. இந்தச் சம்பிரதாயங்கள் நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. வேடிக்கையாகத் தொடங்கி வேடிக்கையாகவே முடிந்துவிட்டன. கல்லூரிப் படிப்புக்குப் போனதும் இவை தாமாகவே நானாகக் கைவிடாமல் மெல்ல மெல்ல நழுவிவிட்டன.

ஔவைப் பிராட்டி கூறிய முப்பதாம் ஆண்டளவில் நான்காவது புருடார்த்தமாகிய வீடுபேற்றை உள்ளத்து நாடவேண்டிய காலஎல்லையில்தான், என் உள்ளத்தில் தெய்வம் என்பதோர் சித்தம் அரும்பியது. இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்த வரலாற்றை இப்போது திரும்பி நினைக்கும் போதெல்லாம் மனம் நெகிழ்கின்றது, பூரிக்கிறது. திருவருள் தொழிற்படும் முறையை என்னென்றுதான் சொல்வது! வீணனாய், விழலுக்கிறைத்துக்கொண்டு திரிந்த என்னையும் ஒரு பொருட்படுத்தி, ஒரு சினேகிதன் மூலமாகத்தூண்டி, உலகமுய்ய வழிகாட்ட வந்து, எம்மத்தியில் அவதரித்த ஒரு மகானுபாவருடன் தொடர்பு கொள்ளச்செய்து, என் மனத்தில் குடிகொண்டிருந்த குப்பை கூழங்களைச் சிறிதளவு நீக்கி, கோணல்களை அகற்றி, அம்மகானின் பரிவுக்கும் அன்புக்கும் ஆளாக்கிய கருணையின் அற்புதத்தை எண்ணியெண்ணி இன்புறும்போதெல்லாம், மணிவாசகரின் திருவாசகம் தான் ஓடிவந்து முன்னிற்கிறது.

" நடித்து, மண்ணிடைப் பொய்யினைப்பல செய்து நானெனதெனுமாயக்
கடித்த வாயிலே நின்று, முன்வினை மிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்று அப்பெருமறை தேடிய அரும்பொருள், அடியேனை
அடித்தடித்து, அக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே"

## 5. இல்லத்திலமைந்த வழிபாட்டறை

யோக சுவாமிகளைத் தரிசிக்கச் செய்த யாழ்ப்பாண யாத்திரையை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பினேன். அங்கு நான் வாழ்ந்த வீடு வெள்ளவத்தையில், அது புதிதாகக் கட்டப்பட்டபோது, வழிபாட்டுக்கெனப் பிரத்தியேகமான ஒரு தனியறையைக் கட்டத் தவறி விட்டேன். சுவாமிகளுடன் தொடர்புகொண்ட அனுபவத்தின் பயனாக, அப்படியான ஓர் அறையின் இன்றியமையாமையை நான் உணர்ந்து கொண்டேன். ஆகவேண்டிய ஒழுங்குகளைத் தீவிரமாகச் செய்து மூன்று மாத காலத்துக்குள், ஒரு பிரத்தியேகமான அறையைச் சிறப்பாக அமைத்துக் களிப்படைந்தேன். ஒரு நல்ல நாளிலே, நல்ல மூகூர்த்தத்திலே, எங்கள் குல தெய்வமாகிய முருகனின் படமொன்றைப் புதிய அறையினுள் பிரதிட்டை செய்து, பூசை, பஜனை முதலிய வழிபாடுகளை ஆரம்பிக்க ஆவனவற்றைக் கவனித்து, என்னுடன் சமயத்துறையில் ஈடுபட்டுள்ள சில நண்பர்களையும் அந்தப் புனிதமான வைபவத்துக்கழைத்திருந்தேன். நியமிக்கப்பட்ட நேரம் மாலை ஆறு மணி; அன்று வேலைத்தலத்திலிருந்து மூன்று மணிக்கே வீடு திரும்பி, ஒழுங்குகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது, ஐந்து மணியளவில், வீட்டு முன்றலில் ஒரு காரின் ஹோரன் சத்தம் கேட்டது, அங்கு விரைந்து சென்றேன், என்ன அதிசயம்! யோக சுவாமிகளும், இரத்தினபுரியில் வாழ்ந்து வந்த என் உற்ற நண்பர்களிலொருவரும் வீட்டுக்குள் நுழைகிறார்கள். சுவாமிகளின் இந்த திடீர் விஜயம் என்னைத் திகைக்க வைத்து விட்டது. மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது.

"எங்கே உன் பூசையறையைக் காட்டு" என்றார் சுவாமி. நான் ஓடிச் சென்று ஒரு மான் தோலை எடுத்து பூசையறையினுள் விரித்து விட்டேன். கிழக்கு நோக்கியிருந்த அறையின் சரிமத்தியில், சுவாமி மேற்கு நோக்கி உட்கார்ந்தார், சுவரில் இன்னும் தூக்கப்படாத மேற்கு சுவரில் சாத்தப்பட்டிருந்த முருகன் படத்துக்கு நேர்முகமாகவிருந்த சுவாமிகள் சிறிது நேரம் கண்களை மூடித் தியானத்தமர்ந்தார். நானும் என் நண்பனும் பக்கத்திலே அமைதியாக நின்றோம். கண்களை விழித்ததும் கைகளிரண்டையும் முருகன் முன் நீட்டிய வண்ணம் :

" வைரமுத்து! இதை ஒரு படமென்று நினைத்து விடாதே, இப்படிக் கைகளை நீட்டி 'குழந்தாய்! என் கைக்குள் வந்திடடா' என்று அழைத்தாயானால் கட்டாயம் வந்துவிடுவான்."

என்று சொல்லிக் கொண்டு எழுந்தார் சுவாமி. வீட்டு நடு மண்டபத்தில், அன்றைய

வைபவத்திற்குத் தயாராக ஒரு மேசையின் மேல், பூக்களும் பலவகைப் பழங்களும் தட்டங்களில் வைக்கப்பட்டிருந்தன. அங்குமிங்குமாகச் சில பழங்களை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, கூடி வந்த அன்பரைப் பார்த்து:

" வந்த காரியம் முடிந்தது; வா, நாங்கள் போவோம்" என்று சொல்லியபடி வெளியேறிக் காரில் உட்கார்ந்து கொண்டார், சுவாமி.

அந்த அற்புதமான வருகை பத்து நிமிடங்களில் முடிவடைந்து காரும் போய்விட்டது. நடந்தேறிய யாவும் ஒரு கனவுபோலிருந்தது, இஃது எப்படி நிறைவேறியதென்று என்னால் சிந்திக்க முடியவில்லை. பூசையறையில் அன்று நடைபெறவிருந்த வைபவத்தைப் பற்றி எங்கேயோ இருந்த யோக சுவாமிகளுக்கு எப்படித் தெரியும்.! இத்துணைக்கருணை அடியேனுக்குச் சுவாமி காட்டினாரேயென்று நினைந்து நினைந்து, என் மனம் குழைந்தது. ஒன்றுமே செய்யாது ஓரிடத்திருந்து சிந்தனையில் ஆழ்ந்தேன். ஆறுமணியானதும், நான் அழைத்திருந்த நண்பர்கள் வந்து சேர்ந்தனர். பூசையறைத் திறப்புவிழா நடந்தேறிய விதத்தை, நாத்தடதடக்க, அவர்களுக்குச் சொன்னேன். எல்லோரும் பரவசமானார்கள். முதல் நாளைய முருகன் வழிபாடு அன்று ஒப்பற்ற இந்தச் சூழ்நிலையில் ஆனந்தமாய் நடந்தேறிவிட்டது. நள்ளிரவு வரை அனேக அன்பர்கள் கூடியிருந்து பாடிப் படித்து பஜனை செய்து முருகனுக்குத் தீப தூபத்துடன், மலர், பத்திரம் முதலியன கொண்டு அர்ச்சித்து வழிபட்டோம்.

திருவருள் தொழிற்படும் அற்புதமான முறையை அன்று நான் தெளிந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றேன், இப்படியான வாய்ப்பு முன் செய்த புண்ணியத்தினாலன்றிக் கைகூடாதென்பதை நானறிவேன். இந்த வண்ணம் மனத்திற்குச் சாந்தியளித்தது.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே! யிருங்கடல் வையத்து
முன்னை நீ புரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே."

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கு இங்கு நினைவுகூரத்தக்கது,

இனி,

"குழந்தாய்! என் கைக்குள் வந்திடடா! என்று கையை நீட்டி அழைத்தால் முருகன் கைக்குள் வந்து விடுவான்" என்று சொன்னாரே சுவாமிகள்,

"நீ அழைத்தாயா, முருகன் வந்தானா?"

என்று நானே என்னை அடிக்கடி கேட்டுக்கொள்கிறேன்.

"மண்ணளந்திடு மாயனும் வனச மேலவனும்,
எண்ணரும் பகல் தேடியும் காணகிலாதிருந்த,
பண்ணவன் நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
உண்ணிறைந்த பேரருளினான், மதலையாய் உதித்த."

வனும்,

" வேதக்காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலான், புதியரில் புதியன்,
மூதக்கார்க்கு மூதக்கவன், முடிவிற்கு முடிவாய்
ஆதிக்கு ஆதியாய், உயிர்க்கு உயிராய் நின்ற அமலனும் "

ஆகிய முருகப் பிரான்

"குப்பாச வாழ்க்கையிற் கூத்தாடும் ஐவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்ச"

னாகிய எனக்குக் காட்சியளித்துக் கைக்குள் வந்திடுவான் என்று எண்ணுவது எவ்வளவு சிரிப்புக்குரிய காரியமாகும். யோக சுவாமிகள், உலகுக்கு வழிகாட்ட வந்தவதரித்த பெருந்தகையர்; தெய்வ வழிபாட்டில் நாட்டங்கொண்டு, பூசையறையும் வகுத்துக் கொண்டு, நான் தொடங்கிய நெறியில் என்னை ஊக்குவிக்க கருணைகூர்ந்து, முருகனிடம் ஆற்றுப்படுத்தினார். அதை அறிவிலியாகிய யான் அசட்டை செய்து விட்டமை என் துர்ப்பாக்கியம். நிலையில்லாத உலகபோக போக்கியங்களிலுண்டாகிய பற்று, என்னை வேறு வழிகளில் இழுத்துச் சென்று விட்டது. முருகனுக்கு வழிபாடும் நடந்ததுதான். ஆனால் என் புலன்கள் அப்போதைய சூழ் நிலையில், அவ் வழிபாட்டில் ஊன்றித்திளைத்து நிற்கவில்லை, யான் முன் செய்த தவம் அவ்வளவுதான்.

"கையொன்று செய்ய, விழியொன்று நாடக், கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப், புலால் கமழும்
மெய்யொன்று சாரச், செவியொன்று கேட்க, விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே."

என்று பட்டினத்தடிகளே அழுதாரென்றால், நம் போன்றவர்களின் பூசனை எம்மாத்திரம்?

"ஓரவொட்டார், ஒன்றை உன்ன வொட்டார்
மலரிட்டுனது தாள் சேரவொட்டார்,
ஐவர், செய்வதென் யான்?"

என்று புலம்பினார் அருணகிரிநாதர்.

"காடுங் கரையும் மனக் குரங்குகால்
விட்டோட அதன் பிறகே ஓடும்"

குணமுடைய நாங்கள்,

"அப்போது மலர்தூவி ஐம்புலனுமகத்தடக்கி
யெப்போது மினியானை எம்மனத்தே வைத்து"

வழிபடும் ஆற்றல் உடையவர்களாகப் பசாங்குபண்ணிக் கொள்வதாற் கிடைக்கும் பயன் என்ன ?

அப்படியானால் யோக சுவாமிகளின் வாக்கியம் பொய்யாகுமோ ? இல்லை.

" குழந்தாய் என் கைக்குள் வந்திடடா " என்று முருகனை அழைத்தால் வருவான் என்பது திண்ணம். எப்போ ? அழைக்கும் முறையில் அழைத்தால்,

"சீலமின்றி, நோன்பின்றிச் செறிவேயின்றி
அறிவின்றி தோலின் பாவைக் கூத்தாட்டாய்,"

உலக விவகாரங்களில் அழுந்திச் சுழன்று திரிந்துகொண்டு, அதே நேரத்தில்

" வா வா, முருகா ஓடிவா முருகா,"

என்று பஜனை செய்வதில் அர்த்தமில்லை.

நாம் வழிபடு தெய்வம் எங்கள் அழைப்புக்குரலுக்குகிரங்கி வெளிப்பட்டு அருள் செய்யும் என்று, வாழையடி வாழையாக இந்நிலவுலகில் தோன்றிய ஞானிகள், யோகிகள், சித்தர்கள், நாயன்மார்கள் ஆகியோர் உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். இஃது எப்படிக் கைகூடும் என்று வழிவகைகளையும் வகுத்திருக்கிறார்கள்.

"சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்
அவன் எனை ஆட்கொண்டளித்திடுமாகில் அவன்றனை யான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத்தால்
இவன் எனைப் பன்னாளழைப் பொழியான் என்றெதிர்படுமே"

~ அப்பர் தேவாரம் ~

"ஒன்றியிருந்து நினைமின்கள், உந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காகச்,
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்,

என்று வந்தாயென்னும் எம்பெருமான் றன் திருக்குறிப்பே"

~ அப்பர் தேவாரம் ~

"என்பே விறகா இறைச்சியறுத்திட்டு
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என் பொன் மணியினையெய்த வொண்ணாதே"

~ திருமூலர் ~

"வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

~ மணிவாசகம் ~

இப் பிறவியிலில்லாவிட்டாலும், அடுத்த எப்போ ஒரு பிறவியில் முருகன் என் கைக்குள் வருவான் என்னும் நம்பிக்கை என்னிடத்திலுண்டு. இந்தத் திடமான நம்பிக்கை என்னிடத்து உண்டாக்கியவர் யோக சுவாமிகள்.

## 6. பிரபஞ்சம் இறைவன் மார்பில் ஒரு தங்கப் பதக்கம்

1927-ம் ஆண்டு, எனது இருபத்தேழாவது வயதில் எனது முதல் விவாகம் நடந்தது, இல்லற வாழ்க்கை முறையாக ஒரு மூன்று ஆண்டுகள்தான் நடந்திருக்கும். விதியை, வெல்ல யாரால் முடியும். எனது வாழ்க்கைத் துணைக்குச் சுவாசப்பையில் ஒரு கட்டு ஏற்பட்டதன் விளைவாக, மாறி மாறி வீட்டிலும் வைத்தியசாலையிலுமாகப் பல ஆண்டு மருந்து கொடுக்க வேண்டியதாயிற்று. அதனால் நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வர நேர்ந்தது. அப்போதெல்லாம், கொழும்புத்துறைக்குச் சென்று யோகசுவாமிகளைத் தரிசிப்பதில் தவறுவதில்லை. அவர் போதித்த வாக்கியமாகிய

"அது எப்பவோ முடிந்த காரியம்"

என்பது என் மனத்தில் ஊன்றிப் பதிந்திருந்தமையால், என் மனைவியின் நோயைக் குறித்து நான் அதிகம் கவலைப்படவில்லை. சுவாமிகளுக்கும் அதைப்பற்றி ஒருபோதும் சொன்னதுமில்லை.

யோக சுவாமிகளை நான் அறிந்துகொண்டநாள் முதல் அவரின் மறைவு வரைக்கும், எத்தனையோ தடவை அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தும். ஒருபோதும் என் கவலைகளையோ. குறைகளையோ, துன்பங்களையோ, சுவாமிகளிடம் முறையிட நான் எள்ளளவும் எண்ணவில்லை.

இவ்வுலக வாழ்க்கையில் என் சுயநலத்துக்காக, அவரை, நான் ஒன்றும் கேட்காதது மாத்திரமல்ல என் மனத்தில் தானும் கேட்க வேண்டுமென்ற எண்ணமோ ஆசையோ எழவுமில்லை, கவலைகள் தலைக்காட்டும் போதெல்லாம்,

"அது அப்படித்தான்"

"அது எப்பவோ முடிந்த காரியம்"

என்ற சுலோகங்களை நினைவு கூர்ந்து நெஞ்சைத் தேற்றிக் கொள்ள முடிந்தது.

"யான், எனது, என்று அவரவரைக் கூத்தாட்டுவான்" ஒருவனிருக்கின்றான் என்பதையும்,

" களிம்பு தோய்ந்த செம்பெனவுனை மருவும்
கருமை கூர் மலம்
பளிங்கு போன்றதுன் தன்மை, அம் மலத்தின்
பற்றினாலுடல் பலவெடுத்துழன்றாய்,
வருங்குலாம் புவனந்தொறும், நீ செய் வல்
வினைப்பயன், வருமுறை நெறியே,
அளந்து நாம் தர, நுகர்ந்து, மேல்நுகர்வு
மாக்கியே திரிந்தனை, மனவழுக்கால் "

என்று மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் குருந்த மர நிழலில் குருமூர்த்தியாக எழுந்தருளி வந்த இறைவன் உபதேசித்ததையும், அடிக்கடி மனத்துக்கு ஞாபகப்படுத்திக் கொண்டால், கவலைக்கு இடமிராது என்பதை ஓரளவு உணர்ந்திருந்தேன்.

யோக சுவாமிகளைத் தரிசிப்பதாலும் அவர்களின் திருவாய் மொழிகளைக் கேட்பதாலும், உண்டாகும் மனச்சாந்தியையும் இன்பத்தையும் பெறுவதை நாடியே நான் அவரிடம் செல்வதன்றி, வேறு நோக்கங்கள் கிஞ்சித்தேனுமிருந்ததில்லை. சில நாட்களில் சுவாமி பல பொது விஷயங்களைப் பற்றியெல்லோருடனும் சம்பாஷிக்கிறதுண்டு. அவ்வேளைகளில் அவர் கேட்பதற்கு விடையாக ஏதும் சொல்வதேயன்றி நாமாகவே உலக விஷயங்களைக் குறித்து யாதும் அவரோடு பேசியதில்லை.

ஒருநாள், யாழ்ப்பாணத்தில் நான் இருந்த பொழுது, கொழும்புத்துறைக்குப் போனேன். சுவாமி தன் ஆச்சிரமத்துப் படலைக்கு வெளியே நின்றார். நான் சென்ற காரைக் கண்டதும்:

"நான் உன்னைத் தானே பார்த்துக்கொண்டு நிற்கிறேன், வா உதாலை போவோம்"

என்று சொல்லிக்கொண்டு காரில் ஏறினார், நான் யாதும் பேசாது அவர் காட்டிய வழி வழியே காரை ஓட்டினேன். சுவாமி:

"மனுஷிக்கு இப்போது எப்படிச் சுகம்?"

என்றார்.

"இருந்தபடியேதானிருக்கு, சுவாமி சுகமாகிறதென்று சொல்வதற்கு இல்லை."

என்று அமைதியாகப் பதிலளித்தேன்.

"அதைப்பற்றி உனக்குக் கவலையா?"

"தொடக்கத்தில் ஒருமாதிரித்தானிருந்தது, சுவாமி : ஆனால் இப்போ நான் அவ்வளவு கவலைப்படுவதில்லை."

"அப்படிச் சொல்லாதே, துக்கமிருக்க வேண்டும். துக்கம்தான் மனிதனின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. துன்பம் வளர்ச்சியைத் தருவது, அதனாலேதான் மகான்கள் 'துன்பத்தை வர அழை' என்றார்கள்."

நான் சுவாமியின் அமிர்தவார்த்தைகளை உற்றுக் கேட்டுக்கொண்டேனேயல்லாமல் மறு வார்த்தை பேசவில்லை. கார் வெகுதூரம் போய்விட்டது, அளவெட்டிக் கூடாகப் போகும் பொழுது "நிப்பாட்டு" என்றார். ஒரன்பர் வீட்டுப் படலைக்கு முன் காரில் இருந்தபடியே வீட்டுக்குரியவரின் பேரைச் சொல்லிக் கூப்பிட்டார். அது கேட்ட அன்பர் படலைக்குச் சமீபமாக ஓடி வந்து சேருமுன்:

"இருக்கிறாயோ என்று பார்த்தனான். ஆ சரி, இரு; நான் வைரமுத்துவோடு ஒரு சுற்றுப் போடுகிறேன்."

கார் சென்றது; சுவாமி காட்டிய வழியே போகக் கட்டுடை வந்தது.

"இங்கிணை தானே உன் மனைவியின் வீடு ?" என்று கேட்டார் சுவாமி.

"ஓம், சுவாமி கிட்டத்தான்."

என்றேன்.

"வீட்டடியில் நிற்பாட்டு"

வீடு வந்ததும் நிற்பாட்டினேன். இருவரும் இறங்கி உள்ளே போனோம். சுவாமி வெளி விறாந்தையில், ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார், வீட்டினுள் புகுந்தேன் நான்.

நோயாளிக்குக் கடும் சுரம். எழுந்து வந்து சுவாமிகளைத் தரிசிக்க முடியாத நிலை, எனது மைத்துனிகள் இருவர் சுவாமியின் முன் சென்று தரையில் படிந்து பணிந்தார்கள். அவர்களைப் பார்த்து சுவாமி சில புத்திமதிகள் சொல்லத் தொடங்கினார்:

"குடியிருக்கும் வீடும் ஒரு கோவில் தான், அதைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். அடிக்கடி தூசு போக்கிக், கூட்டிக் கழுவி, புனிதப் படுத்திக் கொள்ளவேண்டும். நீங்கள் மாத்திரமல்ல இங்கேயிருப்பது; உங்களுடன் கூடக் கடவுளும் இங்கிருக்கிறார் என்பதை மறந்து விடக் கூடாது. சமையலறையை மிகமிகத் துப்புரவாக வைத்துக் கொள்ளுங்கள், சமையல் தொடங்குமுன், கால்முகங்கழுவி வீபூதியணிந்து கொண்டு, அக்கினியை மூட்டியவுடன் அக்கினி பகவானைக் கைகூப்பி வழிபட்டு, யாகம் செய்கின்றோமென மனத்தில் நினைத்துக் கொண்டு பயபக்தியோடு சமையல் செய்ய வேண்டும்........."

என்றிப்படியே சுவாமி பேசிக்கொண்டிருக்கும் போது; எனது மாமனார், பின் விறாந்தையில் யாருடனேயோ உரத்துச் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தது எனக்குப் பரபரப்பைத் தந்தது, உடனே நான் உட்சென்று,

"ஒரு பெரியவர் வந்திருக்கிறார்; தயவு செய்து மெல்லப் பேசுங்கள்"

என்று புத்தி கூறிவிட்டு வந்ததைச் சுவாமி கவனித்திருக்க வேண்டும். ஏனெனில், நாமிருவரும் திரும்பக் காருக்கு வந்தபோது;

"யாரங்கே உரத்துக் கதைத்தது?"

என்றார் சுவாமி.

"அது என் மாமனார்; அவர் ஒரு மாதிரியானவர், கோயில், குளம், தெய்வம் என்னும் நம்பிக்கை அதிகமில்லாதவர்,"

என்று மெல்லத் தயக்கத்தோடு விடையளித்தேன்.

"என்ன! ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? இந்தப் பிரபஞ்சம் இறைவனின் மார்பில் ஒரு தங்கப்பதக்கம். அதில் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் தான் உயிர்கள், அந்தக் கற்கள் எல்லாம் ஒரே வெள்ளை

நிறமாகவிருப்பின் பதக்கம் அழகாயிராது என்றெண்ணி இறைவன் இடையிடையே, நீலம், பச்சை, கறுப்புக்கற்களையும் பதித்திருக்கிறான். அதனாற்றானே நாம் வாழுமிவ்வுலகம் இவ்வளவு அற்புதமாயும் அழகாயுமிருக்கு, அதைக் குறை கூறலாமா?"

"சரிதான் சுவாமி; என் அறியாமையினால் குறைவாகக் கூறிவிட்டேன்" என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன் நான்.

சுவாமிகளைக் கொழும்புத் துறையில் இறக்கியபின், வீடு திரும்பியபோது அங்கு உள்ளவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஆரவாரப்படுவதைக் கண்டேன். பல நாட்களாக மனைவியைப் பீடித்திருந்த கடும்சுரம் படிப்படியாக இறங்கி இயல்பான வெப்பநிலைக்கு வந்து விட்டதாகவும், அங்கு வந்திருந்தது யாரென விசாரித்ததாகவும், அதிசயத்துடன் அறிவித்தார்கள். எனக்கு அஃது அதிசயமாயிருக்கவில்லை. சுவாமி காரில் வரும்பொழுது என்னுடன் பேசிக்கொண்ட விஷயங்களும், வீட்டடியில் காரை நிறுத்து என்றமையும் எதற்காக இந்தப் பயணத்தை மேற் கொண்டாரென்பதும், எனக்கு விளங்கியது. ஒரு தவ சிரேஷ்டர் ஓர் இல்லத்திற்குத் தாமாகவே எழுந்தருளினால் ஏதோ ஒருபயன் இல்லாதிருக்குமா?

சிறிது நேரம் ஓரிடத்தமர்ந்து, சுவாமி தன் ஆச்சிரமத்துக்குத் திரும்பிப் போகும்போது கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்த முறையைப் பற்றிச் செய்த உபதேசத்தைச் சிந்திக்கலானேன். ஆண்டவனின் படைப்பில் குறையேது, குற்றமேது? எல்லாம் சரியாகத்தானேயிருக்கும். இது குற்றம், இது குணம், என்று பகுத்துப் பார்த்தல் எங்கள் அறியாமையினால் நிகழ்வதன்றோ! இந்த அறியாமையைப் போக்கத்தானே, சுவாமிகள்:

"இது அருமையான உலகம்"

"ஒரு பொல்லாப்புமில்லை"

என்ற அமிர்த வாக்கியங்களை அடிக்கடி எல்லோருக்கும் சொல்வது. இவற்றை எத்தனை தரம் கேட்டிருந்தாலும் அற்பராகிய நாங்கள், மற்றவர்களில் குறை குற்றம் காணுவதில்தானே வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழிக்கின்றோம். இருவர் தெருவிலோ திண்ணையிலோ சந்தித்தால் மூன்றாமவரின் குறை குற்றங்களைப் பற்றித்தானே பேசிக்கொள்வது பலர் வழக்கம்.

இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பரம்பொருள் அதைக் காத்தும், அழித்தும், மறைத்தும், அருளலையும் செய்கின்றது. இப்பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் நிலையில் அப்பரம்பொருள் பிரபஞ்சத்திலுள்ள சகல சராசரங்களுடனும்

ஒன்றாயும், வேறாயும், உடனாயும், கலந்து அவற்றை வியாபித்து, இயக்க வேண்டியதாகிறது.

"நிற்பனவும் சலிப்பனவும் சைவம்" என்பதும்,

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"

என்பதும் சித்தாந்தம். ஆகவே, பிரபஞ்சம் இயங்குவது அவனது ஆணைப்படி என்பது வெளிப்படை.

"வானாகி மண்ணாகி, வளியாகி, ஒளியாகி,
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்,
கோனாகி, யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி, நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"

என்கிறார் மாணிக்கவாசகர்.

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
யோட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே"

என்கின்றார் திருநாவுக்கரசர்.

"சூரியன் வருவது யாராலே, தூமதி தவழ்வது யாராலே, விண்மீன் மினுவது யாராலே, வெய்யிலெறிப்பது யாராலே, கண்ணிணை காண்பது யாராலே, காற்றுமடிப்பது யாராலே, தண்ணீர் பெருகுதல் யாராலே, தக்கோர் புகழ்வது யாராலே , பூமிசுழல்வது யாராலே, பூக்கள் மலர்வது யாராலே, கால்கள் நடப்பது யாராலே, கைகளெடுப்பது யாராலே, எண்ணிப்பார் நீயறிவாயே, எல்லாஞ் சிவன்செயல் குறியாயே,"

என்கிறார் யோக சுவாமிகள்.

"நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை நன்னார் தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமே? அந்தத் தன்மையே போல்,
உன்னால் யானும் திரிவதல்லால், மற்றுனைப் பிரிந்தால்,
என்னாலிங்காவதுண்டோ, இறைவா, கச்சியேகம்பனே"

என்கின்றார் பட்டினத்துப் பிள்ளையார்.

"எங்குந் திருமேனி, எங்கும் சிவசக்தி,
எங்கும் சிதம்பரம், எங்கும் திருநட்டம்,
எங்கும் சிவமாய் இருந்தலால், எங்கெங்கும்
தங்கும் சிவன் அருள் தன் விளையாட்டே"

என்கிறார் திருமூலர்.

இப்படியே உலகிலுள்ள சகல சமயங்களும், இப்பிரபஞ்சம் ஒரு பரமபிதாவின் வல்லமைக்கு உட்பட்டதாய், அவன் ஆணைக்கடங்கியே இயங்குகின்றது என்று பறை சாற்றுகின்றன. சகல ஞானிகளும், இருடிகளும், அடியார் கூட்டங்களும் தேடிக்கண்டு கொண்ட உண்மையுமிதுவே, அப்படியாயின், உலகத்தில் பிழை, நீதியீனம், குறைபாடு எப்படியிருக்க முடியும்? என்றும், எங்கும், எப்போதும் தன் ஆணையைத் தவறாது செலுத்திக் கொண்டிருக்கும் கருணாமூர்த்தியாகிய பரம்பொருளின் முன்னிலையில் பிழையோ நீதியீனமோ நடக்க முடியுமா? அப்படி நடக்குமாயின், இறைவனின் இறைமைக்கு என்னாகும்?

ஆண்டவனின் முழுமுதல் தன்மையாகிய அரும்பெருந்தத்துவத்தை, ஆணித்தரமாக விளக்குவதற்கல்லவா,

"முழுதுமுண்மை"; "அது எப்பவோ முடிந்த காரியம்"
"ஒரு பொல்லாப்புமில்லை"

என்னும் மகா வாக்கியங்களை யோக சுவாமிகள் அடிக்கடி சொல்லிக்கொள்வது. அற்ப அறிவுடைய நாங்கள், இந்த உண்மையையுணராமையினாலன்றோ இதுபிழை, அதுசரி; இவன் கெட்டவன், அவன் நல்லவன்; உலகமே கெட்டுப்போனது; என்று சதா குற்றங்காணுவதிலும் குறை கூறுவதிலும் பொழுதைப் போக்குகின்றோம், நாம்.

மனிதன் உலகைப் பார்க்கும்போது, தன் பிரதிவிம்பத்தையே காணுகின்றான், அவனுடைய அறியாமை காரணமாக அவன் காண்பதெல்லாம், தலைகீழாகவே அவனுக்குத் தென்படுகின்றது, இஃது அவனின் ஊனக் கண்பார்வை. ஞானக்கண் கொண்டு பார்க்கும் ஆற்றலைப் பெற்ற அன்று தான், அவன் உள்ளதை உள்ளபடியறிய முடியும். அன்றுதான் உலகில் பிழை நடப்பதில்லை என்பதை உணரமுடியும். அன்று என்று தான் வருமோ?

## 7. சீர்திருத்தவாதியும் சவர்க்காரக் கட்டியும்

ஒரு முறை, கொழும்புத்துறையில் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் சில அடியார்கள் கூடியிருந்தபொழுது யானும் சென்று சேர்ந்தேன், அமைதியாக வெளியே நின்று கொண்டிருந்த என்னை,

"அதார்! வைரமுத்துவா, உள்ளே வா"

என்று அனுமதித்துவிட்டு, அங்கிருந்தவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்துவது போல

"இவர் நல்ல முயற்சியாளர்; சும்மாவிருக்காது ஏதும் செய்து கொண்டே இருப்பார். ஒரு தொண்டன்."

என்றார் சுவாமி. இப்பேச்சை முடித்துவிட்டு, முன்போல் மற்றவர்களுடன் பல பொது விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்து சில நிமிடங்களின் பின்,

"உலகத்தைத் திருத்த முற்படுவோர் சோப் கட்டிகள், புத்தர் திருத்திப் போட்டாரா? கிறிஸ்து திருத்திப் போட்டாரா? முகம்மது திருத்திப் போட்டாரா?"

என்று வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்தார். இஃது எனக்குக் குறிப்பாகச் சொன்னதென நான் உடனே உணர்ந்து கொண்டேன். இருந்தும், அப்போது அந்த வாக்கியத்தின் அடிப்படைத் தத்துவத்தை நான் சிந்திக்கவில்லை; என் மனத்தில் இருந்த பிரேமை நீங்கிவிடவுமில்லை. ஏதோ என்னாலும் சில காரியஞ் செய்துவிட முடியுமென்று நினைத்து, சமயத் தொண்டென்றும் கல்வித்தொண்டென்றும், சமூகத் தொண்டென்றும் சொல்லிக் கொண்டு காலத்தையும் சக்தியையும் பொருளையும் செலவு செய்வதில் பல ஆண்டுகள் ஈடுபட்டு வந்தேன். காலஞ்செல்லச் செல்லத்தான் சுவாமிகள் அன்று திருவாய் மொழிந்த உபதேசத்தின் தாற்பரியம் எனக்கு உதயமானது.

சோப்கட்டி நல்ல நோக்கத்தோடுதான் மனிதனின் உடம்பைத் தேய்க்கிறது; அவன் அழுக்கைப் போக்கத்தான் தன்னைத் தியாகஞ் செய்கிறது. ஆனால் மனிதனின் உடம்பின் அழுக்கு நீங்கியபாடில்லை. நித்தமும் அழுக்குப் படிந்தே வருகிறது. சோப்கட்டியின் நிலை என்னவாயிற்று? மெல்ல மெல்லவாகத் தேய்ந்து தேய்ந்து ஈற்றில் முற்றாக மறைந்தேவிடுகிறது. சீர்திருத்தவாதிகளின் முடிவும் இப்படியேதானாகும். எவ்வளவு பொருத்தமான ஓர் உவமை! சுவாமிகள் அன்று மறைமுகமாகச் சொன்னதன் உண்மையைப் பல ஆண்டுகள் பட்டகஷ்டத்தால் பெற்ற அனுபவத்தின்பின் தான் நான் நன்கு உணர்ந்து கொண்டேன்.

உலகத்தை திருத்த யாமார்? எங்களதோ இங்கு அதிகாரம்? எல்லாம் வல்ல முற்றறிவுடைய இறைவன் படைத்த உலகத்தைச், சிற்றறிவுஞ் சிறு தொழிலுமுடைய மனிதன் திருத்த முற்படுவது எவ்வளவு அறியாமை? சுவாமிகள் சொன்னதுபோல, யார்தான் இதுவரை உலகத்தைத் திருத்திப்போட்டார்கள்? உலகம் இருந்தபடியேதானிருக்கிறது. ஆண்டவன் உலகம் எப்படி நடக்கவேண்டுமென்று திருவுளங்கொள்ளுகிறானோ, அப்படியேதான் நடக்கிறது! தன்னாலாகாததென்று ஒன்றை எம்மிடம் அவன் ஒப்படைத்துவிடவில்லை, மனிதனோ அற்ப பிராணி, யான் எனது, என்னும் அகங்கார மமகாரங்களுக்கு அடிமை. இந்த அடிமைத் தனத்தினில், அறியாமையில் உலகத்தைத் திருத்த தன்னால், முடியுமென்று நினைக்கிறான்.

* * *

மனிதனால் சும்மாவிருக்க முடியாது, அவன் ஏதோ கருமம் செய்தபடியே தானிருப்பான், அஃது அவனது சுபாவம், உலகத்திலுள்ள சகல சராசரங்களும் தொழிற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. அதே போல மனிதனும் தொழில் செய்தேயாகவேண்டும். மனிதன் செயல் இரு வகையானது, ஒன்று காமிய கர்மம், மற்றது நிஷ்காமிய கர்மம், முன்னையது பலன் கருதியது, பின்னையது, பலன் கருதாதது, முன்னையது ஆன்மாவைப் பந்திப்பது, பிறவிக்கு வித்தாவது, பின்னையது தூய்மையானது, ஆத்மீகத்தை வளர்ப்பது, தெய்வீகத்துக்கு வழிகாட்டுவது. பலன் கருதாது செயல் செய்வது கர்மயோகம். பிறரைத் திருத்துகிறேன், திருத்துவதற்காகத் தொழிற்படுகிறேன், என்று நினைத்து எவன் ஒருவன் செயல்படுகிறானோ அவனுக்குச் சவர்க்காரக் கட்டியின் கதிதான் கிடைக்கும். நிஷ்காமிய கர்மந்தான் தொண்டெனப்படுவது, தொண்டுணர்வை அளிப்பது பக்தி. பக்தியின் கனிவுதான் தொண்டாகப் பரிணமிப்பது, பக்தியிலேதான் தியாகவுணர்ச்சி ஏற்படும். கண்ணப்பருக்குப் பக்தியிருந்தமையினால்தான் கண்களைத் தியாகஞ் செய்தார்.

பக்தியென்பது இயல்பாகவே, சகலசீவராசிகளிடத்தும் பயன் கருதாது எழுகின்ற அன்பு, சீவராசிகளிடத்து அன்பில்லாதவன் இறைவனிடத்து அன்புள்ளவன் என்பது பொய் வார்த்தை. இறைவனிடத்தில் பக்தி செய்பவன். இறைவன் உயிர்க்குயிராய் எழுந்தருளியிருக்கும் உயிர் வர்க்கம் அத்தனையிலும் அன்புடையவனாவான். உயிரும் உடலும் போல, மலரும் மணமும்போல, பக்தியும் தொண்டும் அமைகின்றன. ஆகவே பக்தியிலிருந்து எழுகின்றதொண்டு, தன்னலமற்றதாய், இறைபணியாய், யாதொரு பலனும் கருதாது செய்யப்படுவதாய், இம்மையில் சிறந்த நல்லறமாய், மறுமையில் பேரின்ப வாழ்வுக்கு வித்தாய் பலனளிக்குமென்பதில் ஐயமேயில்லை.

தற்காலச் சூழ்நிலையில், தன்னலமற்ற, நிஷ்காமியதொண்டு மனித குலத்திடையே காண்டல் மிகமிக அரிது. மக்களுக்குப் பரோபகாரம் செய்கிறோம், பணி செய்கிறோம், சமுதாயத்தைச் சீர்திருத்துகிறோம், என்று கங்கணங் கட்டிக் கொண்டு ஆரவாரஞ் செய்பவர்களுடைய அந்தரங்க உள்ளத்தில், பொன்னோ, பொருளோ, புகழோ செல்வாக்கோ, ஏதோவொன்று மறைந்து நின்று அவர்களை ஆட்டிப் படைப்பதை உற்று நோக்குபவர் காணாதிருக்க முடியாது, அதனாலே தான் சுவாமிகள், சீர்திருத்தவாதிகளையும், உலகத்துக்கு வழிகாட்ட என்னால் தான் முடியும் என முற்படுபவர்களையும் சவர்க்காரகட்டிக்கு உவமானமாகக் காட்டி எச்சரித்தது. இஃது ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

## 8 . எட்டிலும் எண்பதிலும்

இயன்றவரை சுவாமிகளை தனிமையில் கண்டு தரிசிப்பதில் தான் எனக்கு விருப்பம். பலர் கூடியிருக்கும் நேரங்களில், அவர் அமைதியாகவிருந்து ஆழ்ந்த கருத்துக்களைப் போதிப்பது குறைவு. பலவிதமான மனோநிலையையுடைய பலர் குழுமியிருக்கும் சூழ்நிலை, நற்சிந்தனைக்குப் பொருந்தாது இருக்கலாம். தனிமை நிலையிற் தான் சுவாமி சந்நிதானத்தில் எல்லையற்ற இன்பத்தைக் காணலாம். அருமையான தத்துவங்களை, மிக எளிதான உவமைகள் மூலம், தெளிவாக விளக்குவார். ஒரு நாள் பலரும் வந்து கூடுமுன் தனிமையில் சுவாமிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று அவர் ஏதோ ஒன்றைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு ஆழ்ந்த கவலையிலிருந்தது போலத் தெரிந்தது. என்னை உட்கார வைத்துவிட்டு, சிறிது நேரம் ஒன்றும் பேசாது தலையைக் குனிந்துகொண்டேயிருந்தார். நிமிர்ந்ததும்:

"எட்டு வயதிலே சீலைதோய்க்கவும், செம்பு மினுக்கவும் தொடங்கினவர்கள், எண்பதிலும் அதைத்தானே செய்கிறார்கள்,"

என்று பரிதாபத்துடன் தனக்குள்ளே பேசிக்கொள்வது போல, மிக மெல்லச் சொன்னார். சொல்லிவிட்டுத் திரும்பவும் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டார். வழக்கமாய் அவரிடங்காணப்படும் குதூகலமான பேச்சும், மலர்ந்த முகமும், அன்று காணப்படவில்லை, அவர் சொன்ன வாக்கியத்திலிருந்து அவரின் உள்ளக்கவலை, யாழ்பாண மக்களின் போக்கைக் குறித்து எழுந்ததென்பதை நான் யூகித்துக்கொண்டேன், சுவாமி எழுந்தார்;

"நீ வா, பின் சந்திப்போம்"

என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார், அன்று வெகுதூரம் சிந்தனையில்

ஆழ்ந்துகொண்டு நடந்திருப்பார் என நினைக்கின்றேன். யோக சுவாமிகளின் குரு செல்லப்பாச் சுவாமிகள் சரி, யோக சுவாமிகள் சரி, மனக் குழப்பம் ஏற்படும் நேரத்தில் , மிக விரைந்து 20, 30 மைல் தூரம் நடப்பது வழக்கமெனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சுவாமிகள் சொன்ன வாக்கியத்தை மனத்தில் இருத்திக்கொண்டு வீடு திரும்பிய யான், அதைப் பற்றிச் சிந்தியாதிருக்க முடியவில்லை. சுவாமிக்கு இவ்வளவில் சஞ்சலத்தை உண்டாக்கிய விஷயத்தை எப்படி மறக்கமுடியும். அவரின் உள்ளக் கிடக்கையின் எதிரொலியாக வெளிவந்த வாக்கியத்தில் எவ்வளவு உண்மை பொதிந்திருந்தது! ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது மக்களின் சமயம், வெளி வேடத்திலேயே தொடங்கி வெளிவேடத்திலேயே முடிந்து விடுகின்றது. சீலை தோய்ப்பதிலும், செம்பு மினுக்குவதிலும் சமயம் தங்கியிருப்பதாக எண்ணிவிடுகிறார்கள். எந்தவழிபாடும் உள்ளத்தூய்மையை வளர்க்கவும், பஞ்சப் புலன்களின் சேட்டைகளைத் கட்டுப்படுத்தவும், நிலையில்லாதனவாகிய உலக விவகாரங்களிலுள்ள பற்றைக் குறைக்கவும், இறையன்பைப் பெருக்கவும் உதவ வேண்டும். இவற்றையடைவதற்கான முயற்சியின் ஆரம்பப்படிதான் சுவாமிகளால் விமரிசையாகக் குறிப்பிடப்பட்ட,

"சீலை தோய்ப்பதும், செம்பு மினுக்குவதும்"

ஆகிய வெளி ஆசாரங்களும் கிரியைகளும். உள்ளம் சம்பந்தப்படாது, உடம்பினால் மாத்திரம், செய்யப்படும் வழிபாட்டினால் யாது பயன்? ஒருபோது அது தேக அப்பியாசமாகலாம். வழிபாடு காயம், வாக்கு , மனம் ஆகிய மூன்றாலும் செய்யப்படுவது.

பஞ்சாட்சரத்தை ஓதுவதனால் நன்னெறி கைகூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை ஓதும் முறையைச் சொல்லவந்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்,

"காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்கி"

ஓத வேண்டுமென்கிறார். காதலாகிக் கசிதல் உள்ளத்தில் நிகழ்வது கண்ணீர் மல்குதல் காயத்தில் நிகழ்வது; ஓதுதல் வாக்கில் நிகழ்வது, இவை மூன்றும் ஒன்றித்து நிகழ்ந்தக்கால் பெறப்படும் பயன் தான் "நன்னெறி" யாகும். அன்றிக் கிளிப்பிள்ளை போல வாயினால் மாத்திரம் எத்தனை முறைதான் பஞ்சாட்சரத்தைச் செபித்தாலும் நன்னெறியாகிய பயனில்லை என்க. வைத்தியன் சொன்ன மருந்தை விதிப்படி உட்கொள்ளாது அதன் பெயரை ஆயிரத்தெட்டுத்தரந்தான் செபித்தாலும்

நோய் மாறுமோ?

வழிபாட்டில் முக்கியமாகச் சம்பந்தப்பட வேண்டியது உள்ளம் (மனம்).

"அழுதாலுன்னைப் பெறலாமே"

என்று மணிவாசகர் புலம்பியதன் பொருளும் இதுவே. காயத்தின் செயலாகிய அழுகை உள்ளத்தெழுகின்ற அளவற்ற காதல் காரணமாக உண்டாகும் நெகிழ்ச்சியின் பிரதி விம்பம். உள்ளத்து அன்பில்லாது செய்யப்படும் சம்பிரதாயங்கள் யாவும் புறக்குடத்தில் வார்த்த தண்ணீர்போலப் பயனற்றனவாகும்.

"கையொன்று செய்ய, விழியொன்று நாடக்,
கருத்தொன்று எண்ணப்.
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால் கமழும்
மெய்யொன்று சாரச், செவியொன்று கேட்க,
விரும்பும் யான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய்?
வினைதீர்ப்பவனே!"

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கு நாம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அருமையாகக் கிடைத்த இந்த மானுட தேகம் விழும்வரையும்,

"சீலை தோய்ப்பதிலும், செம்பு மினுக்குவதிலும்"

காலத்தைப் போக்கினால், இறைவன் திருவருள் கைகூடுவதெப்போது? மனிதன் வாளா பிறந்து இறந்து மடிகின்றானே என்ற நினைப்பே, கருணைக் கடலாகிய யோக சுவாமிகளின் நெஞ்சக் கவலையைத் தூண்டியதென்பது வெளிப்படை.

இந்தக் கோயில், அந்தக் கோயில், என்று மாறி மாறிப் பறந்தடித்துத் திரிகின்ற யாழ்ப்பாணத்து மக்கள், கோயிலுக்குச் சென்றும் அங்கு அமைதியாக மனமொன்றி நின்று வழிபட முடியாது வேடிக்கையில் புலன்களை ஓடவிடும் அம்மக்கள், தாக சாந்திக்குக் கானல் நீரை நாடி அலைபவர் போலாகின்றனர். இவர்கள் யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாக்களைப் பாராயணஞ் செய்வார்களாயின் மேலான பலனைப் பெறுவார்கள். இறைவழிபாடு வெறுஞ் சம்பிரதாயங்களிலும், கிரியைகளிலும் மட்டுந்தங்கியிருக்கவில்லை. உள் அன்பு இல்லாப் புறவழிபாடு மருந்தைவிட்டு அநுமானத்தை மாத்திரம் அருந்துவதற்குச் சமானமாகும்.

* * *

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் இறைவன் தன் திருவடிகளைக் குறுகிப் பணிந்து, பிறவிப்பயனைப் பெறக் கற்றுக் கொண்டோமில்லையே!

“முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ !
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பக்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே.”

இது யோக சுவாமிகளின் திவ்விய திருவாய்மொழிகள்.

“புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே, இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்,
திருப் பெருந்துறையுறைவாய்! திருமாலாம்
அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்,
அவனியிற் புகுந்தெமையாட்கொள்ள வல்லாய்,
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே.”

என்று பூவுலகிற் பிறவியெடுத்தலின் பெருமையை வாயாரப் புகழ்ந்து பாடுகின்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. இவ்வாறு அருமையாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை, வெளிவேடங்களிலும், விண்ணாணங்களிலும் வீணாக்கிவிடுதல் எவ்வளவு அறியாமை!

“வித்தாரமாகக் கதை பேசிக்கொள்ளுவோம், வீணருடன் கூடி விளையாடிக்கொள்வோம், சக்தி சிவம் ஒன்றான தன்மையைக்

காண்கிலோம், சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை."

"அலங்காரமாக ஆடை அணிந்துகொள்வோம், அங்கு மிங்கும் எங்கும் அலைந்து திரிகுவோம், கலங்காத நன்னெறியிற் செல்கிறோமில்லைக், கந்தா! முருகா! வென்று கத்திக்கொள்வோம்."

யாழ்ப்பாணத்து மக்கள் போக்கைப் படம் பிடித்துக் காட்டுகிறார் யோக சுவாமிகள்.

கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும், சமயச்சடங்குகளுக்கும், மேடைப் பிரசங்கங்களுக்கும், பஜனைக் கோஷ்டிகளுக்கும், ஏன், யாகங்களுக்கும் யோகங்களுக்குத் தானும் நம் நாட்டில் குறைவேயில்லை. இவையெல்லாம் மக்களின் ஆன்ம நலத்தை வளர்த்திருக்கின்றனவா என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. எங்கே பார்த்தாலும் சுயநலம் தலைவிரித்தாடுகிறது. அநீதியும் அட்டூழியங்களும் பாதகங்களும் மலிந்து, ஏழைகளையுஞ் சரி செல்வந்தர்களையுஞ் சரி வாட்டுகின்றன. பல்லாண்டுகளாக நம் முன்னோரும் நாமும் செய்த தெய்வ வழிபாடு என்னவாயிற்று? எங்கே பார்த்தாலும் கபடமும், சூதும், வாதும். கோயில்கள் களியாட்டு அரங்குகளாய் மாறி வருகின்றன.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்,
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே."

பொக்கம், பொய், நிலையில்லாதனவற்றை நிலையானவை எனக் கருதும் பொய். இந்த நிலை, அப்பர் சுவாமிகள் காலத்திலும் இருந்திருக்கிறது போல் தெரிகிறது.

பக்திசிரத்தை, அடக்கம், மனத்தூய்மை, இவை சம்பந்தப்படாத வழிபாடு, பயனற்றதாகும். மனத்தூய்மை பெற ஒரேயொரு வழி, இறைவனை நோக்கி, எம் சிறுமையையுணர்ந்து, மனங்கசிந்து, அழுவதுதான். அழுகையினாற்றான் உள்ளத்து அழுக்கைக் கழுவ முடியும். கோயிலிலுள்ள மூர்த்திக்கு முன்னால் எவ்வளவு திரவியங்களைக் குவித்து நைவேத்தியம் பண்ணினோம்; திருவிழாவுக்கு எத்தனை கூட்டம் மேளம் பிடித்தோம்; கோயிற் பிரகாரத்தை எத்தனை முறை வலம் வந்தோம்; இவையல்லக் கேள்வி, வழிபாட்டின்போது எங்கள் மனோ பாவம் எப்படியிருந்தது; மனம் அங்கலாய்ப்பொழிந்து, சாந்தமாயிருந்ததா; நெஞ்சம் நெக்கு நெக்கு உருகியதா; இறைவன் எம்மை ஆள்பவன், நாம் அவனின் அடிமைகள், எம்மால் இங்கு ஆவதொன்றில்லை, அவனின் கிருபாகடாட்சமே இம்மையில் எம்மை வாழவைக்கும், மறுமையிலும் வானுலகளிக்கும், என்று

நினைந்து நினைந்து, எமது அகங்கார மமகாரங்களை அறவே ஒழித்து, நாம் வழிபடும் தெய்வத்திடம் சரணாகதியடைய முடிந்ததா; இவைதான் கேள்வி. இந்நிலை ஒருநாளிருநாளில் கைகூடுவதல்ல. வழிபாட்டுக்குச் செல்லும் எந்நாளும், எப்பொழுதும், இந்த மனோபாவத்தை அப்பியாசப்படுத்திவரின், என்றோ ஒரு நாள் ஈசனருள் கைகூடும். உயிரற்ற யந்திரங்கள் தொழிற்படுவதுபோல, ஆலயங்களுக்குச் செல்வதும், மனத்தை எங்கெங்கோ அலைந்து திரியவிட்டு உடம்பினால் மாத்திரம் பழைய சம்பிரதாய முறைப்படி வழிபாடுகளை முடித்துக்கொண்டு வீடுதிரும்பி, என்றும் போல் உலக ஆசாபாசங்களில் அழுந்திக்கிடப்பவர்களுக்கு ஈடேற்றம் கிடைப்பது அரிது என்று சொல்லவும் வேண்டுமோ!

* * *

நான் கொழும்பில் உத்தியோகம் பார்த்த காலத்தில் பதினான்கு முறை தென்னிந்தியாவுக்குச் க்ஷேத்திர யாத்திரைக்கென்று சென்றிருக்கின்றேன். பிற்காலத்தில் இதைப்பற்றி என் நண்பர்களுக்குப் பலமுறை சொல்லிப் பெருமிதம் அடைந்ததுண்டு. இப்போது அதைப்பற்றிச் சிந்திக்கும் போது, என்மடமையை நினைத்து நானே வெட்கமும் துக்கமும் படவேண்டியிருக்கிறது. பதினான்கு தரம் யாத்திரையா? எதற்காக? ஒரு செக்கைச் சுற்றிப் பதினான்கு முறை ஒரு எருது நடந்துவிட்டால் அது ஒரு என்ஜினியராகிவிடுமா? எத்தனை தரம் கும்பிட்டோமென்பதல்ல கேள்வி; எப்படிக் கும்பிட்டோமென்பதில்தான் தங்கியிருக்கிறது பலாபலன்.

இறைவன் எங்களிடம் வேண்டுவது நாம் கொண்டு செல்லும் பழம் பாக்கு வெற்றிலையல்ல. இவை அவன் சொத்து. இவை மாத்திரமல்ல; பிரபஞ்சத்திலுள்ள சகலமும் அவன் உடைமை. அவற்றைத் தன் எல்லையற்ற கருணையினால் அவன் எங்களுக்குத் தந்திருக்கின்றான். அவற்றுள் எதையேனும் அவனுக்குத் திருப்பிக் கொடுக்க நாங்கள் நினைப்பதில் அர்த்தமில்லை. எங்களுக்குச் சொந்தமானது ஏதுமிருப்பின், அதை இறைவனுக்கு அர்ப்பணிக்க எங்களுக்கு உரிமையுண்டு. எங்களுக்குச் சொந்தமானது ஒன்றேயொன்றுதான் எங்களிடம் உண்டு. அதுதான் எங்கள் அறியாமை. அதை எடுத்துக் கொண்டு அறிவைத் தரும்படி இறைவனை வேண்டுதல் முறை. அறியாமையை அவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டோமாயின், அறிவு பிரகாசிக்கும். அப்போதுதான் இறைவன் நமக்குக் காட்டும் எல்லையற்ற கருணையின் தன்மையை நாமறிவோம். அது விளக்கம்பெற, அவனிடத்து அன்பு சுரக்கும்.

கடவுளிடத்து நமக்குண்டாகும் அன்பே பக்தியெனப்படுவது. பக்தியினாலன்றி ஆண்டவனின் அருளைப் பெற்று விட முடியாது. இது சத்தியம், பக்தி செய்வதற்குப் புலனடக்கம் இன்றியமையாதது. ஆலயங்களும், வழிபாட்டரங்குகளும் புலனடக்கத்துக்குச் சாதகமாயிராது, ஆடம்பரங்களும் ஆரவாரங்களும் அதற்குப் பாதகமாயிருக்கும்வரை, ஆலயவழிபாடு பயனளிக்கமுடியாது. இன்று நம் ஆலயங்கள் ஆன்மா இலயப்படும் இடங்கள் தானா? சமயப் பற்றுள்ள யாவரும் இதை நன்கு சிந்திக்க வேண்டும். ஆண்டவனுக்குப் பக்தியோ பணியோ நெஞ்சத்தாலேயே செய்துவிடலாம். நாம் இறைவனை மனமார நினைத்தாற் போதும். ஒருகால் நினைக்கில் இருகாலும் அன்பர்க்கு அருள்புரிய வருவது அவன் இயல்பு.

## 9. விடுவானேன் பிடிப்பானேன்

பன்னிரண்டு வருடகாலமாக நோய்வாய்ப்பட்டு வருந்திய என் வாழ்க்கைத் துணைவி, 1942-ம் ஆண்டு காலமாகி விட்டார். இந்தப் பன்னிரண்டு வருடமும், என்னுடைய இல்லற வாழ்க்கை பள்ளமும் திட்டியுமான கல்லு றோட்டில் ஓட்டப்பட்ட மாட்டுவண்டி போலத்தானிருந்தது. இருந்தும், யோக சுவாமிகளின் தொடர்பு எனக்கு எல்லையற்ற ஆறுதலைக் கொடுத்தது. மனைவியின் மரணம் ஒரு சகாப்தம் முடிந்தது போலிருந்தது.

அந்தக் காலம், யான் உத்தியோக நிமித்தமாக இலங்கையில் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. ஒருமுறை கண்டியில் வேலை பார்க்கும் பொழுது, ஒரு அபூர்வமான சம்பவம் நிகழ்ந்தது. கண்டியில் Empire Hotel என்னும் போசனைசாலையில், என்விடுதி. அது விரும்பத்தக்க இடமல்ல. பகல் பன்னிரண்டு மணி தொடங்கி இராப் பன்னிரண்டு மணிவரையும், மதுபோதையில் கூத்தாடுபவர்களின் குகை. வேறு வசதிகளில்லாமையால், கட்டடத்தின் மேல் அடுக்கில், சனம் நடமாட்டமில்லா ஒரு சிறு மூலையறையில் நானிருந்தேன். ஒரு நாள் இரவு முழுவதும் எனக்கு நித்திரையே வரவில்லை: இவ்வுலக வாழ்க்கையில் அப்போதைய என் நிலை என்னை ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்த்தியிருந்தது. வாழ்க்கைத் துணைவி மறைந்ததும், எனது குடும்பம் ஒரு தனி மனிதனாய்விட்டது. இனி அடுத்தபடி என்ன? என்ற கேள்விக்குப் பதில் காண வேண்டியிருந்தது. பலவித எண்ணங்களினால் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தமையால், உறங்கமுடியவில்லை. சகலத்தையும் சிந்தித்துக் காலையில் எழு முன் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். இல்லற வாழ்க்கையினிப் போதும். உத்தியோகமும்

போதும். கொழும்பு திரும்பியதும் உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறிக் கொண்டு, சிலகாலம் இந்தியாவில் யாத்திரை செய்வது; மேல் நடப்பது ஆண்டவன் செயல்; இதுவே அந்த முடிவு.

காலை ஏழுமணியளவில் வேலைக்குப் புறப்பட ஆயத்தமானேன். என் அறைக்கதவில் யாரோ மெதுவாகத் தட்டிய சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். என்ன ஆச்சரியம்! என் கண்களை நம்ப முடியாத ஒரு தோற்றம் தென்பட்டது. அது தான் யோக சுவாமிகள்.

"என்ன செய்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டு உள்ளே புகுந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். என்ன செய்வது, என்ன சொல்வது என்று எனக்கொன்றுமே தெரியவில்லை. சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தேன். அந்த நேரத்தில் அந்த இடத்தில், தனிமையாக என்னைத் தேடிப் பிடித்து வந்ததன் காரணம் என்னவாயிருக்கலாம்? என் மனக் கலக்கமும் பரபரப்பும் தீரமுன்,

"விடுவானேன் பிடிப்பானேன்?"

என்றார் சுவாமி, சட்டென எனக்கு விஷயம் வெளித்தது. நான் ஒன்றும் பேசவில்லை. தான் சொன்ன வார்த்தையின் பொருள் எனக்குப் புரிந்தது எனச் சுவாமி அறிந்துகொண்டார்; ஆகவே மேலதிகமாக அந்த விஷயத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

> "பேராதனையில்.... இடமிருந்து நீ இங்கே தங்கியிருப்பதாக அறிந்தேன். இங்கு வர அவர் ஒரு காரும் தந்தார். உன்னைப் பார்த்திட்டுப் போகலாமென வந்தேன். நீ வேலைக்குப் போ; நானும் என் வேலைக்குப் போகின்றேன்"

என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார். நானும் அவருடன், அவருக்குப் பாதுகாப்பாகப் படிக்கட்டு வழியே இறங்கி, வழியனுப்பிவிட்டுத் திரும்பினேன். என்ன கருணை! ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொருட்படுத்தித், தானே தேடி வந்து, என் மனத்தை இராமுழுதும் கலக்கிய விஷயங்களுக்கு நான் கண்ட முடிவு பிழையானதென இரத்தினச் சுருக்கமாக, எனக்கிடித்துரைக்க நினைத்தாரே! என்று என் இதயம் உருகியது; கண்கள் கலங்கின. திருவருள் தொழிற்படும் முறையை நினைந்து நினைந்து பரவசமாயினேன். சிறிதளவேனும் பூர்வ புண்ணியம் உண்டென்று நினைத்து ஒருகால் மகிழ்ச்சியுமுண்டானது. உலகம் போற்றும் உத்தமரான ஒரு பெரியாரின் கிருபாகடாட்சம் நாயினும்

கடையேனாகிய எனக்கும் கிடைத்ததே என எண்ணி மனம் பூரித்தது.

விடுவதற்கு நான் யார்? பிடிப்பதற்கு நான் யார்? எல்லாம் இறைவன் செயலாக விருக்க, அற்பர்களாகிய நாங்கள் எங்களாலும் சில காரியம் முடியும், எங்கள் மதியினாலும் நாம் சிலவற்றைத் தீர்மானித்து விடலாம் என்று எண்ணி விடுகிறோமே! எவ்வளவு அறியாமை!!

"அவனன்றியோரணுவு மசையாது"

என்ற பெரியோர் வாக்கின் அர்த்தமென்ன ?

"நானார் என் உள்ளமார், ஞானங்களாரறிவார்?"

என்று மணிவாசகப் பெருமானே கதறினாரே!

"வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி,
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்,
கோனாகி, யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி, நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

என்ற திருவாசகத்தை எத்தனை முறை படித்திருந்தேன், என்ன பயன்? என் விஷயம் என்கையில் இருக்கிறதென்றெண்ணியல்லவோ முடிவுகளை எடுத்துவிட்டேன்; இப்படியே நெடுநேரம் எண்ணி எண்ணி, என் அறியாமையைக் குறித்து இரங்கினேன். என் அற்ப அறிவைக் கொண்டு எடுத்த முடிவின்படி நான் நடந்திருந்தால், பாழுங் கிணற்றில் நானாகவே குதித்தது போலிருந்திருக்குமே! இறைவன் தந்த அருமருந்தன்ன மனித வாழ்க்கையை வெறுத்து, அவன் கருணையுடன் தந்த உத்தியோகத்தையும் உதறித்தள்ளிவிட்டு, ஆளிலி மாடாக அலைந்து திரிய எண்ணினேன். தடுத்தாட்கொள்ள வந்தது போலச் சுவாமிகள் வந்து எனக்கு உபதேசித்த கருணையை யான் என்னென்று சொல்லுவேன்.

எது வரினும் சரி; நடக்கிறது நடக்கட்டும்; படைத்தவன் படி அளப்பான்; உலகமோ ஒரு நாடக மேடை; அந்த மேடையில் நடிப்பவர்கள் போன்றவர்கள் நாங்கள்; பாவைகள்; பாவைகளை மறைந்திருந்து கூத்தாடச் செய்பவன் நாடகாசிரியன்; பாவைகளுக்கு நாடகத்தில் என்ன பொறுப்பு ? ஆட்டுவித்தால் ஆடுவதுதானே; அலையலையாக வந்த இவ்வெண்ணங்கள் மனத்துக்குச் சாந்தியளித்தன. தூக்க முடியாத சுமையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு துன்பப்பட்டவன், அதை இறக்கிக் கீழே வைத்தவுடன் எவ்வளவு ஆறுதலடைவானோ, அதே போலிருந்தது யான் பெற்ற ஆறுதல். என் சுமையை இறக்கிக் கீழே வைத்துவிட்டேன். இனி எனக்கென்ன கவலை; எனக்கென்ன

பொறுப்பு! நிம்மதியுடன் வேலைக்குப் புறப்பட்டேன்.

"அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன?
ஆவதில்லை,
தொழுதாற் பயனென்ன? நின்னையொருவர்
சுடவுரைத்த,
பழுதாற் பயனென்ன? நன்மையுந் தீமையும்,
பங்கயத்தோன்
எழுதாப்படி வருமோ? சலியாதிரு
என் ஏழை நெஞ்சே"

~ பட்டினத்தார் ~

"விடுவானேன் பிடிப்பானேன்"

என்பது சுவாமிகள் காலத்துக்குக் காலம் திருவாய் மலர்ந்த மகா வாக்கியங்களுள் தலை சிறந்தது எனல் மிகையாகாது. நிரீச்சுரவாதிகள் லோகாயதர் போன்றோர், உலகுக்கு ஒரு கருத்தா இல்லை என்று வாதாடுபவர்கள். அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? மற்றைய சமயங்களெல்லாம் கற்பிக்கும் தத்துவங்கள் அனைத்தினதும் சாரம் சுவாமிகளின் இவ் வாக்கியத்திலடங்குமென்பதை நன்கு சிந்தித்துத் தெளிபவர்களுக்குப் புலனாகும். ஆனால் தற்கால மனிதன் சிந்திக்கும் பழக்கத்தைக் கைவிட்டு வருகிறான். அவனுக்கு ஓரிடத்திலிருந்து ஆழ்ந்த கருத்துக்களைச் சிந்திக்கச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. உலகம் அவனை அவ்வளவுக்குத் தன்வசப்படுத்திக் கொண்டு ஆட்டிப்படைக்கிறது.

ஹென்றி அடம்ஸ் என்னும் ஓர் அறிஞர் கூறுகிறார்,

"பார்க்கப்போனால் மனிதனுக்குத் தெரிந்தது அற்பம், தன் அறியாமையை என்றோ ஒருநாள் உணருவான். அன்றுதான் அவன் முழந்தாளில் விழுந்து எல்லாமறியும் தன் கர்த்தாவுக்கு முறையிட்டு வழிபடுவான்."

உவில்லியம் ஷேக்ஸ்பீயர் என்னும் ஆங்கிலப் புலவர், தான் உணர்ந்து கொண்ட உண்மையை உலகுக்கு அறிமுகப் படுத்துகிறார் :

"உலகம் ஒரு நாடக மேடை; ஆண், பெண் இருபாலாரும் அதில் நடிகர்கள், மேடையின் ஒரு பக்கத்தால் நுழைந்து, தங்கள் பங்கை நடித்துவிட்டு, மறுபக்கத்தால் வெளியேறிவிடுவர். ஒவ்வொருவரும் தனித்தனி பல வேடங்கள் போடுவார்கள்."

நியூமன் என்னுமோர் மேல் நாட்டறிஞர் ஆண்டவனைத் தோத்திரிக்கின்ற முறையிது :

"கருணைப் பேரொளியே! எனக்கு வழிகாட்டுவாயாக; என்னை எங்கும் பேரிருள் சூழ்ந்து கொண்டது; நீதான் வழி காட்டவேண்டும். காரிருளில் தவிக்கிறேன். என் இருப்பிடமோ வெகுதூரம்; எனக்கு வழி காட்டுவாயாக! என் நடைப் பாதையை ஒளி விளக்கஞ்செய். நான் மிகத் தூரத்திலுள்ள காட்சிக்கு ஆசைப்படவில்லை. ஓர் அடி முன் வைத்தால் போதுமானது; அவ்வளவுக்கு எனக்கு உதவ மாட்டாயா?"

ஏணெஸ்ற் ஹோம்ஸ் என்னும் ஓர் ஆங்கிலப் பேரறிஞர் கண்ட தீர்க்க தரிசனம் :

"பிரபஞ்சத்தில் சுதந்திரமுள்ள வஸ்து ஒன்றேயொன்று தான். அது தான் என்னைப் படைத்துக் காத்து வருகிறது. என்னுடைய சரீரத்தில் அணுக்கள் தோறும் வியாபித்து நின்று, என் உட்கரணம் வெளிக்கரணம் எல்லாவற்றையுஞ் செயல்படுத்தி, நான் இயங்கும் சக்தியை எனக்குத் தருகிறது. சகல சராசரங்களும் வருமுறை நெறியே வந்து, நின்று, மறையும் ஒழுங்கின் அற்புதத்தை நான் என்னென்று சொல்லுவேன்! எல்லாம் அந்த வஸ்துவின் ஆணைப்படி, யாதொரு குழப்பமோ, குறைபாடோவின்றிச், சதா நடந்து வருகின்றன. இங்கே பயமேது, ஐயுறவேது, சஞ்சலமேது? என்னை நான் அந்த வஸ்துவிடம் ஒப்படைத்து விட்டேன். எனக்கினியென்ன குறை, என்ன கவலை!"

இவ்வுரைகள் எல்லாம் மேலை நாட்டு ஞானிகளின் அனுபவ சித்தாந்தம்.

வாழையடி வாழையாக, இவர்களுக்கு முன்னோடிகளாகப் பல நூற்றாண்டுகளில் பரத கண்டத்து உதித்த மகா புருஷர்கள் கண்டு, உலகுய்ய உபதேசித்ததும் இதுவே. உண்மை எவ்விடத்தும் எக் காலத்தும் மாறுபடுவதில்லை. சென்ற நூற்றாண்டில், இந்தியா பெற்றெடுத்த தவசிரேஷ்டர் மகாத்மா காந்தி தன்னுள் தெளிந்து கொண்டதும் இதுவே,

" மனிதனை நல் வழிக்கு ஆற்றுப்படுத்துவது கடவுள் ஒன்றே. பிரபஞ்சத்தில் வாழ்கின்ற சீவராசிகள் அத்தனையினதும் தொகுதியே கடவுள். அந்தக்கடவுள் பரமண்டலத்திலே தான் இருக்கின்றார்; இல்லை, நிலவுலகத்திலே தானிருக்கின்றார், என்று நினைத்துவிட வேண்டாம். அவரில்லாத இடமேயில்லை. அவனின்றி ஒரு புல் நுனியும் அசைய

முடியாது. அவனைக் காண்பதற்கு ஒரேயொரு வழி, சுயநலமற்ற மன்னுயிர்த் தொண்டேயாகும்".

இத்தனையையும் திரட்டி உருட்டி, இரு சொற்றொடரில் யோக சுவாமிகள்:

"விடுவானேன் பிடிப்பானேன்"

என்னும் மருந்துக் குளிகையில், மந்திரத்தில், அடக்கி ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தந்த கருணையை நான் என்னென்று வியப்பது! சுவாமிகளின் வாக்கியத்தை இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால்,

"உடல், பொருள், ஆவிமூன்றையும் உன்னைப் படைத்தவனிடத்து ஒப்படைத்துவிட்டு, நீ 'என்செயலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே உன்செயல்தானென்று உணரப்பெற்றேன்' என்று இரு."

"உயிராவணமிருந்து உற்று நோக்கி
யுள்ளக்கிழியினுருவெழுதி
உயிராவணஞ்செய்திட்டுன் கைத்தந்தால்
உணரப்படுவாரோடொட்டி வாழ்தி
அயிராவணமேறாது ஆனேறேறி
அமரர் நாடாளாதே யாரூராண்ட
அயிராவணமே! என் அம்மானே! நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே."

~ அப்பர் சுவாமிகள் ~

## 10. மதியால் முடியாது

யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றபோது ஆச்சிரமத்தில் பெரிய கூட்டமாயிருந்தது. ஒரு பெண்மணி ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துச் சில சமஸ்கிருத சுலோகங்களைப் பாடிக்கொண்டிருந்தார். எல்லோரும் மிகவமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உத்தரவின்றி உட்பிரவேசிக்கும் வழக்கம் எனக்கில்லை. ஆகையினால், சில நிமிடங்கள் வெளியே நின்றேன், சுவாமி திரும்பி என்னைக் கண்டதும் "வா" என்று உள்ளே அழைத்தார். உட்புகுந்து, நிரம்பியிருந்த கூட்டத்துள், ஒரு மூலையில் உட்கார்ந்தேன். சமஸ்கிருத சுலோகங்கள் தொடர்ந்து பாடப்பட்டுக் கொண்டிருந்தன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லோரும் என்ன கேட்டுக்

கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தேன். சில நிமிடங்களின் பின் தூரத்திலுட்கார்ந்திருந்த என்னை நோக்கி :

"வைரமுத்து, ஒரு தேவாரம் பாடு"

என்ற கட்டளை பிறப்பித்தார் சுவாமி. நான் பல முறையும் மிக விருப்பமாகப் பாராயணஞ் செய்யும் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகம் ஒன்று, உடன் என் ஞாபகத்திற்கு வந்தது; பாடத் தொடங்கினேன் :

"தினைத்தனையோர் பொறையில்லா உயிர்
போங்கூட்டைப், பொருளென்று மிகவுன்னி, மதியாலிந்த
அனைத்துலகும் ஆளலாமென்று பேசும் ஆங்காரம்
தவிர் நெஞ்சே! அமரர்க்காக"

என்ற தேவாரத்தின் முதலிரண்டு வரியும் பாடி முடிந்தது முடியுமுன், இது வரை சமஸ்கிருதத்தில் பாடிக் கொண்டிருந்த பெண்மணியைச் சுவாமி பார்த்து:

"உன்னுடைய பாட்டைத் தூக்கியெறிந்துவிட்டது வைரமுத்துவின் தேவாரம். பிள்ளை, நீ, உன் புத்தகத்தை இனி மூடு, நீ படி வைரமுத்து"

என்று குறுக்கிட்டுச் சொன்னதும், நான் தொடர்ந்து படித்தேன்:

"முனைத்து வரும் மதில் மூன்றும் பொன்ற அன்று
முடுகிய வெஞ்சிலை வளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்த பெருங்கருணையன் நெய்த்தானமென்று
நினையுமால் நினைந்தக்கால் உய்யலாமே".

என்று முடித்தேன். என்னுடைய பாட்டுக்குக் கிடைத்த வரவேற்பு எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. என் சிறுமையினால் நான் பெருமிதமடைந்தேன். சுவாமிகள் மெச்சியது என்னையல்ல, நான் பாடிய தேவாரத்தின் பொருளையென்ற எண்ணம் சிறிது நேரத்துக்குள் என் மனத்திலுதயமானதும் வெட்கமடைந்தேன்.

"சரீரமாகிய கூடு ஒரு தினையளவு நேரந்தானும் பொறுத்திருக்கும் ஆற்றலில்லாதது. ஒரு நொடிப்பொழுதில் வீழ்ந்து மடியுந்தன்மையது. அத்துணை எளிய கூட்டை, மிக்க பெறுமதியுள்ள பொருளென்று நினைத்துக்கொண்டு, அதில் உட்கார்ந்து நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டி உனது மதி நுட்பத்தினாலே எல்லா உலகங்களையும் கட்டி ஆள உன்னால் முடியுமென்றெண்ணிக் கொள்ளுகிறாயே; நெஞ்சமே! உன் மடமைதான் என்னே!! (இன்றைக்கிருந்தாரை

நாளைக்கிருப்பாரென்று எண்ணவோ திடமில்லையே; இப்பொழுதுதான் நின்றான், இருந்தான், கிடந்தான், தன்கேளலறச் சென்றான் எனப்படுகின்றதே; நீர் மேலெழுத்தென்றும் நீர்க்குமிழிக்கு நிகரென்றும் யாக்கையை ஆன்றோர் கூறுகிறார்களே!) உன் ஆங்காரத்தைவிடு நீ உய்ய வேண்டுமானால், ஒரேயொரு வழிதானுண்டு சொல்கிறேன் கேள்: பண்டொருநாள், பிரபஞ்சம் முழுதிலும் தம் இஷ்டப்படி சஞ்சரிக்கும் ஆற்றலைத் தவத்தினால் பெற்றிருந்த மூன்று புரங்களின் அதிபர்களான அசுரர்கள், தங்கட்கு இத்துணை ஆற்றலைக் கொடுத்த பரமனை மறந்து, கர்வங்கொண்டு தேவர்களைத்தானும் எதிர்த்துத் துன்புறுத்த, அவர்களின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள், பரமபிதாவாகிய கைலாசபதிக்கு முறையிட, அத்தேவர்களின் இரக்கக் குரல் கேட்டு, இந்த மூன்று துஷ்டர்களையும் அழிக்கவெண்ணிய கருணாநிதி; கோபக்குறி காட்டி தமது திருக்கரத்தில் வில்லையும் அம்பையுமெடுத்து, அவற்றால் முப்புரங்களையும் தகர்க்க எண்ணியவன் போலப் பாசாங்கு செய்து, ஒரு நொடிப் பொழுதிலேயே அம்பானது வில்லை விட்டு விலகும் முன் புரங்கள் மூன்றும் சம்பூரணமாகச் சாம்பராகியமை உனக்குத் தெரியாததோ? பிரபஞ்சம் முழுதும் அவன் ஆணைக்கு உட்பட்டதல்லவா? உன் மதியால் நீ எதைச் சாதித்துவிட முடியும்? நினைத்த மாத்திரத்தே துஷ்டர்களை நிக்கிரகம் செய்கின்ற வள்ளல் எழுந்தருளியிருக்கின்ற திருநெய்த்தானம் என்னும் க்ஷேத்திரத்தை நின் மனத்தில் தியானஞ் செய். அப்படிச் செய்வாயானால், நீ உய்யலாம்.”

இந்த வண்ணம் அப்பரடிகள் தன் நெஞ்சுக்குப் புத்தி புகட்டுவதுபோல், மக்கள் குலத்துக்குப் புகட்டிய அருள்மொழி சிவயோக சுவாமிகளின் உள்ளத்தைக் கவர்ந்ததில் என்ன வியப்பு.

உண்மையை உணர்ந்துகொண்ட பெருமக்கள் அனைவரும், இதைத்தான் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறார்கள். எத்தனை முறைதான் கற்பினும் கேட்பினும் எம் போன்ற அறிவிலிகளின் இதயத்தில் இந்த உண்மை பதிகின்றதிலையே!!

மனிதனுடைய வாழ்க்கையில், அவனது மதிக்கும் விதிக்கும் சதா போராட்டமாகவேயிருக்கிறது. மனிதன் தன்விதியை மதியால் வெல்லப் பார்க்கிறான். ஆனால் அவன் அநேகமாகப் பெறுவது தோல்வியே. அவனுடைய இந்த மதிதான் என்னை? அவனுக்கு அது கிடைத்தவாறென்ன? அது விதியை வெல்ல முடியாததற்குக் காரணம் தான் என்னை? இவை சிந்திக்கத் தக்கவை?

* * *

ஆன்மாக்களின் சரித்திர வரலாற்றைத் தாயுமானப் பெருந்தகை, தனது பாடல் ஒன்றில், அழகாக வர்ணிக்கிறார் :-

"காரிட்ட ஆணவக்கருவறையில், அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற
கட்டுண்டிருந்த எமை, வெளியில் விட்டு, அல்லலாங்
காப்பிட்டு, அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசு பாழும் பொய்யுடல்
பெலக்க, வினையமுதம் ஊட்டிப்
பெரிய வனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரிய விளையாட்டமைத்திட்டு,
ஏரிட்டதன் சுருதிமொழி தப்பின், நமனை விட்டு
இடருறவுறுக்கி, இடர் தீர்த்து,
இரவு பகலில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொள்மின் என்று,
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முத்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயானந்த குருவே!"

அநாதியில் ஆணவம் என்கின்ற அந்தகாரவிருளிலே கண்ணில்லாக் குழவி போலிருந்த ஆன்மாவை, பிரபஞ்சத்தில் சஞ்சரிக்க வைத்து, அதன் இருளை நீக்கி, பேரின்ப வீட்டில் துயில் கொள்ளச் செய்யவே, உலகன்னை வடிவான எந்தை பஞ்சகிருத்தியம் என்னும் திருவிளையாட்டை நடத்துகிறார். இருட்டறையில் அறிவற்றுக் கிடந்த எங்களை வெளியே விட்டு. மெல்லமெல்லப் படிப்படியாக, நாம் நல்லறிவு பெறுவதற்கு ஆண்டவன் நமக்கு உபகரித்தனவே எமது தனு கரண புவன போகங்கள். இவை மாயையென்னும் மூலப் பொருளிலிருந்து காரியப்பட்டவை. தமக்கென அறிவோ ஆற்றலோ சுதந்திரமோ இல்லாத ஆன்மாக்களுக்கு அவற்றின் இடர்தீர்த்துப் பேரின்பப் பெருவாழ்வளிப்பதற்கு அவற்றைத் தனித்தனி பக்குவத்திற்கேற்ப உடம்புகளில் நிறுத்தி, கட்டுப்பாடுகளுக்கு ஆளாக்கி, ஒரு நெறிவழிப்படுத்தும் பொருட்டு அடித்தும் அணைத்தும், பரிபாலிக்க வேண்டுவது இன்றியமையாததாயிற்று.

மாயா காரியங்களாகிய தனு கரண புவன போகங்கள் , ஆன்மாக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவனவாகையால், மாயையும் ஆன்மாக்களைப் பந்திக்கும் மலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆயினும், காரிட்ட ஆணவக்

கருவறையில் கண்ணில்லாக் குழவியைப்போல் கிடந்த ஆன்மா, வெளியேறி, தனு காரண புவன போகங்களைப் பெற்றதும், பஞ்சகிருத்திய கர்த்தாவின் திருவருட் துணைகொண்டு, சிறிதளவு அறிவு விளக்கம் பெறும் வாய்ப்பை அடைகின்றது. அஃது எப்படியெனில், கண்தெரியாத இருளில் இருப்பவன் கையில் ஒரு கொள்ளி கிடைத்தால், சிறிதளவு ஒளியினையுடைய அக் கொள்ளி அவனுக்குப் பெரிதளவு பயனளிப்பது போலவாம். இவ்வண்ணம் மிகச் சிறிதளவாக உற்பத்தியான, மாயா காரியமான தனு கரண புவன போகங்களின் சகாயத்தினால் உண்டாகும் சிறு ஒளியான சிற்றறிவே, மனிதன் தன் "மதி" யென்று அகங்கரிக்கும் வஸ்து.

ஆன்மாக்களை அநாதி தொட்டே பந்தித்திருக்கும் மூலமலமாகிய ஆணவமோ அனந்த சக்தியுடையது. அஃது, ஆன்மாக்களை எவ்வளவுக்கெவ்வளவு பந்தித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மாக்கள் அறியாமை வசப்படுவனவாகும். பிறவிகள் தோறும் ஆண்டவனால் உபகரிக்கப்பட்ட சௌகரியங்களை, ஆன்மாக்கள் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல வழியில் உபயோகப்படுத்துகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவை அறிவு விளக்கம் பெறும்; அவையின் "மதி" வளர்ச்சி பெறும். ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. இந்த அறிவு, இந்த "மதி" ஆணவ கன்ம மாயா மலங்களின் சம்பந்தத்தினால் கிடைத்த பேறு. உலக ஆசாபாசங்களில் ஆன்மா அழுந்திக் கிடக்கும் அவாந்தரத்தில், ஆணவ முனைப்பினால் உண்டாகும் அவா, அகங்காரம், முதலாய அனந்த தீய குணங்களால் உந்தப்பட்டு நடமாடும் பொறி புலன்களின் வழியாகப் பெறப்பட்ட அறிவாதலின், அஃது மயக்க அறிவின் அடிப்படையிலான "மதி"யும் மயக்கத்தையே செய்யும். மயக்க அறிவாகிய மதியைக் கொண்டு, மனிதன் எத்தனிப்பதெல்லாம் அவனுக்குத் தீமையையே விளைவிக்கும். எண்ணியதை எண்ணியாங்கு அவன் பெற முடியாது. ஒன்று நினைக்க அஃது ஒழிந்திட்டு இன்னொன்றாகும். இவ்வகை மதியைக் கொண்டு அனைத்துலகையும் ஆளலாமென்று எண்ணுவது சுத்த மடைமை என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு. அவ்வெண்ணந் தானும், ஆணவ மல பந்தத்தினாலாய அகங்காரத்தின் ஏவுதலாகும்.

"உன் மதியை நம்பாதே; அஃது அகங்கார சம்பந்தமானது; அகங்காரம் கொடியது; உன்னை மேலும் மேலும் கொடிய துன்பத்திற்கு ஆளாக்கும்; நீ உய்ய வேண்டுமானால் அகங்காரத்துக்கு இடங்கொடாதே; உன் அகங்காரத்தைச் சங்காரஞ் செய்து, உன் மயக்க அறிவு மெய்யறிவாகும்படி முப்புரங்களையெரிசெய்த கருணைக் கடலாகிய

கடவுளை நினைந்து வேண்டிக்கொள்; இதைவிட உய்யும்வகை வேறுனக்கில்லை;"

இத்தனையுந் தொனிக்கின்றது அப்பர்சுவாமிகளின் அமிர்தவாக்கில்.

இறைவன் முப்புரங்களையுந் தன் நெற்றிக் கண்ணிலிருந்து வெளியான அக்கினிப் பொறிகளினால் எரித்தான் என்பது புராணக்கதை.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்,
முப்புர மாவது மும்மல காரியம்,
அப்புர மெய்தமை யாரறி வாரே"

~ திருமூலர் ~

மும்மல காரியமாகிய முப்புரங்களையும் எம்பொருட்டு எரிக்க இறைவன் காத்திருக்கின்றான். அவனை அணுகாது, மும்மல காரியமாகிய உலகை அணுகி, தினையளவு பொறுமையில்லாத உயிர் போகுங் கூட்டைப் பொருளாக மதித்து, அந்த மதியின்மையை மதியாக எண்ணி, உலகத்தை ஆள முற்பட்டால் ஆவதென்ன? என்ன ஆகும் என்பதைத் தாயுமான சுவாமிகளே விளக்குகின்றார்:

"ஆசைக்கோரளவில்லை அகிலமெலாங்கட்டி
ஆளினுங் கடல் மீதிலே
ஆணை செலவே நினைவர்;அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்த பேரும்
நேசித்து இரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்த பேரும்,
நிலையாகவேயினுங் காய கற்பந்தேடி
நெஞ்சு புண்ணாவர், எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவதுமாக முடியும்:
உள்ளதே போதும், நான் நான் எனக்குழறியே
ஒன்றைவிட்டொன்று பற்றிப்
பாசக் கடற்குள்ளே வீழாமல், மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்,
பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே!"

## 11. வேண்டுதல் வேண்டாமை இலாதார்க்கு தட்டுப்பாடேது

சிவயோக சுவாமிகள் சாந்தரூபியாகிக் கருணையுடன் தன்னிடம் வருபவர்களை இன் முகங்காட்டி அழைக்கத் தொடங்கி காலமுதல், நூற்றுக்கணக்கான மக்கள், ஆண் பெண் பிள்ளைகள் அனைவரும், அவரைத் தரிசிக்க வந்து கூடுதல் வழமையாய் விட்டது. சில நாட்களில் சுவாமிகளின் ஆச்சிரமம் மக்கள் கூட்டத்தினால் நிறைந்து வழியும். உண்மையாகவே நல்வழியையோ, ஆத்மீக முன்னேற்றத்தையோ நாடி வருபவர்கள் சிலர். இவர்கள், முன் செய்த நல்வினை கூட்ட, சுவாமிகளின் தரிசனத்தினாலும் திருவாய் மொழிகளினாலும் ஆசீர்வாதத்தினாலும் பயன் பெறும் ஆசையுடன் வருபவர்கள். சுயநலம் கருதாது இந்தப் புனித இலட்சியத்துடன் வந்தவர்களில் அனேகர் நிரம்பப் பலனடைந்தார்கள் என்பதற்கு ஐயமேயில்லை. தங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொண்டு, சுவாமிகளின் மந்திரசக்திவாய்ந்த அன்புக்குக் கட்டுப்பட்டு நிற்கும் இணையற்ற நற்பேற்றைப் பெற்றார்கள்.

சுவாமிகளை ஒரு சித்தர் எனக்கருதி, அற்ப சொற்ப லௌகீக பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையுடன், அடிக்கடி அவரிடம் வந்தவர்களோ மிகப்பலர். தத்தம் உள்ளக் கவலைகளுக்கு நிவாரணம் தேடி வருவோரும், பிள்ளைகளின் கல்வி, கல்யாணம், சம்பள உயர்வு, இன்னோரன்னவற்றில் வெற்றி காணும் ஆசையினால் சுவாமிகளின் ஆசீர்வாதத்தை நாடி வருவோரும் அனேகர். சாத்திரமோ, நினைத்த காரியமோ, கேட்க வருவோரும் இல்லாமலில்லை. தன்னிடம் வருபவர்களின் நோக்கங்கள் இன்னவென்பதைச் சுவாமி நன்றாக அறிவர் என்பதற்குப் பல திருஷ்டாந்தம் உண்டு. சிலர் சுவாமிகளின் மர்மம் என்னவென்று சோதிக்கவும் வருவார்கள், இப்படியே பலவிதமான மக்கள், பலவகையான நோக்கங்களோடு, சிரமம்பாராது பல இடங்களிலுமிருந்து அடிக்கடி கொழும்புத்துறைக்கு வருவது சகசம். இத்தனை பேர்களையும் திருப்திப்படுத்த சுவாமி பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்தினாரெனக் கவனிக்கத் தக்கதாயிருந்தது. சிலருக்கு ஆறுதல் கூறி, புத்தியும் புகட்டி, அன்பு காட்டி, வாழைப்பழம், தோடம்பழம், அப்பிள்பழம் ஏதோ இருப்பதைப் பிரசாதமாகவும் வழங்கி, விடை கொடுத்தனுப்புவார். சிலரை, 'நல்லூருக்குப் போய் நல்லாகக்கும்பிடு எல்லாம் சரிவரும்,' என்று சொல்லி அனுப்புவார். சாத்திரங் கேட்க வருபவர்களை, 'அச்சுவேலிக்குப் போ, கொக்குவிலுக்குப் போ, நான் சாத்திரம் சொல்வதில்லை' என்று வெருட்டிவிடுவார். வேறும் சிலரை ஈன இரக்கமில்லாது ஏசிக் கலைப்பதுமுண்டு; அல்லது 'இப்போ நேரமில்லைப் போய் வாரும், என்று படலையில் விட்டே திருப்பி விடுவதுமுண்டு.

தலை நிறைய இவ்வளவு துன்பங்களையும் கவலைகளையும் ஆசைகளையும் சுமந்து கொண்டு, மக்கள் பஞ்சாய் பறந்து திரிகிறார்களேயென்று, சுவாமி பல சந்தர்ப்பங்களில் மிகமிக இரங்கியது வெளிப்படையாகத் தெரிந்தது.

இப்படியாகத் தன்னிடம் அடிக்கடி வந்து திரிபவர்களுக்கு, ஒரு பராக்குக் காட்டவேணும் என்று நினைத்தோ என்னவோ, அவர்களுட் பலரைச் சில துறைகளில் உற்சாகப்படுத்தி ஈடுபடச் செய்து, முதலில் தானும் முன்னின்று முயற்சி காட்டி வைத்தார் சுவாமி. கந்தபுராணம், பெரிய புராணம், முதலிய புராணப் படிப்பு, சிவராத்திரி விழா, சிவதொண்டன் நிலையம், சிவ தொண்டன் மாதாந்த வெளியீடு, கீழ் மாகாணத்தில் விவசாயச் செய்கை, இன்னோரன்ன பல தொண்டுகள் சுவாமிகளின் தூண்டுதலினால் உற்பத்தியானவை. ஒன்று கவனிக்கத்தக்கதாயிருந்தது. எந்த முயற்சியிலும் சுவாமி நெடுநாள், தான் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்ததில்லை.

"எடேடா, இது பிடித்துக் கொள்ளும்" என்று விலகிவிடுவார்.

மூன்று வருடங்களாக, அரியாலையிலுள்ள ஒரு தென்னந்தோட்டத்தில், சிவராத்திரி அனுட்டிக்கப்பட்டது. பலரையும் தூண்டி இதை ஆரம்பித்து வைத்தது சுவாமிகள். மூன்றாம் ஆண்டின்பின் அவர் விலகிவிட்டார். சிவராத்திரி விழாவும் நின்று விட்டது. மூன்றாம் ஆண்டுச் சிவராத்திரிக்கு நானும் கொழும்பிலிருந்து வந்து பங்குபெறும் வாய்ப்புக்கிடைத்தது. அருமையான சூழ்நிலையில், அன்பர்கள் பலர்கூடி, நான்கு சாமமும், பஜனை, புராணப்படிப்பு, திருமுறை பாராயணம் ஆகிய வழிபாடுகளில் ஈடுபட்டனர். நடுநாயகமாயிருந்து எல்லாவற்றையுங் கண்காணித்தது சுவாமிகள், அமைதி அடக்கம் பக்தி சிரத்தை இவற்றுடன், சகலரும் தூய்மை மனப்பான்மையும் உள்ளக் களிப்பும் பொங்கப் பங்கு பற்றியமை மறக்க முடியாத ஓர் அனுபவம். மறுநாட் காலை எல்லோரும் ஸ்நானம் செய்து, மாகேஸ்வர பூசைக்கு வேண்டியன ஆயத்தம் பண்ணி, நண்பகல் உணவருந்தி விரதத்தை முடித்துக்கொண்டு, மூன்று மணியளவில் தத்தம் இல்லங்களுக்குத் திரும்பினர். சிலர் தாமாகவே சுவாமியின் விடை பெற்று ஏகினார்கள். சிலரைச் சுவாமியாகவே "நீ இனி, வா" என்று அனுப்பிவைத்தார். ஆறு மணியளவில் எஞ்சியிருந்தது சுவாமியும் வேறு மூன்று பேரும். அவர்களுள் நானுமொருவன். நாங்கள் வீடு திரும்ப நினைக்கவில்லை; சுவாமியும் போகும்படி உத்தரவிடவுமில்லை. ஆகவே சுவாமியுடன் சிவராத்திரிக்கு மறுநாள் இரவும் அங்கே தங்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது.

கடைசியாக வீடு திரும்பிய அன்பர்கள் சிலர், சுவாமியும் இன்னும் மூன்று

பேரும், இரவுக்குத் தோட்டத்திலேயே தங்கும் நோக்கம்' என்பதைக் கவனித்துக் கொண்டார்கள். மத்தியான போசனத்துடன் உணவுப் பொருட்கள் யாவும் முடிந்து விட்டதும் அவர்களுக்குத் தெரியும். ஆகவே எஞ்சியிருப்பவர்களுக்கு இராப்போசனம் வேண்டுந்தானே யென்றெண்ணி இந்தத் "தட்டுப்பாட்டை" நீக்க, யாழ்ப்பாணம் போனதும் , அங்கே பலகாரமும், பழவகைகளும் விலைக்குவாங்கி, ஒரு புதுக் கடகத்தில் எட்டுமணியளவில் கொண்டு வந்தார்கள். அவர்கள் நல்ல நோக்கத்துடன் தான் இப்படி நடந்து கொண்டார்களென்பது உண்மை, நாங்களிருந்த தென்னந்தோட்டப் படலையை அவர்கள் வந்து திறந்ததும், முப்பது நாற்பது யார் தூரத்திலேயிருந்து சுவாமி:

"அதாரடா அங்கே? உடனே திரும்பி விடுங்கள், இங்கே வரக்கூடாது; ஆரடா உங்களுக்குச் சொன்னது இங்கே தட்டுப்பாடென்று? தட்டுப்பாடாம், தடடுப்பாடு! எங்களுக்குத் தட்டுப்பாடென்று நீங்கள் சோறு போடப்போகிறீர்கள்! அவ்வளவு துணிவு தானே!! எங்களுக்கு இங்கே ஒரு தட்டுப்பாடுமில்லை, நீங்கள் வந்த வழியே திரும்பிவிடுங்கோ."

உரத்த சத்தத்தில் இப்படியே சொல்லிக்கொண்டு, இருந்த இடத்தைவிட்டு எழுந்தார் சுவாமி. வந்தவர்கள் பேச்சு மூச்சில்லாமல் சட்டென்னத் திரும்பிவிட்டார்கள். அன்று தான் சுவாமிகளின் உக்கிர மூர்த்தத்தை நான் நேரே கண்டேன்; அத்துணை ஆவேசம்.

பின்னர் அறிந்தோம், வந்தவர்கள் யாழ்ப்பாணத்துச் சந்தையுள் நின்று:

"அங்கே ஒன்றும் மிச்சமில்லை தட்டுப்பாடாய்ப் போச்சு, சாப்பாடு ஏதேனும் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுக்கவேணும்."

என்று பேசிக்கொண்டார்களாம்.

தமக்கென ஒன்றையும் தேடாத, வேண்டாத, துறவிகளுக்கு, தட்டுப்பாடென்றொன்றில்லை. தங்கள் பொறுப்பை தங்கள் தலைவனிடம் ஒப்படைத்தவர்கள் அவர்கள்.

"உடுக்கக், கவிக்கக் குளிர்காற்று வெய்யில்
ஒடுங்கி வந்தால்
தடுக்கப், பழையவொரு வேட்டியுண்டு;
சக முழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு;

பசித்து வந்தாற்,

கொடுக்கச் சிவனுண்டு, நெஞ்சே ! நமக்குக்

குறைவில்லையே ” ~ பட்டினத்தார் ~

என்று பூரண திருப்தியுடன் வாழ்கின்ற ஒரு துறவிக்குத் தட்டுப்பாடு ஏது ?

இந்த உண்மையை வேறு சில சந்தர்ப்பங்களிலும் நான் நன்கு உணர்ந்துகொள்ளக்கூடியதாயிருந்தது.

* * *

ஒருநாள், சுவாமியின் ஆச்சிரமத்தில் அவருடன் தனிமையிலிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பலதும் பேசிவிட்டுக் கேட்டார் சுவாமி:

"உன்னுடைய சம்பளம் என்ன?"

(நான் பதிலளித்தேன்)

"காத்திராப் பிரகாரமாய் 10 பேர் உன் வீட்டுக்கு வந்தால் சாப்பாடு போடுவாயோ?"

"சடுதியில் அத்தனைபேர் வந்தால் போட முடியாது, சுவாமி" என்றேன்.

"நான் போடுவேன், அறையைச் சுற்றிப்பார், எனக்குச் சம்பளமில்லை, ஆனாலும் எத்தனைபேர் வந்தாலும் நான் சாப்பாடு போடத் தயார்."

சுவாமிகளிருந்த கொட்டிலுக்குள் ஏராளமான உணவுப் பொருட்களிருந்தன. ஐந்து ஆறு பிசுக்கோத்துப் பெட்டிகள், நல்ல மாம்பழங்கள், வாழைப்பழச் சீப்புகள், தோடம்பழங்கள், அப்பிள் பழங்கள், இராசவள்ளிக் கிழங்கு, இன்னோரன்ன பண்டங்கள். இவைகள் யாவும் அன்றொரு வெள்ளிக்கிழமை யாதலால் அடியார்கள் பலரும் சுவாமியைத் தரிசிக்க வந்தபொழுது கொண்டுவந்து சேர்ந்த காணிக்கைப் பொருட்கள். இப்படியே பொருட்கள் ஆச்சிரமத்துக்கு எந்நாளும் வந்தபடியேயிருக்கும். சுவாமி ஒன்றையும் தனக்கெனச் சேமித்து வைத்திருப்பதில்லை. அன்றாடம் வந்து குவியும் பொருட்கள் அத்தனையும் அன்றன்றே சுவாமியைத் தரிசிக்கவரும் அன்பர்களுக்குப் பிரசாதமாகச் சுவாமியால் வழங்கப்பட்டு விடும்.

* * *

இன்னொருநாள், சுவாமி ஆச்சிரமத்தில் பலருடன் அளவளாவிக்

கொண்டிருந்தபோது, சடுதியில் சொன்னார்:

"நான் கொழும்புக்குப் போகப் போகிறேன்."

எப்போ, என்னமாதிரியென்று விபரம் ஏதும் சொல்லவில்லை, ஐந்து நிமிடங்களாகவில்லை ஒரு கார் வந்து படலையில் நின்றதும், சுவாமியின் அன்பரொருவர் இறங்கி உள்ளே வந்தார்:

"நீ எங்கே போகிறாய்?" என்றார் சுவாமி.

"நான் கொழும்புக்குப் போகிறேன், சுவாமி; வழியில் சுவாமிகளையுந் தரிசித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்,"

என்றார் வந்த அன்பர்.

"நானும் வாறேன் உன்னோடு கொழும்புக்கு; பார்த்தீர்களா, எனக்குக் கார் வந்து விட்டது, கொழும்புக்குப் போக"

என்று சொல்லிக்கொண்டு சுவாமி கிளம்பி விட்டார்.

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு,
யாண்டும் இடும்பை யில"

என்னும் பொய்யாமொழிப் புலவர் வாக்குக்கு இப்படியான சம்பவங்களில் வைத்துத்தான் பொருள்காண வேண்டும்.

* * *

யோக சுவாமிகளே பல வாக்கியங்களில் இவ்வுண்மையை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைத்திருக்கின்றார்:

"நாங்கள் சிவனடியார்கள், எங்களுக்கு ஒரு குறைவுமில்லை, சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில், அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்."

"வெளி மாதிரியொன்றுஞ் செய்யாதே, உனக்குள் நீ பெலத்துக்கொள், சமயமென்பது ஒரு மாதிரி அற்ற தனித்த நிலை. உடல், பொருள், ஆவி மூன்றையும், பகவானுக்கு ஒப்படை, அதன் பின் உன்னைப் பற்றிய எண்ணங்களை மறந்துவிடு, அனைத்தும் அவனே பார்."

இதை இன்னொரு விதமாக ஓரறிஞர் விளக்குகின்றார்.

"உயிரினம் அவாக்களால் உந்தப் பெற்று, விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளாவது இயற்கை. ஆசைகள் விருப்பு வெறுப்புக்களின் தாய். விருப்பு வெறுப்புக்கள் வினைகளின் நிலைக்களன், வினைகள் இன்ப துன்பங்களுக்குக் காரணம். இன்ப துன்பங்கள் பிறப்பிற்கு அடிப்படை. பிறப்பு துன்பத்தோடு தொடர்புடையது...... உயிரின் இவ்வியல்பை மாற்றி அன்பின் வழிப்பட்ட, ஒரு தூய்மையான நல்வாழ்கையைப் பெறச் செய்ய வேண்டுமானால், இயல்பாகவே விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட கடவுளோடு இந்த உயிருக்கு தொடர்பு ஏற்பட வேண்டும். அத்தொடர்பின் வழி உயிர்மாட்டுள்ள குற்றங்கள் குறைந்து நிறைவு பெருகும். அவ்வழி, உயிர்கட்கு, எங்கும் எப்பொழுதும் இன்பமே கிடைக்கும். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை," என்பது அப்பர் வாக்கு.

"அடியவர்கள் ஆண்டவனிடம் இரப்பதில்லை. அடியவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க ஆண்டவன் கடமைப்பட்டவன். அடியவர்கள் அவனிடம் பெற்றுக் கொள்வது, அவர்களின் உரிமையின் பாற்பட்டது."

இனி முற்றுந்துறந்த முனிபுங்கவர், பட்டினத்தடிகள் திருவாய்மொழியைப் பார்ப்போம்:

"வீடு நமக்குத் திருவாலங்காடு; விமலர் தந்த
ஓடு நமக்குண்டு. வற்றாத பாத்திரம்; ஓங்கு செல்வ
நாடு நமக்குண்டு, கேட்டதெல்லாந்தர; நன்னெஞ்சமே!
ஈடு நமக்குச் சொல்ல ஒருவருமிங் கில்லையே."

உயிர்கள் எவ்விடத்திலும், பெத்த நிலையிலஞ் சரி முத்தி நிலையிலஞ்சரி, இறையடியையின்றி யறிந்தொன்றையியற்றியிடா; அரனடியையகன்று உயிர்கள் எங்கே நிற்பது? நாமெல்லாம் அம் முதல்வனது உடைமைகளேயன்றிச் சுதந்திரமுடையோமல்லோம். இந்த உண்மையை உள்ளவாறு உணர்ந்த ஞானிகள், தாம் நினைப்பனவும் செய்வனவுமெல்லாம் இறைவன் அருள்வழி நின்று செய்வனவாகக்கண்டுகொண்டிருப்பார். இறைபணி நிற்போர் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும், அவை அவர்க்குப்பந்தமாவதில்லை. தம்மை என்றும் விட்டகலாத முதல்வன் திருவடிகளே தமக்குத் தாரகமாகக் கொண்டு தம்மை முற்றாக அவனிடம் ஒப்படைத்து விடுவார்கள்.

"வாழினுஞ் சாவினும் வருந்தினும்,போய் வீழினும்
உன்கழல் விடுவேனல்லேன்,

என்று திடசங்கற்பம் செய்து கொண்டு வாழ்வர்.

"மண் பாதலம் புக்கு மால் கடல் மூழ்கி
மற்றேழுலகும்
விண் பாற்றிசை கெட்டு, இரு சுடர் வீழினும்,
அஞ்சல் நெஞ்சே!
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பாதிரிப் புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுட
ரான் கழலிணையே."

என்னும் அஞ்சா நெஞ்சமுடையார்க்கு வேண்டுதல் ஏது? வேண்டாமை ஏது?

## 12. துறவிக்கு உயர்வேது? தாழ்வேது?

யோக சுவாமிகளுக்குப் பெரியார் சிறியார் என்ற பாகுபாடில்லை. சாதி, மத, பேதமில்லை. யாரை எந்த நேரத்தில் எப்படி வரவேற்பாரென்று ஒருவராலும் சொல்ல முடியாது, அஃது ஒரு மர்மம். ஒருவரை வாவென்று ஏற்பதும், இப்போ சந்தர்ப்பமில்லைப் போய்வாவென்று இன்னொருவரை வெளியேற்றுவதும், சுவாமிகளின் அவ்வப்போதைய மனோநிலையைப் பொறுத்திருக்கலாம். அந்த மனோநிலையும், வருபவர்களின் நோக்கத்தையும் மனோநிலையையும், பொறுத்திருக்கலாம். நாட்டில் மிகப் பெரிய செல்வாக்கையும், பதவியையும் உடையவர்களையுஞ்சரி மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள ஏழை மக்களையும் சரி, சுவாமிகளின் ஆச்சிரமத்தில் காணலாம். சில நேரங்களில் இவ்விரு சாராரையும் ஒரு பாகுபாடும் காட்டாது கலைத்து விடுவதுமுண்டு. மற்றவர்களிலும் பார்க்க சுவாமி எம்முடன் கூடப்பற்றுள்ளவர் என்றெண்ணித் தங்கள் சிறுமையினால் இறுமாப்புக் கொண்டுள்ளவர்களுக்கும், தத்தம் சுயநலத்துக்காக அவரைப் பாவிக்கும் நோக்கத்துடன் வருபவர்களுக்கும், சில நேரங்களில் நல்ல பாடம் படிப்பிக்கும் முறையையும் கவனிக்கத் தக்கதாயிருந்தது.

* * *

ஒரு நாள் மலைநாட்டில் வசிக்குமொரு சீமான் சுவாமிகளிடம் வந்தார். படித்தவர், செல்வந்தர், தான் உயர்ந்தவராகக் கருதியோ, என்னவோ தெரியாது, எல்லோருடனும் கலந்து அளவளாவுபவர் அல்லர். இருந்தும், முன்னரும்

பலமுறை வந்து சுவாமியைத் தரிசித்துச் சென்றவர். சுவாமியும் அவர் இல்லத்துக்கு இடையிடையே போய் சில நாட்கள் தங்கியும் வந்ததுண்டு. இம்முறை அந்தப் பெரியவரும் மனைவியும் மலைநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, ஏராளமான காணிக்கைப் பொருட்களையும் வெள்ளித் தட்டங்களிலேந்திக்கொண்டு சுவாமிகளின் கொட்டிலுக்குள் உத்தரவையும் காத்திராது, நேரே உட்புகுந்து தாங்கள் கொண்டுவந்த பொருட்களைச் சுவாமிகளின் சந்நிதானத்தில் வைத்தார்கள். குனிந்து பொருட்களை வைத்தவர்கள் நிமிரும் முன்,

> "எடு. இங்கு ஒன்றும் தேவையில்லை. திருப்பிக்கொண்டு போய்விடலாம்; எனக்கு இப்போ நேரமில்லை, என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள், எடென்றால் எடு"

என்று கோபக் குரலில் உறுக்கினார் சுவாமி. வந்தவர்கள் இந்த மாதிரியான ஒரு வரவேற்பை ஒரு போதும் காத்திருக்கவில்லை என்பது அவர்களின் முகங்களில் தெரிந்தது. அவர்களால் வாய் திறந்து ஒன்றும் பேசவும் முடியவில்லை, நடுங்கிவிட்டார்கள். கொண்டுவந்த பொருட்களையும் தூக்கிக்கொண்டு மௌனமாகத் திரும்பி விட்டார்கள்; பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு மிகப் பரிதாபமாயிருந்தது.

அவர்கள் போனபின் சுவாமி சிரித்தார்; சிரித்துக்கொண்டே,

> "மகளுக்குக் கலியாணம் பேசட்டாம் என்னை; பேசிய மாப்பிள்ளை சம்மதிக்கிறாரில்லையாம், அவரின் மனத்தை என்னால் மாற்ற முடியுமாம், நல்ல வேலை எனக்குக் கொண்டு வந்தார்கள். அன்றொருநாள் ஒரு ஏழை மனிதன் தன் பிள்ளைக்குக் கலியாணமாகுதில்லையேயென்று வந்து முறையிட்டான். பரிதாபமாயிருந்தது, இப்போ பேசுகிற மாப்பிள்ளைக்குச் சொல்லு என்னை வந்து காணும்படி என்று சொல்லி விட்டேன். அந்தக் கலியாணம் சிவந்துவிட்டது. அந்த ஏழை மனிதனும் தப்பி விட்டான், இதைக் கேள்விப்பட்டுவிட்டார்கள், இவர்கள். நான் கல்யாணத் தரகரென்று நினைத்து விட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த சாமான்களைப் பார்க்கவில்லையா? படித்த மோடர்."

என்று சொல்லிமுடித்தார் சுவாமி, அப்போதுதான் விஷயம் எங்களுக்கு விளங்கியது; ஒரு மகானைத் தரிசிக்க வரும் பொழுது எப்படி வரக்கூடாதென்பதற்கு, எடுத்துக்காட்டாகவிருந்தது அன்று அவர்கள் வருகை. எங்களுக்கோ அஃது ஒரு மறக்கமுடியாத சிறந்த படிப்பினையாயமைந்தது.

* * *

இதற்கு முற்றிலும் மாறான இன்னொரு சம்பவம் குறிப்பிடத்தக்கது. ஒருநாள், நண்பகல் பன்னிரண்டு மணியிருக்கும், சுவாமிகளின் சந்நிதானத்தில் சிலிருக்கும் போது, எங்கோ ஒரு தூரக்கிராமத்திலிருந்து, ஒரு வயது சென்ற பெண்மணி அங்கு வந்தார். ஏழைக்குடும்பத்துப் பெண்போலத் தோன்றியது. வரும் போது ஒரு பெரிய பலாப்பழத்தைத் தன் தலைமேல் சுமந்துகொண்டு வந்து சுவாமியின் முன் இறக்கி வைத்து விட்டு, வந்த களைப்புத் தோன்ற "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டுச் சுவாமிகளின் முன் உட்கார்ந்தார். இதையெல்லாம் ஒன்றும் பேசாது பார்த்துக் கொண்டிருந்த சுவாமி பெண்மணியை நோக்கி:

"இஞ்சே! உனக்கென்ன பைத்தியமா? இந்த வெய்யிலக்கை, இவ்வளவு தூரம் நடந்து இந்தப் பெரிய பலாப்பழத்தையுங் கொண்டு ஏன் வந்த நீ?"

என்றார்.

"அது நானெல்லோ காவிக்கொண்டு வந்தது; நீ ஏன் போட்டடிக்கிறாய்? என்ரை ஆசைக்கு நான் கொண்டு வந்தேன். அதுக்கு உனக்கென்ன? நீ ஒன்றும் எனக்குத் தரவேண்டாம். நான் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு ஆறிக்கொண்டு போகிறேன்."

என்றார், வஞ்சகம் சூது வாது யாதுந் தெரியாத அந்தக் கிராமியப் பெண். சுவாமி தன் வாயிலே கையை வைத்து பரிவுடன் அவளைப் பார்த்து:

"நீ நல்லாயிருந்திட்டுப் போ"

என்று கூறிவிட்டு, எங்களை பார்த்து:

"பார்த்தீர்களா, இந்த மனுஷி என் வாயையடக்கிவிட்டதை. அது தன் தலை விதியால் கஷ்டப்படுகிறது, அதற்கு நானென்ன செய்வது? நான் குறை சொன்னது பிழை தானே"

என்றார். அந்தப் பெண்மணியின் களங்கமற்ற உள்ளத்தைவியந்து கொண்ட சுவாமி, தன்முன் இருந்த தோடம்பழமொன்றை எடுத்துப் பெண்ணிடம் பரிவுடன் கொடுத்து

"இந்தாணை, நீ போய் நல்லாய் இரு"

என்று ஆசீர்வதித்தார். சிறிது நேரத்தின் பின் அந்தப் பெண்மணி எழுந்து,

"நான், அப்ப போட்டு வாறேன், நெடுநாள் எடுத்த பயணம்; இன்றுதான்

கைகூடியது. நீ மகாராசாவாய்இரு. நான் வாறேன்."
என்று முணுமுணுத்துக்கொண்டு வெளியேறினார்.

மேலே குறிப்பிட்ட இரு சம்பவங்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது,

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறிவில்லாதவென் கர்மத்தையென் சொல்வேன்
மதியையென் சொல்லுவேன்"

என்ற தாயுமானசுவாமிகள் புலம்பல் ஞாபகத்துக்கு வருகிறது. படிப்பிலோ, செல்வத்திலோ, செல்வாக்கிலோ பண்பாடு தங்கியிருக்கவில்லை என்பது இதனால் வெளிப்படையாகின்றதல்லவா?

யோக சுவாமிகள் அனேகமாகச் செல்வந்தர், செல்வாக்குள்ளவர்கள், அல்லது கார் வைத்திருப்பவர்களுடன் பழகுவது, அவர்களைத்தான் மதிப்பது, அவர்கள் வீடுகளுக்குத்தான் செல்வது, என்ற ஓர் அபிப்பிராயம் சிலரிடம் அந்தக்காலத்திலிருந்தது. ஒரு நாள் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் நாங்கள் சிலர் இருக்கும் போது, ஓர் இளைஞன், துணிச்சலோடு, இதைப்பற்றிச் சுவாமியிடம் கேட்டான்:

"சுவாமி! குறை நினைக்க வேண்டாம்: பெரிய பணக்காரர், கார் வைத்திருக்கிறவர்கள், இவர்களுடன்தான் நீங்கள் அதிகமாகப் புழங்கிக் கொள்வதென்று சிலர் சொல்லுகிறார்கள். அதில் ஏதும் உண்மையிருக்கிறதா?"

சுவாமி சிரித்தார்

"வறியவர்கள், எளியவர்கள், பொதுவாக நல்லவர்கள், அவர்களால் உலகத்துக்கு அதிகம் தீமை விளைவதற்கிடமில்லை. நீ சொன்ன பெரியவர்களைத்தான் திருத்த வேண்டும். அவர்களிடம்தான் தூர்க்குணங்கள் மலிந்து கிடக்கின்றன. சுயநலம், பொறாமை, பெருமிதம், பிறரைச் சுறண்டும் பழக்கம், இக் குணங்களை மாற்ற முடியுமானால், அவர்களால் சமுதாயத்துக்கு மிக்க நன்மையுண்டாகும் அல்லவா? நல்லகாலமாக அவர்கள் தான் அதிகமாக என்னிடம் வருகிறார்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நான் எத்தனிப்பதில் என்ன பிழை?"

என்று மிகப் பொறுமையாக, சுவாமி விளக்கம் கூறினார். இளைஞன் குறிப்பிட்ட அந்தத் தப்பெண்ணம் அறியாமையினால் எழுந்ததென்பது வெளியானது, கேள்வி

கேட்ட இளைஞனும் பூரண திருப்தியடைந்ததாகச் சுவாமிக்கு நன்றி கூறினான், கேள்வி கேட்டதற்கு மன்னிப்பும் கோரினான்.

ஒழுக்கம், சீலம், இவையில்லாத பல செல்வந்தர்கள் சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கைப் பெருக்கும் ஆசையினால், உலகத்தால் போற்றப்படும் உத்தமர் யாருமிருப்பின் அவர்களிடத்து நட்புரிமை பாராட்ட எத்தனிப்பது இயல்பு. ஆயினும் இவ்வண்ணம் யோக சுவாமிகளை நாடி வந்த பலர், காலா காலத்தில் சுவாமிகளின சகவாசத்தினால் தங்கள் துர்க்குணங்களிலிருந்து விடுதலை பெற்று, நல்லவர்களாய் பண்பாடுடையவர்களாய், தாமிதுவரை கட்டிக்காத்து வந்த சுயநலப்போக்கை மாற்றிச், சுவாமிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் மெய்யன்பர்களாகி, தங்களின் முன்னைய உயர் பீடங்களிலிருந்து கீழேயிறங்கி, ஏழை எளிய மக்களுடனும் அளவளாவி, இரக்கங்காட்டி, இயன்ற தொண்டுகளையும் செய்து, இறைபணி நிற்கத் தூண்டப்பட்டார்கள் என்பதற்கு ஐயமேயில்லை. இதற்குப் போதிய திருட்டாந்தங்கள் உண்டு. சுவாமிகள் எங்கள் மத்தியில் அவதரித்ததன் பெறுபேறு இதுவாகும். இஃதொன்றே ஈழத்து மக்கள் பண்டு செய்த தவப் பயன் எனலாம்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்ற அடிப்படைத் தத்துவத்தை நன்குணர்ந்த ஞானி யோக சுவாமிகள். ஆகவே சகல சீவராசிகளிடத்தும் யாதொரு வேறுபாடுமின்றிக் கருணை காட்டும் இயல்புடையவராயிருந்தார்.ஒரு விலங்கு கொடுமையுள்ளதாய் இருந்தால் கூட அவ்வளவு தீமை இல்லை. ஒரு மனிதன் கொடியவனாகவிருந்தால், அவன் மனித சமுதாயத்தையே பிடித்து ஆட்டி அலைக்கின்ற பேய்போல ஆகிவிடுவான் என்பது சுவாமிகள் மனசில் ஊன்றியிருந்தமையினாலேயே, போலி மனிதர்களை, பண்பாடு சிறிதுமில்லாத கபடர்களை, பண்ட மாற்றுக்காகத் தன்னிடம் பழம் பாக்கு வெற்றிலையோடு வரும் மனிதர்களைச் சில நேரங்களிற் சீறிச் சினந்து துரத்துவது. இதுவும் கருணையின்பாற் பட்டது தான். (மறக்கருணையென்பர், அறிஞர்.) இந்த வழியாலும் பலர் திருந்தியிருக்கிறார்கள் என்பதை நானறிவேன்.

ஒரு நாள், "ஒரு பெரியவர்" என்று பலராலும் மதிக்கப்படுபவர், சுவாமியின் கொட்டில் முன்றிலில் வந்து நின்றார். சுவாமி உள்ளிருந்து அவரை இடையிடையே பார்த்தாரேயன்றி "உள்ளே வா" என்று உத்தரவு கொடுக்கவில்லை. அந்த ஆள் ஏறத்தாழ ஒரு மணித்தியால நேரம் நின்றபடியே அங்கு காணப்பட்டார். முடிவில், வெளியிலேயே மண்தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துவிட்டு, கண்களிலிருந்து கண்ணீர் சொரிய திரும்பிவிட்டார்.

"கொண்டு வந்த சரக்கை வீட்டிலேயே வைத்துவிட்டு நாளைக்கு வருவார்"

என்றார் சுவாமி. அப்போதுதான் அந்தச் சம்பவத்தின் மர்மம் எமக்கு வெளித்தது.

* * *

மனித தோற்றத்தால் மட்டும் ஒருவன் மனிதனாகி விடுவதில்லை; அவனுடைய உள்ளீடு என்ன, ஆன்ம நலம் என்ன, என்பதே பிரதானம். உயர்ந்த சிந்தனைகளையுடைய மேலான வாழ்க்கையே மனிதனை மனிதனாக்குவது.

"இனியன நினையாதார்க்கு இன்னா தான் இறைவன்"

என்கிறார் அப்பரடிகள்.

உலக மக்கள் ஒருவரை உயர்ந்தவரென்றும் இன்னொருவரைத் தாழ்ந்தவரென்றும் எடைபோடும் தராசுகோல் வேறு; திரிகாலவுணர்ச்சியுடைய ஞானிகள், துறவிகள், உயிர்களைக் கணக்கிடும் முறைவேறு. ஈசனே ஒரு கணக்கர் என்கின்றார் அப்பர். இன்னம்பர்வாசியும், எல்லாவுலகுமானவருமாகிய ஈசன், இன்று நேற்றல்ல, என்றும் கணக்கெழுதிக் கொண்டேயிருக்கிறாராம். அவர் எழுதும் பட்டியல் எப்படிப்பட்டது? மனமாரத் தொழுது தூய மலர்கள் தூவி, வாயார வாழ்த்தி காதலாகிக் கசிந்து, அழுது அரற்றுகின்றார் யார் யார், எத்தனை பேர் என்றும்; அடுத்து, நினையாத நெஞ்சமுடையவர்கள், வாழ்த்தாத வாயையுடையவர்கள், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்காத வன்கணாளர் யார் யார், எத்தனை பேர்கள் என்றும் பட்டியல்களை சதா தயாரித்தபடியேயிருக்கின்றார். நாம் எத்தகையரென்பதை, மற்றவர்கள் அறிந்து கொள்ளாமல் ஒருவாறு தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் எழுத்தறிநாகேச்சுரரான இன்னம்பர்க் கீசனின் கணக்கிலிருந்து, குறிப்பேட்டிலிருந்து, தப்ப முடியாது:

"தொழுது தூமலர் தூவித்துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

இப்படியான கணக்கேடு பதிவுசெய்ய, ஈசனுக்கு மாத்திரமல்ல ஈசனடியார்க்கும் முடியுமென்பது சொல்லவும் வேண்டுமோ?

மால் பண்ணுபவர்களையும், மாதிரி பண்ணுபவர்களையும் அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே சுவாமிகள் அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தவர்.

அவர்களுக்கு, மக்கள் எக்குடிப் பிறந்தாலும், எத் தொழிலைச் செய்தாலும், நல்லவர்கள் நல்லவர்களே; கெட்டவர்கள் கெட்டவர்களே; பிறப்பினாலோ தொழிலினாலோ உயர்வு தாழ்வு இல்லை.

## 13. கருணைக் களஞ்சியம்

யோக சுவாமிகளின் உள்ளம் எல்லையற்ற கருணை நிறைந்தது. அவர் கருணை பல திறப்பட்டது. அவர் அணைத்தாலும், அடித்தாலும், சிரித்தாலும், வெகுண்டாலும், எல்லாம் கருணையே. வெளிப்படையாக அவர் கருணை காட்டியமை மிக அருமையெனலம். மறைமுகமாக, யாருமறியாவண்ணம் அவர் காட்டிய கருணைக்கு அளவேயில்லை. யானறிந்த ஒரு சில சான்றுகளை அடிக்கடி நினைப்பதுண்டு. நினைக்குந் தோறும் சுவாமிகளிடத்து உள்ளம் கசிந்து காதல் பெருகும். உலகப்பற்றற்றிருந்தும், தாமரையிலையில் தங்கும் தண்ணீர்போல, மக்கள் மத்தியில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து இருந்தவர் சுவாமி, ஆயினும் சில சந்தர்ப்பங்களில் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு சகிக்கமாட்டாது அவர் இதயம் உருகியதைப் பலர் அறிவர். அவரின் ஆழ்ந்த அனுதாபமும் இரக்கமும், அன்பும் ஆதரவும் மட்டற்றிருக்கும்.

* * *

ஒரு நாள் சுவாமியின் பழைய அன்பர் ஒருவரும் நானும் அவருடைய ஆச்சிரமத்திலிருந்தோம். அந்தப் பழைய அன்பர், சுவாமிகளுக்கு என்ன பணி எப்போ செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் காத்திருந்து தயக்கமின்றிச் செய்யும் மனப்பான்மையுடையவர். அத்துடன் பொருள் படைத்தவர். அன்று சுவாமிகளின் பேச்சு மக்களிற் பலர் படும் இன்னல்களைப் பற்றியேயிருந்தது. அப்போது ஒரு வயோதிபர் மிகுந்த மன வாட்டத்தோடு அங்கு வந்து சேர்ந்தார். வந்து சுவாமிகளின் அறைக்கு வெளியே தலை குனிந்த வண்ணம் மௌனமாக நின்றார்.

"என்ன காரியம்? உள்ளே வாரும்" என்றார் சுவாமி. உள்ளே வந்ததும், அவர் கண்ணீர் விட்டு, வெம்பி வெம்பி அழத்தொடங்கினார், சுவாமிகளின் திருவடிகளைத் தன் இரு கைகளாலும் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார். ஒன்றுமே பேசவில்லை.

"அதெல்லாம் சரி வரும்; ஒன்றுக்கும் பயப்பிடாதையும்; நீர் போய் வாரும்."

என்றார் சுவாமி, ஏதோ புதையல் பெற்றவர் போல முகமலர்ந்து கண்களையும் துடைத்துக் கொண்டு, திரும்பவும் சுவாமியின் திருவடிகளைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு, வெளியே போய்விட்டார் வயோதிபர். அவர் போனபின் சுவாமி அங்கிருந்த பழைய அன்பரைப் பார்த்து:

"பாவம்: வறுமைப்பட்ட குடும்பம்: புன்னாலைக் கட்டுவனிலிருந்து வருகிறது. கனபிள்ளைகள், மூத்த பெண்ணுக்கு 26 வயசாகி விட்டது. சீதனம் கொடுக்க ஒன்றுமில்லை. கலியாணம் பேசினால் நகையாயினும் போட்டுவிடு, நான் செய்கிறேன் என்று மருமகன் முறையிலேயுள்ள ஒருவன் சொல்லிக் கொண்டு திரிகிறான். கிழவன் என்ன செய்யும்: ஒரு அப்பிராணி. ஏதேனும் கொடுத்து உதவி விடு."

என்றார். "ஓம் சுவாமி. அது நான் செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு எழுந்துவிட்டார், அன்பர். திரும்பிப் போய்க்கொண்டிருந்த வயோதிபர் பின் சென்று அவரின் பெயரையும், முகவரியையும் கேட்டுக்கொண்டு வந்து, முன்போலச் சுவாமிகளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

(பின் நானறிந்தேன், அந்த அன்பர் அடுத்த நாளே, சுவாமிகளின் அனுக்கிரகத்தைப் பெற்ற வயோதிபரைத் தேடிப்பிடித்து, காசு ரூ 5000/- அவருக்குக் கொடுத்து, மகளுக்கு வேண்டிய நகைகளைச் செய்வித்துக் கல்யாணத்தை முடித்து வைக்கும்படி ஆறுதல் சொல்லிவிட்டுத் திரும்பினாராம்.)

* * *

இன்னொருமுறை, மாலை நேரம் பலர் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் கூடியிருந்து ஆனந்தமாகக் கதைத்துக் கொண்டிருந்தோம். தன் முன் கூடியிருப்பவர்களுடைய மனங்கள் அங்கிங்கு அலையவிடாமல், நல்ல நல்ல பகிடிகளும் இடையிடையே கலந்து, சம்பாஷித்துக் கொண்டிருப்பது சுவாமிகளின் வழக்கம். யாராயினுமொருவருடைய மனம் அங்கில்லாமல் புறத்தே சென்றுகொண்டிருந்தால் உடனே சுவாமிகளுக்கு அது தெரிந்துவிடும். அன்றைய கூட்டத்தில் ஒரு வழக்கறிஞர் இருந்தார்; நாள்தோறும் மாலைப்பொழுதில் மதுவருந்தும் பழக்கமுடையவர். ஆயினும் சுவாமியிடத்து அன்பு பூண்டவர். நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தபோது, இந்த அன்பருக்கு மனத்தில் ஒரு குழப்பம் உண்டானது, அவரின் சங்கடத்தைச் சுவாமி அவதானித்ததும், தன் படுக்கைப் பாயையுயர்த்திக் கீழே கையை வைத்து ஏதோ எடுத்து, ஒருவருமறியாவண்ணம், அமைதியற்றிருந்த அன்பரைத் தன் கண்ணாற் சைகைகாட்டிக் கிட்ட அழைத்து,

"நீ, போய் வா; இந்தா இதையும் கொண்டு போ"

என்று அனுமதி கொடுத்தனுப்பி விட்டார். என்ன நடக்கிறதென்பது எங்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை, அந்த அன்பர் போனபின், இருந்தவர்களைப் பார்த்து:

"பாவம்; நல்ல மனிதன்; ஒரு கெட்ட பழக்கத்தைப்பழகிக் கொண்டது. விடவும் முடியவில்லை: கஷ்டப்படுகிறது, ஆரென்ன செய்யலாம். ஒரு நாளைக்கு விட்டால், சாப்பிடவும் மாட்டுது; அன்றிரவு நித்திரையுங் கொள்ளாது, நேரமாச்சு; தானாகவேயெழுந்து போகப் பயமும் வெட்கமுமாயிருக்குது, இப்போ தப்பினேனென்று ஆனந்தமாகப் போகிறார்"

என்று மிகுந்த இரக்கத்துடன் விளக்கம் கூறினார். இது சுவாமியின் கருணை உள்ளத்தின் இன்னொரு சாயல்.

* * *

மேலே குறிப்பிட்ட இரு சான்றுகளும் அறக்கருணையெனலாம். சுவாமிகள் காட்டிய மறக் கருணையிலும் ஒரு சான்று இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்கும்.

ஆச்சிரமத்தில் ஒரு நாள் பெருங்கூட்டம், சுவாமிகள் நல்ல புத்திமதிகளைப் பொதுவாக எல்லோருக்கும் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார். ஓர் இளைஞன், 17, 18 வயசிருக்கும். யோகத்திலிருப்பதுபோல பத்மாசனமிட்டுக் கொண்டு, முதுகெலும்பையும் நேராக நிமிர்த்திக்கொண்டிருந்தான். அப்படியிருந்தால் யோக சுவாமி தன்னை மெச்சுவாரென நினைத்திருக்கக்கூடும், அனுபவம் குறைந்த இளம் பிள்ளைதானே, இளைஞனின் இந்த நிலையைச் சுவாமி கவனித்துக் கொண்டார். சிறிது நேரத்தின் பின், மெதுவாக எழுந்து சென்று, அவனின் முதுகில் தன் கையினாலே படாரென்று, ஒரு பலத்த அடி போட்டு,

"என்ன மால் பண்ணுகிறாய்? இங்கே பார், மற்றவர்கள் எப்படியிருக்கிறார்களென்று; அவையைப் போல நீயுமிரென். இப்பவே மால் பண்ணத் தொடங்கிவிட்டாயா?"

என்று உரத்துச் சத்தமிட்டுவிட்டுத் திரும்பிப்போய் தன்னிடத்தில் உட்கார்ந்தார். இளைஞன் மாத்திரமல்ல அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்து விட்டோம்.

உலகத்தில், வாழ்க்கையில் மால் பண்ணுகிறவர்களுக்குக் கணக்குண்டா? நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேரும் மால் தானே பண்ணுகிறார்கள் என்றால் மிகையாகுமா? மால் பண்ணுதல் மனித சுபாவமாய் விட்டதே, இதை உணர்ந்து போலும், அன்று சுவாமிகள் இந்த நோய்க்கு ஒரு மருந்து கொடுக்கத் தீர்மானித்தார். சுவாமியின் கரத்தினால் அடிபட்ட இளைஞன் என்ன புண்ணியஞ் செய்தானோ? முன் செய் புண்ணியவசத்தினாலல்லாமல் அவனுக்கு இந்த அனுபவம் கிடைத்திராது. ஒரு மகானிடத்திலிருந்து படித்த இந்தப் பாடத்தினால், அவனுடைய வாழ்வில் ஒரு திருப்பம் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று முதல் எது விஷயத்திலும் மால் பண்ணும் பழக்கத்தை அவன் அறவே ஒழித்திருப்பான் என்பதற்கு ஐயமேயில்லை, இளம் வயதிலேயே அந்தப் பையனைத் திருத்தினால், அவன் ஒரு பண்பாடுள்ள, எல்லோருடைய மதிப்புக்கும் உரியவனாக, வளருவான்: அப்படியவனை வளர வைக்க வேண்டுமென்ற கருணையினாலன்றோ, சுவாமிகள் அன்று அவனைத் தண்டிக்கத் திருவுளங் கொண்டது. அவன் அன்று கற்ற பாடம் அவனின் சீவியகாலம் முழுதும் அவனுக்கு நன்மை பயந்திருக்கும் என்று கூறவும் வேண்டுமோ?

* * *

மால் பண்ணுதல் ஆன்மாவைப் பீடிக்குமொரு நோய். ஆணவத்தின் அனந்த சக்திகளுள் அதுவும் ஒன்று. ஆசை, மயக்கம், என்பதன் பொருள், இல்லாததொன்றைத் தற்பெருமை காரணமாக இருப்பதாகக் காட்டி உலகத்தை ஏமாற்ற எத்தனிப்பது, நடிப்பது. மாணிக்கவாசக சுவாமிகளே இந்தத் தீய குணத்தை நினைந்து வருந்துகிறார்.

"நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே வீடகத்தே
புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்"

என்றிரங்கினார். மக்கள் மால் பண்ணுவதில், எல்லையற்ற முறைகளைக் கையாளுவது கண்கூடு. நடையில் மால், உடையில் மால், பேச்சில் மால், வழிபாட்டில் மால், அணிகலன்களில் மால், நட்பில் மால், தொழிலில் மால், அப்பப்ப! எத்தனை எத்தனை விதம்! மால் பண்ணுவதற்கு விதியில்லை, விலக்குமில்லை. இது நூதனமல்ல; ஏனெனில் உலக வாழ்வே மையல் தானே.

"மையலாய்இந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியுளகப் பட்டுத்........
தலை தடுமாறாதே."

என்னைக் காத்தருள் என்று மணிவாசகரே வேண்டினார் என்றால் மையல்

(மால்) எத்துணைச் சக்தி வாய்ந்த தென்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

> "நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து, நான் எனது எனும் மாயை கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக் கழறியே திரிவேனை."

என்ற மணிவாசகர் வாக்கும், உலக மக்களின் வாழ்வின் போக்கைச் சித்திரம் போல் எடுத்துக்காட்டுகின்றது.

> "புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்து இங்கு ஓர் பொய் நெறிக்கே விலங்குகின்றேன்."

என்பதும் மணிவாசகம்.

பேய்பிடியுண்டானின் செயல் எப்படிப் பேயின் செயலாகிறதோ, அஃதே போல், மால் பிடியுண்டானின் செயலும் மாலுக்கதிபதியாகிய ஆணவத்தின் செயலேயாகும். எமது உடம்பையே "பொக்கக் குடில்" என்கிறார் அருணகிரிநாதர். பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து பொய்யையே பெருக்கி வாழும் வாழ்க்கை, ஈற்றில் என்ன பயனைத் தரும் என்று அதைச் சொல்லவும் வேண்டுமோ?

நாடக மேடையிலேறி நடிக்க வேண்டும் பொழுது, தான் ஏற்றுக்கொண்ட பாத்திரத்துக்குப் பொருத்தமான வேடத்தைப் போட்டுக் கொள்ளுதல் இயல்பு, ஆனால் நாடகம் முடிந்ததும் வேடம் கைவிடப்படவேண்டியது. அதே வேடத்தைத் தொடர்ந்து அணிந்து கொண்டு ஊரில் ஒருவன் நடமாடினால், உலகம் சிரிக்கும். உலகத்து மக்கள் அனைவருமே வேடதாரிகளாகி, உலக மேடையில் சதா நடிக்கும்போது, சிரிப்பதற்கு யார் இருக்கிறார்கள்? இந்த நிலைதான் நாமிப்போ உலகத்தில் காண்பது.

இதை எழுதும்போது, வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய நூலொன்றிற் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. திருவொற்றியூர்க் கோயில் வெளி வீதியில் ஒரு துறவி வசித்து வந்தார். அநேகமாகக் கோயிலின் முன்றிலில் ஒரு சிறு குந்தில் நிர்வாணமாக இருப்பது அவர் வழக்கம். யாரொருவருடனும் கதைப்பதில்லை, எவரும் அவரை நாடுவதுமில்லை. ஆயினும் கோயிலுக்கு வந்து போகிறவர்களும், அருகாமையிலுள்ள வீதி வழியாகச் செல்லும் பிரயாணிகளும், இந்த நிர்வாணக் கோலத்தோடு வாழும் அபூர்வமான துறவியைக் கவனிக்காது போவதுமில்லை. ஒருநாள் இராமலிங்க சுவாமிகள், அத்துறவி இருந்த பக்கமாகவுள்ள வீதி வழியே, நடந்து செல்ல நேர்ந்தது, சுவாமிகளைத் துறவி கண்டதும், தன்

கைகளிரண்டினாலும் தனது மர்ம ஸ்தானத்தைப் பொத்தி மூடியவண்ணம்,

"ஒரு மனிதன் வருகிறானெடா"

என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டு, இருந்தவிடத்தை விட்டு மெல்ல நகர்ந்து விட்டார். இதன் அர்த்தமென்ன? அந்தத் துறவி தன் சுற்றாடலில் சஞ்சரித்து வந்த நூற்றுக்கணக்கான மக்களுள், முதல் முதல் ஒரு மனிதனைக் கண்டது அன்றுதான். இராமலிங்க சுவாமிகள்தான் அவரின் கண்களுக்கு ஒரு "மனிதன்" ஆகத்தென்பட்டது. தன்னையறியாமலே அவருக்கு நாணம் வந்துவிட்டது. இந்தச் சம்பவத்திலிருந்து நாம் படிக்கக்கூடிய பாடமொன்றுண்டு. இன்றைய உலகில் வாழும் மக்களுள் "மனிதன்" என்று மதிக்கக் கூடிய மனிதப்பண்பாடுடையவர்கள் மிகமிகச் சிலரேயாவர் என்பதன்றோ!

இலைமறை காய்போல அங்குமிங்குமாக,இயற்கையோடியைந்து வாழும் மெய்யறிவாளர்களுக்கு "மாலும்", "மாதிரியும்" தீராக் கவலையையுண்டாக்கும். சில நேரங்களில் ஆத்திரத்தையும் உண்டாக்கும். மேலே குறிப்பிட்ட இளைஞனின் சம்பவதின்போது யோக சுவாமிகளுக்கு எழுந்த சீற்றம் அளவு கடந்தது. இளைஞனுக்கு அது வரப்பிரசாதமானது.

நாம் மால் பண்ணுவதெதற்காக? நாலுபேரெமைப்பார்த்து மதிக்க வேண்டும் என்பதே, நம்மிடத்தில்லாதகுணங்களோ, செல்வம், செல்வாக்கோ, நம்மிடத்துண்டென்று பிறர் மதிப்பின் நமக்கொரு திருப்தி. நம்மிடத்துள்ள குறைபாடுகளையும், குணக்கேடுகளையும், பிறரறியாவண்ணம் மால்பண்ணி மூடி மறைக்கலாம் என வைத்துக்கொண்டாலும், அவற்றை எம் மனச்சாட்சியறியாவண்ணம் மறைக்க முடியாது, கணப்பொழுதும் எம்மை விட்டு நீங்காது எம்முடன் கூடவே எங்கள் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் சாட்சியாகவிருக்கின்ற பரம்பொருளிடமிருந்து, மறைப்பது எப்படி என்று நாம் சிந்திப்பதில்லை. எம்முடன் தோன்றாத் துணையாயிருந்து,

"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய்(பிறவிநோய்) தீர்த்தருளவல்ல"

இறைவனை வஞ்சித்துப் புறக்கணித்து, இன்றிருந்து நாளைமறைகின்ற எளிய உலக மக்களின் மதிப்பைப் பெறப் பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்ற மனிதரின் அறியாமைதான் என்னே!

"ஆவியொடு காயமழிந்தாலும், மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே!-மேவிய சீர்
வித்தாரமுங் கடம்பும் வேண்டா மடநெஞ்சே!

செத்தாரைப் போலே திரி"

(வித்தாரம் = இடம்பம்; கடம்பு = தீங்கு விளைக்கும் உலக உறவு)

"வித்தாரம் பேசினுஞ். சோங்கேறினுங், கம்பமீதிருந்து
தத்தாவென்றோதிப் பவுரி கொண்டாடினுந், தம்முன்றம்பி
யொத்தாசை பேசினுமாவதுண்டோ, தில்லையுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படியல்லாது,, வேறில்லை கன்மங்களே
(சோங்கு = மரக்கலம்; பவுரி = பவுரிக்கூத்து!
தம்முன் = தமையன் : ஒத்தாசை பேசினும் = உதவியாகப் பேசினாலும்)

~ பட்டினத்தடிகள்.

## 14. துறவிக்கு வேந்தனும் துரும்பு

ஒருநாள் அற்புதமான சம்பவமொன்று நடந்தது, சுவாமிகளின் ஆச்சிரமத்தில் மூன்றுநாலு பேர் இருந்தோம். மாலை நேரம்; ஆறு மணியளவிலிருக்கும், சுவாமிகள் ஆனந்தமாகப் பாடிக்கொண்டு எங்களையும் பாடச்செய்து கொண்டிருந்துவிட்டுச் சில நிமிடங்களுக்குக் கண்களை மூடித் தியானத்தமர்ந்தார். சடுதியாக எழுந்து,

"இனி நீங்கள் போய் வாருங்கள்"

என்று விடை தந்துவிட்டு, எங்களுக்கு முன்னாகவே தானெழுந்து விரைவாக வெளியே றோட்டுக்குச் சென்றார். இந்தச் சடுதியான நிகழ்ச்சி எங்களுக்கு விளங்கவில்லை; நாங்களும் மெதுவாக நடந்து சுவாமிக்குக் கொஞ்சத் தூரத்தில் பின்னாகச் சென்றோம். சுவாமி கொழும்புத்துறை றோட்டில் யாழ்ப்பாணப் பட்டினத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்; அவருக்குச் சற்று முன்னாலே பட்டினப் பக்கத்திலிருந்து இரண்டு, "தடியனா பிள்ளைகள்" ஏதோ பலத்த சத்தம் போட்டுக்கொண்டு வருவதைக் காணத்தக்கதாகவிருந்தது. வந்துகொண்டிருந்தவர்களின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் சுவாமிகளைப் பற்றியேயிருந்தன என்பது தெரிந்து கொண்டோம்;

"சுவாமிகளாம், சுவாமி; இவருக்கேன் இந்த வேலை, தேர்தல்
பிரசாரஞ் செய்தலும் சுவாமியின் வேலையா? இன்றைக்கு
இவருக்கொரு பாடம் படிப்பிக்க வேணும்? தாடியைப் பிடித்து ஒரு
ஆட்டாட்டினால் எல்லாம் சரி வரும்......"

இந்தப் பாணியில்தான் அவர்களின் கூக்குரல் இருந்தது, யாரோ விஷமிகள், இவர்களுக்கு மதுவை நிறைய ஊட்டிச் சுவாமிக்கெதிராகத் தூண்டி உசார்படுத்தி விட்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. நிதானமாக நடக்கவும் முடியாத நிலை அவர்களின் நிலை. சுவாமி இவர்களுக்கு நேரே எதிரே சென்றுகொண்டிருப்பது எங்களுக்குப் பயத்தையும் வியப்பையும் தந்தது. என்ன செய்வதென எங்களுக்குத் தெரியவில்லை.

சுவாமி அவர்களைக் கிட்டியதும் அவர்களின் கூக்குரல் நின்று விட்டது.

"என்ன இந்தப் பக்கம் இன்றைக்கு? எங்கே நடை? ஆரவாரத்துடன் வாறிகள். என்னைப் பார்க்கத்தானே? உங்களை எதிர் கொண்டு வரவேற்க நானே வந்திட்டேனே!"

என்றார் சுவாமி. வந்த இருவரும் உடனே, தெருக்கானுக்குள் விலத்தி நின்று கொண்டு,

"நாங்கள் சும்மா இதாலை வந்தநாங்கள் சுவாமி; நீங்கள் வாருங்கோ"

என்று மிகமிகத் தாழ்மையாக விடையளித்து விட்டுக் குனிந்து நின்று சுவாமிகளுக்கு வழி கொடுத்தார்கள்.

"வாருங்கோ இதாலை போவோம்"

என்று சுவாமிகள் முன் செல்ல அவர்களும் பின் சென்றார்கள், மிக்க மிக்க மரியாதையோடு. சுவாமிகளைத் தாக்கும் நோக்கத்தோடு வந்தவர்கள், அவரைக் கண்டதும், மதுமயக்கமும் நீங்கி, மதியும் விளக்கம் பெற்று, இத்துணை தாழ்மையுடன் சுவாமியுடன் அன்னியோன்னியமாகச் சம்பாஷித்துக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்து போவதைக் கண்டதும், எங்களுக்கு அதிசயத்தின் மேல் அதிசயமாயிருந்தது. புலிகள் போல் வந்தவர்கள் ஒரு நொடிப் பொழுதில் பசுக்கள் போலானார்களே!

"துறவிக்கு வேந்தனும் துரும்பு" என்னும் பழமொழி எங்கள் ஞாபகத்துக்கு வந்தது. பஞ்சப் புலன்களையும் கட்டுப்படுத்தி, மனத்தை தம் வசப்படுத்திக் கொள்ளும் வல்லமை கைவரப்பெற்ற மகான்களின் ஆற்றல் எத்துணையானதென்பதை அன்று நடந்த சிறு சம்பவம் நிரூபித்து விட்டது.

இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கும்போது, இறைவனிடத்தே தம்மை முற்றிலும் ஒப்படைத்த ஞானிகள் உலகில் எப்படி இருப்பார்கள் என்பதை விளக்க வந்த சமய சாஸ்திரங்கள் என்ன சொல்கின்றனவென்பதை அறிந்திருத்தல் நன்று:

* * *

"இவனுலகில் இதம் அகிதம் செய்தவெல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பாலிசையும்
அவன் இவனாய் நின்ற முறை, யேகனாகி
யரன் பணியின் நின்றிடவுமகலுங் குற்றஞ்
சிவனும் இவன் செய்தியெலாம் என் செய்தி
யென்றுஞ், செய்ததெனக் கிவனுக்குச் செய்ததென்றும்
பவமகலவுடனாகி நின்று கொள்வன்.
பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே"
~ சிவஞானசித்தியார்

இனி, உலகப்பற்றை அறவே ஒழித்து, இறைவன் திருவடிகளையே பற்றுக்கோடாக வாழ்ந்த பெருமக்களின் சொந்தத் திருவாய்மொழிகளுட் சிலவற்றையும் பார்ப்போம்:

"மண்பாதலம்புக்கு மாகடன்மூடி, மற்றேழுலகும்
விண்பாற்றிசைகெட்டு இருசுடர் வீழினுமஞ்சல் நெஞ்சே!
திண்பானமக்கொன்று கண்டோந் :திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

வானந்துளங்கிலென் மண் கம்பமாகிலென், மால்வரையுந்
தானந்துளங்கித் தலை தடுமாறிலென், தண் கடலு
மீனம் படிலென், விரிசுடர் வீழிலென்.வேலை நஞ்சுண்
டூனமொன்றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே"
~ திருநாவுக்கரசர்

* * *

பல்லவ ராசன் சமணரிட்ட சூழ்ச்சி வலையிலகப்பட்டு, திலகவதியாரைத் தரிசிக்கச் சென்றிருந்த திருநாவுக்கரசருக்கு ஒரு கட்டளை பிறப்பிக்கிறான்:

"தெருள் கொண்டோர் இவர் சொன்ன தீயோனைச்செறுவதற்குப், பொருள்
கொண்டு விடாதென்பாற் கொடு வாரும்"

என்பது அவன் ஆணை, அவ்வாணையை நிறைவேற்ற அமைச்சர்கள். முழவுகள் ஒலிக்கும் சேனைகளோடு திருநாவுக்கரசரிடம் சென்று,

"இன்று நமையரசனழைத்தெமை விடுத்தான்; போதும்,"

என்றார்கள். சிறிதும் கலக்கமடையாத நாவுக்கரசர் கொடுத்த பதில்:

"நாமார்க்கும் குடியல்லோம்! நமனையஞ்சோம்!
நரகத்திலிடர்ப்படோம்; நடலையில்லோம்;
ஏமாப்போம் பிணியறியோம்: பணிவோமல்லோம்:
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை,"

இவ்வளவில் தன் விடையை அவர் நிறுத்திவிடவில்லை. இத்துணை சுதந்திரம் தனக்கு எப்படிக் கிடைத்ததென்பதற்கு விளக்கமும் சொல்லிவைக்கின்றார்:

"தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்,
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே,"

சிவனிடத்தும் அடியாரிடத்துமன்றி, மற்றெந்த விடத்தும் அரசர்க்கரசனாகிய கோமானுக்கு ஆட்பட்டவர்கள், தலைவணங்காமையாகிய இறுமாப்பும், வீரமும் உடையவர்கள் என்பது இத்திருப்பாட்டில் தொனிப்பது வெளிப்படை.

## 15, தாயினும் நல்ல தலைவன்

கண்டியில் நான் சொற்பகாலம் வேலையாகவிருந்த பொழுது ஒருநாள், ஞாயிற்றுக்கிழமை, பேராதனையில், கலஹா என்னுந் தேயிலைத் தோட்டத்தில், உத்தியோகமாயிருந்த ஒரு நண்பரைச் சந்திக்கச் சென்றிருந்தேன் அங்கு நல்லதோர் வாய்ப்பு என்னைக் காத்திருந்தது. என் நண்பர் வீட்டில் யோக சுவாமிகள் சிலநாட்களாகத் தங்கியிருந்தார். அவரைத் தரிசிக்கக்கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியளித்தது, நண்பர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலேயிருந்தார். ஒரு கிழமை வரையில் கடுஞ்சுரம். சுவாமிதான் நோயாளிக்கு ஆறுதலாகவிருந்ததுபோல் தோன்றியது, நண்பரின் குடும்பம் அங்கில்லை. தேயிலைத்தோட்டக் கூலியாள் ஒருவர்தான் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தார்.

நண்பரோ தோட்டத்தில் தனக்குரிய கடமைகளில் மிக ஈடுபாடுடையவர். தன் பொறுப்புக்களை நேரக் கட்டுப்பாடின்றி இராப்பகலாக, கண்ணும் கருத்துமாக கவனித்து வரும் பண்பாடுடையவர், ஒரு கிழமைவரை நோய்காரணமாக, வேலைக்குப் போவதற்கு இயலாமையினால், மனமுடைந்து துன்புற்றுக் கொண்டிருந்தார். தன் நோயிலும் பார்க்க, தன் வேலைக்கடமையில் தவறியமையே மேலான நோயாகக் கவலையைக் கொடுத்தது. அவருடைய சுபாவத்தைச் சுவாமி நன்கறிவர். சுவாமியிடம் அவருக்கு அளவு கடந்த பக்தி: நெடுங்காலப்

பழக்கம் சுவாமியைத்தானும் கவனித்து அவருக்குத் தொண்டாற்ற முடியவில்லையேயென்ற, அவர் மன வேதனையும் அதிகம். தேயிலைத்தோட்ட மருந்துச்சாலையிலிருந்து பெற்ற மருந்துகள் ஒன்றும் பயனளிக்கவில்லை. நண்பர் படும் அவஸ்தையையுணர்ந்துகொண்ட சுவாமிகள், நான் சென்றிருந்த அன்று காலை, நோயாளிக்கு ஒரு குடிநீர் தயாரிப்பதற்காகத்தானாகவே ஒரு பட்டியல் போட்டுத் தேவையான மருந்துச்சரக்குகளை எழுதி ஒரு கூலியாளிடம் கொடுத்து கண்டிப்பட்டணத்தில் வாங்கி வருமாறு அனுப்பியிருந்தார் என்று அறிந்தேன். மருந்துச் சரக்குகளுடன் ஒரு புது மட்பாண்டமும் வாங்கிவரக் கட்டளையிட்டிருந்தார். நான் அங்கு சென்று சேர்ந்த சில நிமிடங்களுக்குள் கூலியாள் சொல்லப்பட்ட சாமான்களுடன் வந்து சேர்ந்து விட்டார். நோயாளி போர்த்து மூடியபடி ஒரே படுக்கை.

என்ன விதமாகக் குடிநீரைத் தயாரிக்க வேண்டுமெனச்சுவாமி வேலையாளுக்கு விளக்கும்பொழுது நானும் உற்றுக் கேட்டுக்கொண்டு அவர் விபரித்த முறைப்படி ஆக வேண்டியவற்றை நானும் வேலையாளுமாகச் செய்தோம். சுவாமியும் அந்த வேலைகளிற் கலந்துகொண்டு அளவாக மருந்துச் சாமான்களையெடுத்துச் சுத்தி செய்து தந்தார். புதுச்சட்டியையுங் கழுவி அடுப்பில் ஏற்றி, சாமான்களைப்போட்டு, அளவுக்குத் தண்ணீரும் ஊற்றி, நெருப்பை மூட்டி எரித்துக்கொண்டிருந்தோம். நீர் எவ்வளவுக்கு வற்றிவிட்டதென அடிக்கடி சுவாமி வந்து பார்த்துக் கொள்ளுவார். இரண்டு மணி நேரம் குடிநீர் அடுப்பிலேயேயிருந்தது. அஃது அப்படியிருக்கையில், சுவாமியே ஒரு சிரட்டை தேடியெடுத்து, அதை உள்ளும் புறமும் செருக்கிக் கறைபோக்கிச் சுத்தம் செய்து கழுவி, வெய்யிலில் காயவைத்திருந்தார். இந்த வேலைகளில் சுவாமி காட்டிய ஆர்வம் எனக்கு வியப்பாயிருந்தது. தன் அன்பன் ஒருவனின் வருத்தத்தைப் போக்க எத்தனை கருசனை!

இரண்டு மணித்தியாலத்தின் பின் குடிநீர் அடுப்பிலிருந்து இறக்கப்பட்டு ஆற வைக்கப்பட்டது. சுவாமி நோயாளியின் அறைக்குள் புகுந்து அவரை விழித்து:

> "எழுந்திரு: முகத்தை வெந்நீர் கொண்டு கழுவு, விபூதியும் அணிந்துகொண்டு வா: குடிநீர் தயாராகிவிட்டது,"

என்று அழைத்தார். நோயாளியும் அப்படியே செய்து நிறைய விபூதியையும் அணிந்து, மெதுவாக நடந்து அறைக்கு வெளியே வந்தார். சுவாமி தன் கையினாலேயே சிரட்டையில் குடிநீரை வடித்து, ஏந்திக் கொண்டு வந்து,

நோயாளியைப் பார்த்து,

"இந்தா குடி"

என்று சிரட்டையை நீட்டினார். நோயாளி தன் இரு கரங்களையும் குவித்துச் சுவாமியை வணங்கிய பின், சிரட்டையை வாங்க இரு கரங்களையும் நீட்டினார். குடிநீர் நிரம்பிய சிரட்டையைப் பதனமாக அவரிடம் கொடுப்பது போலப் பாசாங்கு செய்துவிட்டுத் திடீரெனக் குடிநீர் முழுவதையும் சுவாமி அண்ணாந்து தன் வாயிலே ஊற்றிக் குடித்துச் சிரட்டையையும் அப்பாலே வீசி விட்டு:

"நீ இனி வேலைக்குப் போகலாம்: உனக்கிப்போ நல்ல சுகம்"

என்றார். எங்களுக்குண்டாய அதிசயத்துக்கு அளவேயில்லை. நோயாளி கண்ணீர் விட்டார். சிறிது நேரத்துக்கு இருவருந் திகைத்துப் போனோம். இந்த வைத்திய முறையை முன்னோ பின்னோ நாங்கள் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை. இந்தச் சம்பவம் முடிந்ததும், சுவாமி அவர்கள் உலாத்திக் கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வெளியே புறப்பட்டு விட்டார்கள். நோயாளியுஞ் சிறிது நேரம் நடந்தவற்றை நினைத்துச் சிந்தனையிலாழ்ந்திருந்து விட்டுச் சுவாமியின் கட்டளைப்படி நடக்க எண்ணி, வேலைத்தலத்துக்குச் செல்ல ஆயத்தமானார். நானும் அவரின் விடையைப் பெற்றுக்கொண்டு நடந்தவற்றைச் சிந்தித்த வண்ணம் கண்டிக்குத் திரும்பினேன்.

அன்று நடந்த சம்பவம் மனத்தில் நிறைந்தபடியேயிருந்தமையால், மறுநாள் சாயங்காலம் திரும்பவும் பேராதனைக்குச்சென்றேன். சுவாமிகளும், அவர்மேல் அளவற்ற அன்பு பூண்ட அடியவனாகிய எனது நண்பரும், குதூகலமாகச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நோயாளி பூரண சுகமடைந்து விட்டாரென்பதை அனுமானித்துக் கொண்டேன்.

இந்த நிகழ்ச்சியை நினைக்குந்தோறெல்லாம் பரமபிதாவாகிய கைலாயபதிக்குத் "திருநீலகண்டன்" என்ற பெயருண்டான காரணம் ஞாபகத்துக்கு வரும். தேவர்களின் ஓலக்குரல் கேட்டு இரக்கங் கொண்டு, அவர்களை அழிக்க வந்த ஆலகால விஷத்தைத் தாணயுண்டு, தன் மிடற்றில் அடக்கிக் கொண்டவரல்லவா அவர்! சிவனால் முடிக்கக் கூடியன சிவனடியார்களாலும் முடியுமென்பது தேற்ற மன்றோ!

உலகியலில் தானும், தான் பெற்ற குழவி, மருந்தின்வேகத்தைத் தாங்க மாட்டாது என்று கருதியன்றோ, கருணையுள்ளம் படைத்த தாயானவள் தானே மருந்தருந்துவது. தாயினும் நல்ல தலைவன் அல்லவா இறைவன்? அவன்

அடியாருள்ளத்து அடக்கம் என்பது உண்மையானால், அடியார்களும் மருந்தைத் தாமேயுட்கொண்டு மன்பதைகளைக் காப்பதில் என்ன வியப்பு!

மேலே குறித்த சம்பவத்தோடு ஒப்பிட்டுச் சிந்திக்கக்கூடிய இன்னொரு சமபவம், இங்கே குறிப்பிடுதல் நன்மை பயக்கும். இதைப்பற்றி எனக்குச் சொன்னவர் பள்ளிக்கூடத்தில் என்னைப் படிப்பித்த ஆசிரியரொருவர். யோக சுவாமிகளின் உண்மையான ஒரு பக்தர். சுவாமிகளுடன் பலமுறை மலைநாட்டுக்குப் பயணஞ் செய்தவர். அவர் ஒரு முறை எனக்குச் சொன்ன இந்த வரலாற்றை அவர் சொன்ன படியே இங்கு குறிப்பிடுகிறேன்.

> "நானும் சுவாமியுமாக மாத்தளையிலிருந்து அநுராதபுரத்துக்குப் பஸ் வண்டியில் வந்துகொண்டிருந்தோம். பஸ் வந்து மருதங்கடவளையில் கடைத் தெருவில் கொஞ்சநேரம் தரித்தது. தாகத்துக்குத் தேனீர் அருந்த எண்ணிக் கொண்டு இருவரும் இறங்கினோம். கடையில் போய் குடித்துவிட்டு வெளியே வரும்போது சுவாமி க்கடைக்கு முன்னால் படுத்துறங்கிக்கொண்டிருந்த ஒரு நாயை உற்றுப் பார்த்துவிட்டு என்னைக் கூப்பிட்டு, 'காசிருந்தால் ஒரு பாதிப்பாண் வாங்கி இந்த நாய்க்குப் போடு" என்றார், நான் உடனே அவர் விருப்பத்தை நிறைவேற்றினேன், பசியால் வாடிப் படுத்துறங்கிய நாய், மிக ஆவலோடு பாணைச்சாப்பிட்டுவிட்டு அதிலேயே நின்றது, சில நிமிடங்களில், அநுராதபுரத்திலிருந்து பஸ் வண்டியொன்று மாத்தளைப் பக்கத்தை நோக்கி, அதி வேகமாக வந்தது, மருதங்கடவளைக் கடைத்தெருவைத் தாண்டும் சமயத்தில், தெருவுக்கு ஒரு புறமாக நின்ற நாய் சடுதியாகப் பாய்ந்து மறுபுறம் ஓடியது. ஒரு கண்ணிமைப் பொழுதில், வேகமாய் வந்த பஸ்வண்டியின் கீழ் அகப்பட்டு அதிலேயே மடிந்தது"

அருளாளர்கள் ஜீவகாருண்யசீலர்கள், கருணையே அவர்கள் உள்ளங்களில் என்றும் ஊற்றெடுப்பது, அஃது அவர்களின் இயல்பு.

## *16. நூதனம் ஒன்றுமில்லை*

யோகசுவாமிகளைப் பார்க்க வருபவர்களுட் சிலர், எதற்காக அவர்களிடம் பல மக்கள் அடிக்கடி போகிறார்கள்,சித்திகள் ஏதும் செய்கிறார்களோ என மனத்தில் ஐயுறவுடன், ஆராய்ச்சிக்கு வருவதுமுண்டு, அப்படியானவர்கள் தலைகாட்டியவுடன் "இங்கே நூதனம் ஒன்றுமில்லை, நீங்கள் போய் வாருங்கள்"

என்று திருப்பி விடுவது வழக்கம், யோகம் அல்லது யோகா என்ற சொல்லைக் கேட்டதும், தற்கால மனிதரின் மனத்தில் நினைவுக்கு வருவது "அற்புதம்" அல்லது "சித்தி" யாம். இந்திய கண்டத்திலும் சில மேற்குநாடுகளிலும், சென்ற சில ஆண்டுகளாக யோகக்கலை பரவி வருகிறது. இந்துக்களிடையேயும் பழைய வழிபாட்டு முறைகளில் நம்பிக்கை குறைந்து, புதிய புதிய வழிகளில் நாட்டமுண்டாகி வருவதுங் கவனிக்கத் தக்கதாகவிருக்கிறது, தற்கால வாழ்க்கை நெருக்கடிகள் மக்களுக்கு நீண்ட கால சாதனைகளுக்கு இடமளிக்க முடியாமலிருக்கின்றன. ஆகவே, லௌகீக முன்னேற்றத்துக்குஞ்சரி ஆத்மீக மேம்பாட்டுக்குஞ்சரி, இலேசான குறுக்கு வழிகளை மக்கள் நாடுகிறார்கள், இஃது இயல்பே, யோக சுவாமிகள் அற்புதங்களையோ சித்திகளையோ அடிக்கடி செய்து காட்டியிருந்தார்களேயானால், அவர்களைக் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் அமைதியுடன் இருக்க மக்கள் விட்டிருக்கமாட்டார்கள்.

உலகத்திலுள்ள ஆன்மகோடிகள் யாவும் உய்யவேண்டு மென்னுந் திருவருள் நோக்குடன், இடையறாது பஞ்சகிருத்தியமாம் திருநடனஞ் செய்யும் பரயோகீஸ்வரரது பொற்பாதங்களைச் சரணடையும் பெருமக்களே யோகிகள், ஞானிகள் எனப்படுவார்கள். இவர்கள் ஐம்புல வேடர்களையும் வென்று, உலகப் பற்றுக்களிலிருந்து விடுதலையடைந்து இறைவனது திருவுள்ளக் கருத்துக்குத் தம்மை முற்றிலும் அர்ப்பணஞ்செய்து, இறை அன்பால் ஒன்றுபட்டிருப்பவர்கள். இவர்களே இறைவனின் சித்தத்தை நிலவுலகில் நடத்தி வைக்கும் சாதனங்களாகவிருப்பவர்கள். காணற்கரிய பிரபஞ்ச நுட்பங்கள் யோகிகள் ஞானிகளுக்கு அதீதமானவையல்ல. கண்டமான தூலவுலகத்துக்கு மேலெழுந்து, இறைவனாணையை அறிந்து, இறங்கி வந்து, நிலவுலகில் செயல்படுத்தும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. ஆதலினாலே, இவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்யவல்ல பெரியர். இச்செயல்களின் தாற்பரியம் சாமானிய மக்களுக்கு விளங்குவதில்லை. அந்த விளக்கக் குறைவினால், யோகிகள் ஞானிகளின் அரிய செயல்களை அற்புதங்கள் என்பர். இறைவனின் திருவருட்சத்தியின் செயற்பாட்டுக்குப் புறம்பாக, அற்புதம் என்று ஒன்று நடப்பது இல்லை. அண்டசராசரங்கள் யாவும், எல்லையற்ற அறிவும் ஆற்றலும் கருணையும் உடைய ஒரு கருத்தாவின் சித்தப்படி முறையே தோன்றி, முறையே நின்று, பின் ஒரு கால எல்லையில் முறையே ஒடுங்குகின்றன என்று நமது சமய சாத்திரங்கள் கூறுகின்றன. அக்கருத்தாவின்றி ஓர் அணுவும் அசையாது.

தான் செய்யும் பஞ்சகிருத்தியத்துக்குச் சாதனங்களாக, அருஞ்செயல்களைச் செய்யவல்ல பெரியரை நம் மத்தியில் வாழவைக்கின்றான் இறைவன். இப்பெரியர்

உலகத்தில் சஞ்சரித்தாலும் முத்திநிலைக்கு உரித்தானவர்கள்; சீவன்முத்தர் எனப்படுவர். அவர்கள் இறைபணி செய்யவே இங்கு வந்தார்கள். இறைவனை ஆண்டவனாகவுந் தம்மை அவன் அடியார்களாகவும் கருதிக்கொள்ளுபவர்கள்.

இறை பணி செய்ய அவதரித்த மகானுபாவர்கள் ஆன்மாக்களை உய்விக்கும் வழிகளையெல்லாம், திருவருட் சம்மதத்தைப் பெற்றே, செயல்படுத்துவர். தமக்கென ஒரு செயலில்லாதவர்கள். தம்மாலானது என்று ஒன்றையும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இறைவன் இட்ட பணியைச் செய்வதில் பெறும் இன்பத்தைவிட முத்தியின்பத்தைத்தானும் மேலானதாக வேண்டாதவர்கள் இவர்கள், என்று திருத்தொண்டர் புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் சொல்லி வைத்திருக்கிறார்:

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்,
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

இத்தகைய தீரர்களில் ஒருவரே யோக சுவாமிகள். அவரே சொல்லுகிறார்:

"நாங்கள் சிவனடியார்கள், எங்களுக்கு ஒரு குறையுமில்லை. சிவதொண்டு ஆற்றுவதே எங்கள் தொழில். அதற்காகவே நாம் உயிரோடிருக்கிறோம். உண்பதும், உறங்குவதும் அதற்காகவே, எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் எல்லாம் அதற்காகவே. நமக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை, பிறப்புமில்லை, இறப்புமில்லை. நாம் விளையாட்டுக்காயினும் பிறர் பொருளைக் கவரோம். பிறர் வசை உரையோம். எல்லாஞ் சிவன் செயல் என்பதை மறவோம். பசித்தாற் புசிப்போம். பிறர் செய்யும் நிட்டூரங்களையாவது கிருபையையாவது பொருளாகக் கருதமாட்டோம். எப்பொழுதும் தூய்மையுடையோம். துன்பத்திலும் இன்பத்திலும் கவலையடையோம். முழுதும் உண்மை. ஓம் தத் சத் ஓம்."

திருவடிப்பேற்றைத் தரும் ஞானத்துக்கு ஒருபடியே யோகம் எனப்படுவது. இறைவன்பால் ஆர்வமுள்ளவர்களே யோகஞ்செய்ய அருகதையுடையவர்கள் ஆவர். யோகசாதனைக்குச் சித்தசுத்தி இன்றியமையாதது. புலனடக்கம் பற்றுக்களை விட்டொழித்தல், மெய்ம்மை, கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய இயமங்கள் மிக முக்கியமானவை. யோகம் 27 வகையினதாகச் சொல்லப்பட்டிருப்பினும், பொதுவாக அவற்றை

இரு தன்மைத்தாகக் கொள்ளலாம். ஒன்று லௌகீக பயன் கருதிச் செய்யப்படுவது. மனிதருக்குள்ள இயல்பான சக்திகளைப் பெருக்க யோகம் உதவுகிறதென்பது அனுபவ சித்தாந்தம். மனிதருக்குக் கீழ்த்தரமான சக்திகளுமுண்டு, மேலான சக்திகளுமுண்டு. அவற்றில் எவற்றை விரும்பி யோகம் செய்ய முற்படுகின்றோம் என்பதுதான் கேள்வி. லௌகீக பலன்களைக் கருதியா? சாந்தமும் அமைதியும் அடையவா? மக்களினத்துக்குச் சேவை புரிவதற்காகவா? அல்லது கடவுளை அடைவதற்காகவா? எத்தன்மையிலும் மனத்தை அதன்பால்ஒருமுகப்படுத்தி, அடையமுடியும். கடவுளை அடைவதற்கெனில் அவரின் திருவுள்ளத்திற்கும் கருத்திற்கும் எங்களைச்சம்பூரணமாக அர்ப்பணம் செய்யவேண்டும், மனம் கடவுளின்பால் ஒன்றுபடவேண்டும். இஃது இலேசான காரியமல்ல. இதனைப்பற்றித் தாயுமானசுவாமிகள் பாடுகிறார்:

"கந்துகமதக் கரியை வசமாய் நடத்தலாங்,
கரடிவெம் புலி வாயையுங் கட்டலாம்,
ஒருசிங்க முதுகின் மேற்கொள்ளலாம்,
கட்செவி யெடுத் தாட்டலாம்..
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்,
வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்.
விண்ணவரை ஏவல் கொளலாம்..
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்,
மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்,
சலம்மேல் நடக்கலாம் கனல்மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்:
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற
திறம்அரிது: சத்தாகிஎன்
சித்த மிசைகுடி கொண்ட அறிவான தெய்வமே,
தேசோம யானந்தமே!"

முன் குறிப்பிட்ட 27 வகை யோகங்களில் சித்தி யோகம் எனப்படுமொன்றுண்டு. இது மனித சக்திகளை விருத்தி செய்ய உதவுவது. அட்டமாசித்திகளைப் பெறுதற்கு இன்றைய உலகமக்கள் மிகவும் விரும்புவதுபோல் தெரிகிறது, இவற்றுள் ஒன்று வசித்துவம் எனப்படும், இது யாவரையுந் தன்வசப்படுத்தும் ஆற்றலைக் கொடுப்பது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது. எதைஎதைச் சாருகிறதோ அதனதன் மயமாய் நிற்பது. பிறவி எடுத்திருக்கும் ஆன்மாக்களுக்கு இருவகைச் சார்பு உண்டு. ஒன்று உலகச் சார்பு; மற்றது கடவுட் சார்பு, ஆன்மாக்களின் அறிவும் ஏகதேசமானது; ஒவ்வொன்றையுந் தனித்தனி சுட்டியறிவதன்றி, கடவுளைப் போல் எல்லாவற்றையும் ஒருங்கே தொடுத்து அறிகின்ற வியாபக அறிவில்லாதது. ஆகவே உலகில் வாழும்போது, முற்பிறவிகளில் ஈட்டிய புண்ணியவசத்தினால் உலகப்பற்றை விட்டுச் •சீவன்முத்தர்களாயிருப்பவர்களைத் தவிர, ஏனைய யாவரும் உலகத்தைச் சார்ந்து நின்று, உலகத்தில் பெறக்கூடிய நிலையில்லாத சிற்றின்பங்களிலேயே மிக நாட்டமுள்ளவர்களாய் மாயாகாரியமான உலக போகபோக்கியங்களில் திளைத்து நிற்பர். ஆசைப் பெருக்கைப் பெருக்கித் திரிவர். இதைத் தாயுமானசுவாமிகள் மிக அழகாக வர்ணித்திருக்கின்றார்:

"ஆசைக்கோர் அளவில்லை, அகில மெல்லாங்கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆணை செலவே நினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன் மிகவைத்த பேரும்
நேசித்து இரசவாத வித்தைக் கலைந்திடுவர்;
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாகவே யினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணாவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும், நான் நான் எனக்குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசற் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்;
பார்க்கு மிடமெங்கும் ஒருநீக்கமற நிறைகின்ற
பரிபூ ரணானந்தமே!"

தற்கால மனிதன் தான் வந்த வரவை மறந்து, தனது வாழ்க்கையின் உறுதிப் பொருள் எது என ஆராயாது, மனம் போன போக்கிலே வாழுகிறான் என்பதை நாள்தோறும் உலகில் நிகழும் நிகழ்ச்சிகளிலிருந்து அறியக்கிடக்கின்றது. விரும்பியதை விரும்பியாங்கு பெற யோகசாதனையைப் பயன்படுத்தும் மார்க்கத்தைப் பலர் கற்றுக்கொண்டார்கள். கடவுளுடன் ஐக்கியப்படுதலாகும்

புனிதமான மார்க்கங்களிலொன்றுதான் யோகம். இந்த யோகசாதனையின்போது சாதகன் தன்னுள் அடங்கிக் கிடந்த பல சக்திகளை விருத்தி செய்து வெளிப்படுத்தலாம். கடவுளால் தரப்பட்ட அச்சக்திகளைக் கடவுளின் திருவுள்ளத்தின்படியே உபயோகபடுத்த வேண்டுமன்றி, சுயநலத்துக்காக, தற்பெருமைக்காக, வேடிக்கைக்காக, யோகத்தினாற் பெற்ற சக்திகளை வெளிக்காட்டுவது, பேராபத்தாகுமென அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த அவா பல யோகிகளின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்திருக்கிறது. தமது இச்சைகளைத் திருப்தி செய்வதற்காக, கடவுளை ஒரு மறை பொருளாக உபயோகித்து, சொற்ப அறிவுள்ள பாமரமக்களைத் தம்வசப்படுத்தி, விளையாட்டுக் காட்டும் யோகிகள் பலர் இருக்கிறார்கள். இவர்களுட் சிலர் யோகசாதனைக்கு இன்றியமையாத இயமநியம விதி விலக்குகள் தானும் அவசியமற்றவை எனப் போதிக்கின்றனர். தெய்வ வாழ்க்கையை விரும்புகிறவர்கள் இறைவனுக்கு விரோதமான சக்திகளைப்பரப்பும் வேடதாரிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்காது தப்பிக்கொள்ள விழிப்பாயிருப்பது நலன் தரும். உலகத்துடன் இரண்டறக் கலந்து வாழும் மக்கள், கடவுளைச்சார யோகஞ் செய்வதென்பது போலி. இதயத்திலுள்ள குப்பை கூளங்களை முற்றாக அகற்றினாலன்றி, அங்கு திருவருட் சக்தி இறங்கி வந்து படிவது எங்ஙனம்?

யோக சுவாமிகள் களங்கமற்ற உள்ளம் படைத்தவர் என்பது அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலும் திருவாக்குகளிலுமிருந்து அறியலாம். சிந்தையையடக்கிச் சும்மாவிருக்கும் அவர்களின் திறமையை யான் அவர்களைத் தரிசித்த முதல் நாளே கண்டு அதிசயித்தேன். மணிக்கணக்கில், ஆடாமல் அசையாமல் தன் சூழ்நிலையை மறந்து தன்னையும் முன்னிருக்கும் என்னையும் மறந்து, சித்திரப் பதுமை போல் அவர்கள் இருந்தமை எனக்குச் செயற்கரிய செயல்போலிருந்தது. நெடுநாட்களுக்குப் பின்னர் சுவாமிகளின் மன வைராக்கியத்தையும் ஏகாக்கிர சித்தத்தையும் பலமுறை உணர்ந்து கொண்டமையால், யான் முதல்நாட் கண்ட காட்சியில் நூதனம் ஒன்றுமில்லை என்று அறிந்துகொண்டேன். சிறுபராயத்திலிருந்தே சுவாமி தன் குருமூர்த்தியாகிய செல்லப்பாச்சுவாமிகளை மதற்கடசம்பந்தமாகப் பற்றிக்கொண்டதன் பெறுபேறாகத் துறவு நிலையை விரைவில் அடைந்து கொண்டார். அடிக்கடி தியானத்தமர்வதும் பசிக்குப் பிச்சையெடுத்துண்பதும் கொழும்புத்துறைச் சந்தியொன்றில் ஓர் இலுப்பைமரத்தடியில் இரவில் நித்திரை செய்வதும் துறவைமேற்கொண்ட ஒருவருக்கு நூதனமல்ல.

யான் சுவாமிகளையறியவந்த காலத்தில் அவர் ஒரு சாதாரண மனிதன்போல்

எனக்குத் தோன்றவில்லை. எல்லாத்துறையிலும் அவர்கள் உலகத்துக்குப் புறம்பான ஒருவர் போல் இருந்தார்கள். அவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தார்கள். அவர்களுக்கு நண்பர்களுமில்லை விரோதிகளுமில்லை, மனிதர்களுக்குத் தத்தம் ஆற்றலுக்களவான சுதந்திரமுண்டு. அந்தச் சுதந்திரத்தையும் குழப்பச் சுவாமிகள் விரும்பவில்லை. "தூய்மையானவற்றை நாய்கள் முன் போடாதே, முத்துக்களைப் பன்றிகள் முன் சிந்தாதே" என்றொரு பழமொழியுண்டு. அதற்கிணங்க நடந்து கொண்டார் யோக சுவாமிகள், முற்றத்துறந்த ஒரு முனிவராயிருந்தும், மிக நாகரிகமாகத் தன்னிடம் வருபவருடன் பழகிக்கொள்ளுவார். அவரை ஏமாற்ற ஒருவராலும் முடியாதென்பதை நன்கு அறியத் தக்கதாகவிருந்தது. சுவாமி தன் உற்ற சினேகிதர் என்று நினைத்து எல்லை கடந்து நடப்பவர்களை இரக்கமின்றித் தண்டிப்பவர். இதிலும் நூதன மொன்றுமில்லை. கடவுளும் அறக்கருணையும் மறக்கருணையும் தாராளமாகக் கையாளுபவர்தானே.

உலகப் பற்றுக்களை முற்றத்துறந்த சுவாமிகளின் மகிமையை எவ்விதம் சொல்லால் சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களின் அடியார்கள் ஏராளமான பொருள்களை அன்புடன் கொண்டுவந்து அர்ப்பணஞ் செய்வார்கள், அப்பொருள்கள் மத்தியில் மறைமுகமாகக் காசு (பெரிய நோட்டுக்கள்) வைக்கப்பட்டு இருக்கும். அதைத் தேடி எடுத்து, கொண்டுவந்தவரிடமே ஒன்றும் பேசாது திருப்பிக் கொடுத்துவிட்டு, எஞ்சிய பொருட்களைச் சுவாமிகளின் சந்நிதானத்திலுள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, தட்டத்தையும் சொந்தக்காரனிடம் ஒப்படைத்து விட்டுத் திருப்தியாகச் சுவாமிகள் இருப்பதைப் பலமுறை நான் கண்டு துறவின் பெருமையை அறிந்துகொண்டேன். யாழ்ப்பாணப் பெரியகடைச் சந்தையில் பிச்சையெடுத்து, தூர ஒரு வயற்கரையில் பக்குவமாகச் சமைத்து, கால் முகங் கழுவி வந்து உண்ண உட்காருமுன், உணவுப் பாத்திரத்தை "உருசியாகத் தின்னப் பார்க்கிறாயோ?" என்று காலால் இடறி உடைக்கும் சுபாவமுள்ள செல்லப்பாச் சுவாமிகளின் சீடனாகிய யோக சுவாமிகள் இப்படிச் செய்வதில் நூதனமொன்றுமில்லைத்தானே.

ஆடம்பரமான உடை, நடை, பாவனைகளுடன், பரிவாரங்கள் புடைசூழ்ந்து வர எழுந்தருளி வந்து, படடின் மேல் பாதங்களை வைத்து, அடியார் கூட்டம் பாதபூசை செய்யப் பார்த்து, உல்லாசமாயிருந்து இன்புறும் யோகிகளையும் துறவிகளையும் நான் அறிந்திருக்கின்றேன். இதிலும் நூதனம் ஒன்றுமில்லை. "அது அப்படித்தான்" என்று யோகர் சுவாமிகளே சொல்லித் தந்திருக்கிறார்களே!

உலகம் பலவிதம், துறவும் பலவிதம். ஆண்டவன் சிருஷ்டியில், எதுதான் நூதனம்? மால் பண்ணுபவர்களுக்கும் அங்கு இடமுண்டு.

இந்த நூலில் குறிப்பிடப்பட்ட செயற்கரிய செயல்கள் யாவும் திருவருளின் வழி நின்ற யோக சுவாமிகளின் உள்ளத்து நின்ற கருணையின் பிரதிபிம்பங்களே. தன்னை வந்தடைந்தவர் சிலரிடம் அவர்களின் துன்பங்களைக் கேட்டு இரக்கங் கொண்டு சுவாமிகள் ஆறுதல் கூறும்போது, உள் நின்றுணர்த்தும் இறைவன் தூண்ட, சில நேரங்களில் அவர் திருவாக்கிலிருந்து சில உண்மைகள் வெளிவந்ததுண்டு. அவை சோதிடமுமல்ல, சித்தியுமல்ல, சிவதொண்டர்களின் பரிசுத்த உள்ளங்களில் என்றும் விட்டு நீங்காது அவர்களை அதிட்டித்து நின்று மன்னுயிர்க்கெல்லாம் வழி காட்டவும் பணி புரியவும் திருவுளங்கொள்ளும் அருட்சத்தியின் தொழில்களைச் சித்திகள் எனக் கருதுவது மடைமையாகும்.

தெய்வீக வாழ்விற்குச் சித்திகள் இடையூறு விளைவிப்பனவென்று ஞானநூல்கள் வற்புறுத்துகின்றன. சீவன்முத்தர்கள் தவசிரேஷ்டர்களாகையினால் திரிகால உணர்ச்சியுடையவர்களாயிருத்தலில் அவர்களிடம் நூதனமொன்றுமில்லை. செயற்கரிய செய்யவல்ல பெரியர் தங்கள் ஆற்றலைத் தாறுமாறாக மனம் போனவாறெல்லாம் பாவிக்கமாட்டார்கள். தகுதிவாய்ந்த சற்பாத்திரனுக்கே, திருவருளின் நியதிப்படி, பெருமக்களின் தாட்சணியம் கைகூடும். அவர்களின் செயல்களை அட்டமாசித்திகளுள் வைத்து மதிப்பிடுதல் தவறும் பாதகமுமாகும்.

* * *

ஒருமுறை யோக சுவாமிகள், தன் ஆச்சிரமத்தில் கூடியிருந்த அன்பர்களுக்கு வேடிக்கையாக ஒரு கதை சொன்னார். யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் தான் நின்றுகொண்டிருந்த ஒரு நாள், மூன்று நாலு மனிதர் தன்னைக் கண்டு விலத்திக்கொண்டு போகும்போது, தன்னைப் பார்த்துத் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு போவது போல் இருந்ததாம். என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கவனித்தபோது, ஒருவர் மிக இரகசியமாக மற்றவர்களுக்குச் சொன்னாராம்,

"இது தான் யோகர். இவரை நான் வவுனியாவில் பஸ்வண்டியில் ஏறும்போது கண்டனான். ஒரு கடைக்கு முன் உல்லாசமாய் நின்றவர். நான் வந்த பஸ்ஸில் அவர் ஏறிவரவில்லை. பஸ் புறப்படும்போது அங்கே தான் நின்றவர். நான் இப்போதுதான் பஸ்ஸால் இறங்கிவாறன். இவர் இங்கே நிற்கிறார். ஒரு கணப்பொழுதில் வவுனியாவிலிருந்து

மறைந்து இங்கு வந்து சேர்ந்ததிட்டார். இதனாற்றான் எல்லோரும் இவருக்குப் பிறகே திரிகிறார்கள். இவர் ஒரு சித்தர்."

"இப்படியாகக் கதைத்தது என் காதிற்பட்டது". இந்தக் கதையைச் சொல்லிவிட்டுச் சுவாமி பலத்துச் சிரித்தார்.

"பஸ் வண்டியிருக்கு; புகைவண்டியிருக்கு; நான் ஏன் ஆகாயத்தில் ஒருவருங் காணாமற் பறக்கவேணும்."

"இவ்வளவு மடையரும் யாழ்ப்பாணத்திலிருக்கிறார்கள் தானே" என்று பரிதாபப்பட்டார். இதிலிருந்து சித்திகளைப் பற்றி யோக சுவாமிகளின் கருத்து என்னவென்பது தெளிவாகின்றதல்லவா?

## 17. குரு பக்தி

மேலே பதினாறாம் பகுதியில் குறிப்பிட்ட சம்பவம் நடந்து, சுவாமிகளுக்குத் தட்டுப்பாடென்றெண்ணிச் சாப்பாடு வாங்கிவந்தவர்கள் துரத்தப்பட்ட பின், சுவாமி ஆவேசத்துடன் தோட்டத்திலிருந்து வெளியேறி வயற்கரையோரமாக நடக்கத் தொடங்கினார். அன்றிரவு அவருடன் தென்னந் தோட்டத்திலேயே தங்க எண்ணியிருந்த நாங்களும் சுவாமி பின்னால் சென்றோம். ஏறக்குறைய இருநூறு யாருக்கு அப்பாலே, வயற் கரையிலிருந்த ஒரு வைரவ கோயிலின் முன்றிலில், மணலின் மேல் உட்கார்ந்து, சில நிமிடங்கள் தியானத்தமர்ந்தார் சுவாமிகள். நாங்களும் மிக அமைதியாகக் கோயில் வாயிலில், சுவாமிக்குச் சற்றுத் தூரத்தில், உட்கார்ந்திருந்தோம். சடுதியாகச் சுவாமி உல்லாசமாகப் பாடத் தொடங்கினார். சிங்கம் கர்ச்சித்தது போற் சத்தம். வயல் வெளியில் அவரின் குரல் எதிரொலித்தது. சிறிது நேரம் தேவாரம், திருப்புகழ் முதலியனவும், அதன் பின்னர் தாமாகவே இயற்றிய பாடல்களுமாக, ஒன்றன்பின்னொன்றாக, இடையீடின்றி வந்து கொண்டேயிருந்தன. வரவர உற்சாகமும் குரலின் சத்தமும் கூடிக்கொண்டே போயின. தன் குருநாதன் செல்லப்பா சுவாமிகளைப்பற்றிய பாட்டுக்கள் வரத்தொடங்கியவுடன், சுவாமியின் குரல் மாறியது; நா தடதடத்தது; கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. தன்னையும் தன் சூழலையும் முற்றாக மறந்து, குருநாதன் தனக்குச் செய்த உபகாரத்தை நினைந்து நினைந்து, வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினார். செல்லப்பா சுவாமியிடத்து அவருக்கு இருந்த பக்தி, அன்று கண்ணீராகப் பெருகியது. குருநாதனைப்பற்றி அவர் திருவாய் மொழிந்தனவற்றுள் அநேக கருத்துக்களை, யோக சுவாமிகள் மறைவின் பின் வெளிவந்த, "நற்சிந்தனை" என்னும் திருப்பாடல்களில் காணலாம். என்

மனசை என்றும் விட்டு நீங்காது இருக்கும் ஒரு திருவாக்கு:

"முச்சந்திக் குப்பையிலே
எங்கள் குருநாதன்
முடக்கிக் கிடந்திடென்றான்
எங்கள் குருநாதன்."

புலன்களை வெல்வதற்கு எத்தனை விதமான உபாயங்களைத் துறவை நாடுபவர் கையாள வேண்டுமென்பது இவ்வாக்கிலிருந்து வெளிப்படுகிறது.

அந்தச் சிவராத்திரி விழாவில் கலந்து கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பின் பயனாகப் பெற்ற என் அநுபவத்தை உயிருள்ளவரையும் மறக்க முடியாது. குருவுக்கும் சீடனுக்குமிடையேயுள்ள தொடர்பின் தன்மையை நன்கு விளக்கியது அந்த அனுபவம். ஒன்றரைமணி நேரம் வரை பாடிக்களைத்த சுவாமிகள், பின் அரைமணி நேரம் வரை தியானத்திலே இருந்து விட்டார். ஒன்பது மணியளவில், தோட்டத்துக்குத் திரும்பி, அங்கிருந்து எல்லோருஞ் சேர்ந்து "சிவபுராணம்" ஓதியபின், இருந்த இருந்த இடங்களிலேயே சரிந்து நித்திரையாயினோம்.

"குருவில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லைக் கீழுமில்லை" யென்பது ஒரு பழமொழி. மேலுலகத்திலும் சரி, கீழுலகத்திலும் சரி, எந்த உயிரும் எத்துறையிலும், மேல் நிலையடைதல் ஒரு குரு (வழிகாட்டி) இல்லாது கைகூடாதென்பது ஆன்றோர் துணிவு. இதற்குச் சான்றாகத் திருக்கைலாயபதியே தக்ஷிணாமூர்த்தியாகக் கல்லாலின் கீழமர்ந்திருந்து, ஆதியிலே நால்வர்க்கு அறம் உரைத்தாரெனச் சமய சாஸ்திரங்கள் பகர்கின்றன. அன்று தொட்டு இன்றுவரை, குருசீட பரம்பரை இடையீடின்றி நிலவுலகத்தில் இருந்தே வருகின்றது. குறிக்கோளிலாது ஊழ்வினையனுபவத்தோடு நின்றுவிடும் ஆன்மாக்கள் தவிர, தெய்வீக ஞான மார்க்கத்தில் நாட்டமுடைய ஆன்மாக்கள் ஒரு குருவை நாடித் தவம் முயலல் இயல்பு. இலௌகீக விடயங்களில் முன்னேற்றம் காண்பதற்கே, ஒரு குரு இன்றியமை யாதெனின், பக்தி, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களில் பயில்வதற்கும் முத்திப் பேற்றை அடைவதற்கும், தகைமை வாய்ந்த ஒரு ஆசான் எத்துணை இன்றியமையாத தென்பது சொல்லவும் வேண்டுமா? பரம கருணாநிதியாகிய இறைவன், தானே மானிட வடிவத்தில் தோன்றியோ, இன்றேல், முத்திக்கு உரித்தாகியும், பிராரத்துவ வினை அனுபவித்தொழியும் வரை, உலகத்திலேயே தாமரையிலையில் தண்ணீர் போலப் பற்றற்றுச் சஞ்சாரஞ் செய்யும் தவ சிரேஷ்டர்கள், ஞானிகள், சீவன் முத்தர்கள், இவர்களிலொருவரை அதிட்டித்து நின்றோ, குருவாக பக்குவான்மாக்களுக்கு முறைப்படி தீகைஷ,

உபதேசம் முதலியவற்றால் அவர்களின் பந்த பாசங்களை அறவே நீக்கி, மெய்யுணர்வையளித்து, இனிப் பிறவாமையாகிய பேரின்ப வாழ்விற்கு உரித்துடையவர்களாக்கித், தன் திருவடிக்கீழ் வைப்பன் என்பது சகல சமய சாஸ்திரங்களினதும் முடிந்த முடிவாகும். ஆயினும் ஆண்டவன் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் வண்ணம், இப்படித்தான் என்று வரையறுத்துச் சொல்லிவிட முடியாது, எந்த வண்ணம் அவன் ஆட்கொள்ளினும், அவனுக்கு ஆளாகும் பக்குவ நிலை ஒரு குருவின் சகாயமின்றி ஆன்மாக்களுக்கு வாராது என்பது திண்ணம்.

குருவை நாடி அலைந்தவர்கள் எண்ணற்றவர்கள், மெய்யான ஒரு ஞான குருவைப் பெற்றவர்கள் சிலரினும் சிலரே. பல பிறவிகளில் முன் செய் தவத்தால், நல்லூழ்கூட்டக் கூடுவதே குரு சீடஐக்கியம். இஃது இலேசாகக்கிட்டுவதல்ல. இவர் என் குரு, அவர் என் குரு, என்று சொல்லிக்கொள்ளலாம். அது மயக்க அறிவில் உண்டாகும் வீண் பிரமை.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்த வொண்ணாதே"

என்பது திருமூலர் வாக்கு.

யோக சுவாமி செல்லப்பாச் சுவாமிகளைத் தன் குருவாகப் பெறுவதற்குப்பட்ட துன்பங்களோ அளப்பில. சிறு பராயத்தில் தொடங்கியே, உலகை வெறுத்து, உற்றார் உறவினரைக் கைவிட்டு, உடம்பை ஒறுத்து, சகல சுக போகங்களையும் துச்சமாகக் கருதி உதறித் தள்ளிவிட்டு, இருக்க இடமின்றி, படுக்கப் பாயின்றி, உண்ண உணவின்றி, இராப் பகலாக, தளராது, சோராது, வைராக்கியத்தைக் கணப்பொழுதும் கைவிடாது, தான் குருவாகத் தனது மனத்தில் வரித்துக்கொண்ட பெருமானாரின் அருள்நோக்கைப் பெறும்வரை, அவர் பின்னே, அவரின் வெகுளிக்கும், வெருட்டலுக்கும், அச்சம் கொள்ளாது, பல ஆண்டுகள் தொடர்ந்து திரிந்த வரலாறுகள் சொல்லுக்கடங்காதன. இவற்றிற் சிலவற்றைச் சுவாமிகளே இடையிடையே தனது சம்பாஷணைகளிற் சொல்லுவதுண்டு. சுவாமிகளின் பழைய அன்பர்களும் அவர் காலத்து வாழ்ந்தவர்களும், பலவரலாறுகளை விபரிக்கக் கேட்டுமிருக்கிறேன். அவை கேட்போர் நெஞ்சம் ஸ்தம்பிக்கச் செய்யும் வரலாறுகள். இத்துணை தவம் கிடந்து யோக சுவாமி செல்லப்பாச் சுவாமியைத் தன் குருநாதனாகப் பெற்றார்.

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
நான் எனதெனும் மாயக் கடித்த வாயிலே
நின்று முன்வினை மிகக் கழறியே திரிகின்ற"

எம்போன்ற பொய்யர்களுக்கு ஒரு குரு வாய்ப்பதற்கு இன்னும் எத்தனையெத்தனை பிறவியோ! நினைக்க உள்ளம் ஏங்கித் துடிக்கின்றது:

தன் குருநாதனைப் பற்றி யோக சுவாமி நற்சிந்தனைப் பாக்களில் குறிப்பிட்டுப் பாடியிருப்பவை படித்துப் படித்துச் சுவைக்க வேண்டியவை:

(i) "முச்சந்திக் குப்பையிலே, எங்கள் குருநாதன்,
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள் குருநாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள் குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள் குருநாதன்..."

(ii) "ஐயமெல்லாம் நீக்கியென்னை அன்புசெய்ய வைத்தவனை
வையகத்தில் மறப்பேனோ ~ குதம்பாய்
வையகத்தில் மறப்பேனோ?
ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச் சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ ~ குதம்பாய்
குருபரனை மறப்பேனோ?

(iii) ஒரு பொல்லாப்புமில்லை யென்றுரைத்தவன்
திருவடிதனைச் சிந்தை மறக்குமோ?
ஒருவடிவன்றி யுள்ள முவக்குமோ?
கருவழியினிற் சென்று கலங்குமோ?

(iv) "சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர் பவமினி யெனக் கில்லையே"

(v) பாதிச் சாமத்தின் பின் பள்ளி கொள்பவர்
வீதியிற் செல்லும் வீணர்கள் தங்களைப்
பேதிக் கும்படி வேண்டியே பேசுவார்
சோதித்தே யெனைச் சும்மா விருத்தினார்"

(vi) "கோலமொன்றும் விரும்பிலன், கும்பிடச்
சாலவன்புடன் தான் வரும் பத்தரைக்
காலனென்னக் கறுத்துடன் சீறுவான்
சாலஞ்செய் தெனைத் தன் வயமாக்கினான்'

(vii) "பித்தனென்று பலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறராலறியொணாத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபயமபயம்!
ஆருக்குமினி மேலெனக் கென்ன பயம்?"

(viii) "போற்றியொரு பொல்லாப்புமில்லை யென்ற
பூங்கழல்களவை போற்றி, புவியுள்ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிகளென்றும் போற்றி,
எளியேனையாண்டு கொண்ட கருணைபோற்றி,
சாற்றரிய மலர்ச்சோலை தயங்குகின்ற
தண் புனல் சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந் தென்வினை தீர்த்த விமலாவுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியுமுண்டோ?..."

(ix) "ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற்
பேசாதனவெல்லாம் பேசினான் ~ கூசாமல்
நின்றேன், நீ யாரடா? வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்."

(x) "அருளொளிக்குள்ளே புகுந்து சென்றேன் யான் அங்கே
இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டேன் ~ பொருளறியேன்
ஒரு பொல்லாப்பில்லையென வோதினான் கேட்டு நின்றேன்
மர்மந் தேராது மலைத்து"

(xi) "மலைத்து நின்ற வென்னை மனமகிழ நோக்கி,
அலைத்து நின்ற மாயை யகலத் ~ தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம்மறந்து நின்றேன் வியந்து...."

## 18. யாத்திரை முடித்த இடம்

ஒரு முறை இரத்தினபுரியிலிருந்த ஒரு நண்பர், இலங்கையிலுள்ள விசேஷ க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யவெண்ணி, எங்களிற் சிலரையும் வரவழைத்தார். ஒரு பெரிய காரில், யாத்திரைக்கு வேண்டிய பொருட்களுடன் எல்லோருமாக ஆறுபேர் புறப்பட்டோம். வழியில் வரக்கூடிய விக்கினங்களிலிருந்து காத்தருளுமாறு வெள்ளவத்தையில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை வழிபட்டுக்கொண்டு, தெற்கு நோக்கிப் பயணமாகிக் காலிச் சிவன் கோயிலைத் தரிசித்துக் கொண்டு கதிர்காமத்தைச் சென்றடைந்தோம். அங்கு இரு நாட்கள் தங்கி, திரைக்குப் பின் மறை பொருளாயிருந்து கொண்டு இன மத பேதமின்றி தன்னை வழிபட வரும் எல்லோர்க்கும் அவரவர் வேண்டிய வரங்களை ஈந்தருளும் முருகப்பெருமானைப் பணிந்து, வடக்கு நோக்கித் திரும்பிச் சிலாபத்தில் எழுந்தருளியிருக்கும் வடிவாம்பிகா சமேத முனீஸ்வரரைத் தரிசித்து, "பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்" மாதோட்ட நன்நகரிலிருக்கும் திருக்கேதீச்சரத்தானையும் கௌரி அம்பாளையும் வழிபட, மன்னாருக்குச் சென்று சேர்ந்தோம். அங்கு ஒருநாட் தங்கியபின், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் புகழ்ந்து பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை அடைந்து, கடல் கொண்ட க்ஷேத்திரத்தை மனத்தால் நினைந்து வணங்கிவிட்டு, யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றோம். அங்கு நல்லைப் பதியையடைந்து, யோக சுவாமிகளால் பலவிதமாகப் புகழ்ந்து பாடப்பெற்ற நல்லூர்க் கந்தனை மனமார வழிபட்டோம் :

பல்லவி :

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்களெல்லாம் போமே.

அநுபல்லவி :

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு.

சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கமெல்லாம் இல்லாமற் போமே.

சத்தியம், பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்

பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே.

இத்துணைப் பொற்புடைய நல்லூர்ப் பதியை வணங்கி விட்டுப் பின்னர், வல்லிபுரக் கோயில், கந்தவனக்கடவை, செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் ஆகிய கேஷத்திரங்களை வழிபட்டுக்கொண்டு, கீரிமலையையடைந்து அங்குள்ள புனித தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானையும் வணங்கியபின், ஈற்றில் கொழும்புத்துறையை நாடிச் சென்றோம். திருக்கோயில் வழிபட்ட பலனைப் பெறுவது சிவனடியார் சண்டேஸ்வரரிடம் தானே, ஆகவே, யோக சுவாமிகளைத் தரிசித்தாலன்றி எங்கள் நீண்ட நாள் யாத்திரை பூரணமடையாதென மனத்தில் கொண்ட கொள்கையினால் சுவாமிகளின் ஆச்சிரமத்துக்குப் போனோம். கார் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது; கூப்பிடு தொலைவில் சுவாமிகளின் குரல் கேட்டது;

அங்கும் இங்கும் எங்குமானானை
அரிய இரத்தின புரியிலுள்ளானை
எங்கள் குல குருவானானை
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.

கையிலே தாளந்தட்டிக்கொண்டு, உரத்துப் பாடிக்கொண்டிருந்தார். எப்போ நாங்கள் வந்து சேருவோமென வழி பார்த்திருந்தார் போல், சுவாமி ஆனந்தமே சொரூபமாக இருந்த காட்சியை விபரிக்க முடியாது. தலையார மனமார எங்கள் களையெல்லாந்தீர, ஒவ்வொருவராக அவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினோம். வணங்கி எழும் போது பந்த பாசமெல்லாம் அற்ற ஒரு சாந்த நிலை எம்மைப் பற்றிக் கொண்டது போலிருந்தது.

யாத்திரை எப்படியிருந்ததென்று சுவாமி வினவினார்; ஏறக்குறைய 1000 மைல் தூரம் எட்டு நாட்களாகத் தொடர்ந்து நாங்கள் செய்த யாத்திரையில் ஒரு விபத்தோ வசதிக் குறைவோ, ஏற்பட்டதில்லை. சென்றவிடமெல்லாம் சிறப்பாகவேயிருந்தது, இவ்வாறு பதிலளித்ததும்.

"நானும் உங்களுடன் கூட வந்தேன்; நீங்கள் என்னைக் காணவில்லையா?"

என்றார் சுவாமி புன்சிரிப்புடன்.

"சுவாமிகளின் பாதுகாப்பின்றி இப்படியான ஒரு யாத்திரைக்கு நாங்கள்

துணிந்திருக்க மாட்டோம், சுவாமி"

என்றதும் பலத்துச் சிரித்துவிட்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தோடம்பழம், ஒவ்வொரு வாழைப்பழம், ஒவ்வொரு அப்பிள் பழம் தந்து,

"இவை தேனூந்து முக்கனிகள்; சித்தந்தெளிய மருந்து போய் வாருங்கள;
ஒரு பொல்லாப்புமில்லை"

என்று ஆசீர்வதித்து விடை தந்தனுப்பினார்.

பல க்ஷேத்திரங்களைத் தரிசித்திருந்தோம், ஆயினும் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பெற்ற இன்பமும் மனச் சாந்தியும், வேறோரிடத்திலும் நாங்கள் காணவில்லை, வாழ்க்கையின் பயனையடைந்தவர்கள் போல், மனத்திருப்தியுடன் எங்கள் இல்லங்களைச் சென்றடைந்தோம்.

## 19. தவமும் தவமுடையார்க்கு

யோக சுவாமி நிலவுலகத்தில் சஞ்சரித்த காலத்தில், இலங்கையிலும் இந்தியாவிலும் பலமுறை திக்குவிஜயம் செய்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைத் தரிசித்து இருக்கலாம். அவருடன் பழகி நெடுங்காலமாகத் தொடர்பு கொண்டுமிருக்கலாம். இலங்கையில் பல பாகங்களிலும் அவருக்கு அன்பு பூண்ட தொண்டர்கள் பலர் இருந்தார்கள். அவர்களில் சிலருடைய இல்லங்களுக்குச் சுவாமி எழுந்தருளிப் பல நாட்கள் தங்குவதுமுண்டு. இருந்தும், அவரைத் தரிசித்த எல்லோருடைய உள்ளங்களிலும் அவர் நிரந்தரமாயிடம் பெற்றுவிட்டார் என்று சொல்ல முடியாது. தவமும் தவமுடையார்க்கே கிட்டும். மாயா காரியமான இவ்வுலகில் வாழும்போது, ஒரு ஞானியின் அல்லது துறவியின் சகவாசத்தைப் பெற்றுக் கொள்ளுவது இலேசானதன்று. இதற்கு முன்னைத் தவம் வேண்டும்.

ஒரு சிலரின் உள்ளத்தில் யோக சுவாமி நிலையான இடத்தை வகித்திருந்தார் என்பதற்கு ஐயமில்லை. இன்றும் அந்த உள்ளங்களிலிருந்து அவர் மறைந்துவிடவில்லை. சுவாமி இவ்வுலக வாழ்வை நீத்த பின்னும், தன் மெய்யடியார்களை மறந்திருக்கமாட்டார் என்றும் துணிந்து கூறலாம். இதற்குச் சான்று உமாபதிசிவாச்சாரியாரே தமது திருஅருட்பயனென்னும் சைவ சித்தாந்த சாஸ்திர நூலில் பகருகிறார்:

"கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை

வெள்ளத் தலைவர் மிக,"

ஆணவமலத்தால் உண்டாகும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள் படும் துயரத்தை எண்ணிச் சீவன்முத்தர்கள் மிகுந்த துன்பத்தை அடைவார்கள். ஆன்மாக்கள் மாட்டு அத்துணை இரக்கம் அவர்களுக்கு உண்டு. இறைவன் ஆன்மாக்கள் மாட்டு இயல்பாகவே எல்லையற்ற கருணையுடையவன். இறைவனின் அருள் தொழில்படுவது ஞானிகள், துறவிகள் ஆகிய சீவன் முத்தர்களை அதிட்டித்து என்று சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. நம் போன்ற பெத்தான்மாக்களின் ஈடேற்றத்துக்குச் சீவன்முத்தர் இன்றியமையாதவர்கள்,

மனிதப்பிறவியோ நித்திய சஞ்சலமுடையது:

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்தெண்ணுவன
கண் புதைந்த மாந்தர் குடி வாழ்க்கை

மண்ணின் கலம் போலச் சாந்தனையுஞ் சஞ்சலமே தான், எண்ணற்ற முற்பிறவிகளில் ஈட்டிய பாவ புண்ணியங்களின் பயன் நுகர்வுக்கு வரும்போது, தீராக் கவலைகளும் துன்பங்களும் உடன் சேர்ந்துவரும். வாழ்வெனும் மையலில் அகப்பட்டவர்களைப் பஞ்சப்புலன்கள் தத்தம் வழியே ஊழின் பிரகாரம் ஈர்த்துச்செல்லும். அவற்றைக் கட்டுப்படுத்துவது எளிதல்ல. ஒரு ஆசானின்றி அது முடியாதகாரியம். ஆசானைப் பெறுவதற்கும்முன்னைத்தவம் வேண்டும். ஆசானைப் பெற்ற பின்பும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவ்வாசான் காட்டிய வழி நின்று வாழவும் நல்லூழ் வேண்டும்:

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என்றார் பொய்யாமொழிப் புலவர். நல்லூழ் இல்லாவிடத்துக் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய்விடும்.

ஏறக்குறைய நாற்பதாண்டு காலமாகச் சுவாமி ஒன்றுக்கும் பற்றாத என்னையும் பொருட்படுத்தித் தன்னுடன் அணைத்து நல்வழிகாட்டிய அதனால் நல்லூழ் ஏதோ சிறிதளவாயினும் எனக்கு இருந்திருக்க வேண்டுமென எண்ணுவதற்கு இடமுண்டு, என் மனமோ வாக்கோ காயமோ வழிதவற எத்தனிக்கும் போதெல்லாம், மனச்சாட்சிபோல உள்ளே மறைந்து நின்று, வழி மறித்து, நேரான பாதையிதுவென இடித்துரைக்கும் நல்லாசான் போல், இயங்குவது யோக சுவாமிகளின் ஞாபகம். "மற்றொன்று சூழினும் தான் முந்துறும்"

என்ற பிரகாரம், மனச்சாட்சியையும் தட்டிக்கழித்துவிட்டுத், தான் நினைத்தவாறே மனம் கால்விட்டோட எத்தனிப்பதுமில்லாமலில்லை, ஆயினும் மனமானது தீயவற்றை நாடும் போது சுவாமிகளின் ஞாபகமும் உடனே உதயமாகும். அந்த ஞாபகம் மனம் தூண்டும் செயலுக்கு ஒரு "முட்டுக்கட்டை" போலத் தடையாயிருக்கும். இஃது இணையற்ற ஒரு நற்பேறு.

தெரிந்துகொண்டோ தெரியாமலோ, எத்தனையோ பாவங்களை நான் செய்திருக்கலாம். நடந்தேறியவற்றை நினைக்கும் போது, செய்தன பல பாவமானவை என்பது இப்போ தெற்றெனத் தெளிவாகிறது. இத்தனையும் பொருட்படுத்தாது, சுவாமி ஆசைகாட்டிக் கருணையுடன் அணைத்து, என்னை வழிப்படுத்தியமைக்கு நான் என்ன கைமாறுதான் செய்ய முடியும். முன்னைய குறைகளையும் பிழைகளையும பொறுத்ததுமன்றிப் புறம்புறம் திரிந்து மேல் எழக்கூடிய பிழையெல்லாம் தவிரப் பணித்தாரே! "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே"!

* * *

யோக சுவாமி என் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டதன் பயனாக நான் பெற்றபேற்றுக்குச் சான்றுகள் பலவுண்டு. இரண்டொன்றை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

பன்னிரண்டு வருடகாலமாக, வாழ்க்கைத் துணைவியாக விருந்த என் மனைவி, நோய்வாய்ப்பட்டு வீடும் வைத்தியசாலையுமாக மாறி மாறித் துன்புற்றிருந்த காலத்தில், என்னிலை எப்படியிருந்திருக்கும் என்பது நான் இங்கு விபரியாமலே புலப்படும். அப்போ எனக்கு ஆறுதலளித்துச் சஞ்சலம் தீர்த்து, நான் வழி தவறாவண்ணம் காத்து எனை இரட்சித்தமை, சுவாமிகளின் கருணைக்கெடுத்துக்காட்டாகும். வைராக்கிய சித்தத்துடன் எதுவரினும் ஏற்கத் தயாராயிருக்கும் மனோதிடத்தை என்மாட்டுத் தோற்றுவித்தவர் சுவாமிகளே. அவர்களின் ஆதரவு அப்போ எனக்குக் கிடைத்திராவிட்டால், என் வாழ்க்கை சிதைந்து சீர்கெட்டு இழிவடைந்திருக்கும். நான் வழுக்கி விழுந்து கெட்டுப் போகாவண்ணம் கைகொடுத்துத் தாங்கி என்னைக் காப்பாற்றிய பெருமை சுவாமிகளுக்கேயுரியது என்பதில் ஐயமில்லை. நான் அதை நன்கு உணர்ந்திருக்கிறேன்.

* * *

இன்னுமொன்று; அரசாங்க சேவையில் நானிருந்த காலத்தில், பொறுப்பு வாய்ந்த பல பதவிகளை வகிக்க நேர்ந்தது, கிஞ்சித்தேனும் தேடாத உயர் பதவிகள் என்னை நாடி வந்தன. இவற்றுள் சில, ஏராளமான செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களுடையனவாயிருந்தன. நெறிமுறை வாழ்க்கையில் அக்கறை இல்லாதவர்களுக்குப் பெரும் பொருள் சம்பாதிக்க அரசாங்க சேவையில் இக்காலத்துப்போல் அக்காலத்திலும், வெகு வாய்ப்புக்கள் இருந்தன. பலர் அவைகளைப் பயன் படுத்தினார்கள் என்பதை நான் அறிவேன். நான் ஒரு நூதனமான மனிதனல்ல; பற்றற்ற துறவியல்ல; மற்றைய மனிதர்கள் போல நானும் ஏராளமான செல்வத்தைத் திரட்டியிருக்கலாம். இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்த காலம், ஓடும் நீரில் "நீ அள்ளு நான் அள்ளு" என்று சகலரும் அள்ளிய காலம். பொருள் திரட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நான் பயன் படுத்தாமையைக் குறித்துப் பலர் "நீயொரு மடையன்" என்று என்னைப் பரிகாசம் செய்தமை இன்றும் என் ஞாபகத்திலிருக்கிறது.

நான் நெறிதவறிப் பொருள் சம்பாதிக்கக் கூடாதெனத் திருவருள் ஒரு தடையுத்தரவு விதித்திருந்தது. அந்தத் தடையுத்தரவு, யோக சுவாமிகளின் சகவாசமாகச் செயல் பட்டதென்பதை இங்கு நான் துணிந்து திட்டவட்டமாகக் கூற ஆசைப்படுகிறேன். அவரின் சகவாசம் எனக்கொரு நங்கூரம் போன்றிருந்தது. திருவருள் செயற்படுவது இவ்வண்ணம் தான் என்று நான் அறிவேன். சுவாமிகள், என்னுடன் வைத்துக் கொண்ட தொடர்பு மூலம் என் வாழ்க்கை முறையை அல்லும் பகலும் கண்காணித்துக்கொண்டு, என் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் சாட்சியாகவிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை என் மனத்தில் அழிக்க முடியாது பதிந்திருந்தது, அதனாலே பண்பாடற்ற, நீதி நெறி தவறிய, தீய வழியில் இறங்க என் நெஞ்சு தயங்கியது. மனித இயல்பு தூண்டும் எப்போதாயினும், எம்மனம் நெறியில்லா நெறியிற் செல்ல எத்தனித்தால், அந்தக் கணமே யோக சுவாமிகளின் ஞாபகம் முன்னிற்கும். மனமும் தன் சேட்டையைக் கைவிட்டு விடும். இதிலிருந்து நான் படித்துக்கொண்ட ஒரு பெரிய பாடம் உண்டு. நன்னெறியைக் கடைப்பிடித்து வாழ உண்மையாகவே தாகங்கொண்ட மனிதனுக்கு, ஒரு ஆசான் எவ்வளவு இன்றியமையாததென்பதை எனது வாழ்க்கை அனுபவம் ஐயந்திரிபறக் காண்பித்து விட்டது.

"குருவில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என்பதொரு முதுமொழி. இது முற்றுமுண்மை.

## 20. என் பிரார்த்தனை

செல்லப்பா சுவாமிகள் உலகத்தைத் துறந்தது முதல், வாழ்வெனும் மையலில் சிக்குண்ணாதிருப்பதற்குக் கையாண்ட உபாயம் உலகத்துடன் யாதொரு தொடர்பும் வைத்துக் கொள்ளாமையெனலாம். ஆனால் அவரின் சீடனாகிய யோக சுவாமிகளோ, தன் துறவு நிலையை ஸ்திரப்படுத்தும் வரைதான், உலகத்தைத் தூரத்தில் வைத்துக்கொண்டார். துறவு கைகூடியதும், உலகத்துடன் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்து கொண்டு, எல்லோர் மாட்டும் கருணையுள்ளத்துடன் கலந்து வாழ்ந்தாராயினும், ஒன்றிலும் சிக்குண்ணாது, தாமரையிலையில் தண்ணீர் போலக் காலங் கழித்தவர். அவர் தனக்கென ஒரு பாரம்பரியத்தை நிலைநாட்ட எத்தனிக்கவில்லை என்பதை அவர் கடைப்பிடித்த நெறியிலிருந்து புரிந்துகொள்ளலாம். “ஒரு பொல்லாப்புமில்லை”, “எப்பவோ முடிந்த காரியம்” இவைபோன்ற பல திருவாக்குகள் அவரின் சித்தாந்தத்தை வெளிப்படுத்தின. ஆத்மீக தாகத்தோடு தன்னை வந்து அடைந்தவர்களுக்கு, அவரவர் பக்குவத்திற்கேற்ப, வழிகளைக் காட்டினார். உலக நலன்களை நாடி வந்தவர்களுக்கும் இரக்கம் காட்டிப் பல வகைகளில் ஆறுதலளித்தார். நல்லவற்றை மெச்சினார்; தீயவற்றைக் கடிந்தார்; இதைச் செய்யுங்கள், அதைச் செய்யாதீர்கள் என்று ஒருவரையும் வற்புறுத்தினாரல்லர். ஒவ்வொருவரையும் அவரவர் புத்திக்கேற்ப சுதந்திரமாக நடந்துகொள்ள விட்டுவிட்டார். ஒரு குரு பரம்பரையை நிலைநாட்ட அவர் எத்தனிக்கவில்லை. ஆண்டவனின் ஆணைப்படி இயங்குவது இவ்வுலகம். அதை மாற்றியமைக்க வேறு யாராலும் முடியாது. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழவேண்டும். உயிர்க்குயிராயிருக்கும் இறைவன், எங்கள் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் சாட்சியாகவிருக்கின்றான். இதை நாம் மறந்துவிடக் கூடாது. பரம்பொருளானது, நாம் முன் அளவற்ற பிறவிகளில் செய்துகொண்ட வினைப்பயனை, வருமுறை நெறியே அளந்துதர நாம் நுகர்ந்து கொண்டிருக்கிறோம், அந்த வினைப்பயனை அனுபவிக்கும் போது, மேன்மேலும் தீவினையையே செய்து, மீண்டும் மீண்டும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்காவண்ணம், நம்மைப் பாதுகாத்துக்கொள்ள விழிப்பாயிருக்க வேண்டும். இந்தக் குறிக்கோள் நிறைவேறப் புலனடக்கம் இன்றியமையாதது. புலனடக்கம் என்னும்போது ஐம்புலன்களையுந் தொழிற்படவிடாது அடக்கிக்கொள்ளுதல் என்பது அர்த்தமல்ல. நிலையில்லாத உலகச் சிற்றின்பங்களில் இதுகாறும் நாட்டம் வைத்து அலைந்து திரிந்து, திருப்தியடையாது அல்லற்படும் அவற்றைத் திசைதிருப்பி, மேலான இறைபணியில் நிற்கப் பழக்குதலே புலனடக்கமாகும். இதற்கு வழிபாடு மிக முக்கியமானது.

இவையே யோக சுவாமிகளின் சித்தாந்தமெனலாம்.

ஒரு குருவானவர் தன்னை நாடிவந்தவர்களுக்குச் செய்யும் உபகாரம் தனது களங்கமற்ற தூய்மையான வாழ்க்கையின் முன்மாதிரியாலும், மெய்ஞ்ஞான உபதேச மொழிகளினாலும், தனது உள்ளத்து ஊறும் கருணையினாலும், அவர்களை ஆற்றுப்படுத்துதலேயாம். பக்குவம் கருதாது, கேட்டதெல்லாந்தரு கற்பகதருவென்று குருவை எண்ணுதல் மடமை.

சித்திக்கும் முத்திக்கும் குறுக்கு வழிகள் காட்டுதும் வாருங்கள் என்று கூவியழைப்பவர் போன்ற பலரை இன்றைய உலகில் காணலாம். இவர் தேவர், அவர் தேவரென்று பல தேவர்களின் பின்னே சென்று ஏமாந்து போகாது விழிப்பாக நாமிருத்தல் நன்மை பயக்கும்.

சுவாமிகள் நிலவுலகில் சஞ்சரித்த காலத்து, அவரைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பலர் தவறிவிட்டார்கள். அவர்களுள் யானும் ஒருவன் எனலாம். ஊழின் பெருவலியினாலோ, தவத்தின் குறைவினாலோ, சுவாமி காட்டிய வழியை நிதானமாகக் கடைப்பிடித்தொழுகத் தவறிவிட்டேன் என்பதை நான் நன்றாயுணருகிறேன். இதை நினைக்குந்தோறும், என்மனம் தீராக் கவலையில் ஆழ்கின்றது. மிக அருமையாகக் கிடைத்த சந்தாப்பத்தை நழுவவிட்ட என் தலைவிதியை நோகவேண்டியிருக்கிறது. நிலையில்லா இவ்வுலகப் போக போக்கியங்களை நிலையானவையெனக் கருதி, கானல் நீரைத்தேடி அலைபவன் போலப் பிறவியாகிய துன்பக் கடலில் இன்பத்தைத் தேடித் திரிந்த எனக்கு, நிலையான இன்பத்தைப் பெறும் மார்க்கம் இன்னதெனக் குறிப்பாகக் காட்டி, அதையடையும்படி அழையாது அழைக்க, என் புண்ணியக் குறைவினாலே அந்த அழைப்பைப் பராமுகமாக விடத் தூண்டிய எனது விதியையெண்ணி யெண்ணி வருந்தாதிருக்க முடியவில்லை. இருந்தும், ஒரு ஆறுதலுண்டு: என்னிலுள்ள குறைபாடுகள் எனக்கு இப்போ விளங்குகின்றன; அவற்றிலிருந்து விடுதலைபெறும் மார்க்கமும் ஓரளவு விளங்குகிறது; இவ்வளவும் கிடைத்ததே பெரும் பாக்கியம் அல்லவா? சுவாமிகளின் தூலவுடம்பு மறைந்தாலும், அவர் தன் மெய்யடியார்கள் நெஞ்சில் தோன்றாத் துணையாயிருந்து வழிப்படுத்திக் கொண்டிருப்பார் என்ற நம்பிக்கை விட்டு நீங்காது இருக்கும்பொழுது மனக்கவலைக்கு இடமில்லை. இந்த நம்பிக்கை உலக வாழ்வில் மனிதனின் உள்ளத்தில் சதா படியுந்தன்மையுள்ள அழுக்கை நீக்க வல்லது.

யோக சுவாமிகளைத் தங்கள் குருநாதன் என்று பலர் வாயோரியாகச் சொல்லிக் கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். பிறவிக் கடலிலே ஊறிக்கிடந்து


தத்தளிப்பவர்கள், அளவில்லா ஆசைகளினாற் கட்டுண்டு தவிப்பவர்கள், முற்றுந் துறந்த ஒரு துறவியை 'எங்கள் குருநாதன்' என்று கூசாமல் சொல்லிக் கொள்வது அபராதம் என்று என் மனம் எனக்குச் சொல்கிறது. சீடனுக்குரிய இலக்கணம் சிறிதுமில்லாத அற்பநான், சுவாமிகளை என் குருநாதன் என்று கூறிக்கொள்ளத் தயங்குகின்றேன்; பயப்படுகின்றேன். என்னுடைய தகுதியின்மை எனக்கே தெரியும். தகைமையற்ற சீடனைக் கொண்டு குருவை உலகம் கணித்தால் என்ன ஆகும்? ஆகவேதான், யோக சுவாமிகளை யான் வழிபடு தெய்வமாக எண்ணிக்கொள்வது. இந்த வழிபாடு வரும் ஒரு பிறப்பிலாயினும் ஒரு குருபரனுக்கு தகுதிவாய்ந்த சீடனாகி, இறைபணி நிற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டும்படி செய்யும் என்பது என் பூரண நம்பிக்கை. இந்த நம்பிக்கை என்னைவிட்டு வழுவாதிருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

"சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிமின்
நன்று தீதென்னும் நாட்டம் விடுமின்
அன்றும் இன்றும் என்றும் ஆன்மா
இருந்தபடியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன்முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்."

~ யோக சுவாமி

முற்றிற்று.

**யோக சுவாமி திருத்தாள் போற்றி!**



*Published By*
ASHTRALUXUMI
320, Sea Street, Colombo 11. Tel : 334004

*Printed by Gowriy Printers*